கல்கி



KALKI ஜூன் 17, 1956 4 அணா



டால்டா எனக்கு நல்லது
DALDA
டால்டா
பிராண்ட்
வனஸ்பதி
அது சமையல் செய்வதற்கு சிறந்ததாய் இருப்பதோடு போஷாக்கையும் தரும்!
HVM. 264-50 TM


மலர் 15
இதழ் 46

கல்கி
பொருளடக்கம்

துன்முகி ஆனி 4

ஜூன் 17, 1956

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



அமிருதசரஸ் காங்கிரஸ் மகாசபையின் தீர்மானத்துக்கும் நேருஜி, மந்திரி பந்த் முதலிய தேசத்தின் பெரும் தலைவர்களின் அபிப்பிராயத்துக்கும் நாம் மாறுபட்ட கருத்துக் கொண்டவர் என்று திரு காமராஜ் தைரியமாகச் சொல்லி விட்டார்.



மலர் 15 | இதழ் 46

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

துன்முகி ஆனி 4

அர்த்தமற்ற பிதற்றல்

திருவாளர் காமராஜ் வாய் திறந்து பேச ஆரம்பித்து விட்டார்!

இதுவரை தட்சிணப் பிரதேசம் சம்பந்தமாகத் தமது அபிப்பிராயத்தை மழுப்பிக் கொண்டிருந்தவர் சமீபத்தில் திருச்சி ஜில்லாவில் தட்சிணப் பிரதேசத்துக்குத் தம் உள்ளம் சம்மதப்படவில்லை என்று விளக்கி விட்டார். பெரிய ராஜ்யம் தமக்கு வேண்டாம், சிறிய ராஜ்யமே தமக்குப் போதும் என்றும், பெரிய ராஜ்யம் கோருகிறவர்கள் எல்லாரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் வசை மொழி வழங்கினர்.

அமிருதசரஸ் காங்கிரஸ் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் போக்கோடு சேர்த்து விட்டார்.

நேருஜி, உள்நாட்டு மந்திரி பந்த் முதலிய தேசத்தின் பெரும் தலைவர்கள் அபிப்பிராயத்துக்குத் தாம் மாறுபட்ட கருத்துக் கொண்டவர் என்று தைரியமாகச் சொல்லி விட்டார்.

காங்கிரஸ் தீர்மானத்துக்கும் காங்கிரஸ் காரியக் கமிட்டித் தலைவர்களின் அபிப்பிராயத்துக்கும் இசைய வேலை செய்பவர்களைக் காங்கிரஸின் எதிரிகள் என்று சொல்லி, 'ஜனங்களே உஷார்!' என்று எச்சரித்தார்.

தம்மை அதிகாரத்தினின்று அகற்ற இது ஒரு சூழ்ச்சி என்று விவாதித்தார்.

திரு காமராஜர் சில காலமாகத் திராவிடக் கழகத்தின் தலைவர் திரு ஈ. வே. ராவைக் கண்டு பயந்தவர் என்று பலர் சொல்லிக் கொண்டிருப்பதற்குக் காரணம் திரு ஈ. வே. ரா அவர்களின் பிரசங்கங்களும் நடவடிக்கைகளுமே.

கழகத்தாரின் கொள்கைகளுக்கு இசையக் காமராஜரின் ராஜ்ய பரிபாலனம் நடைபெறுகிறது என்று ஈ. வே. ரா அடிக்கடி சொல்லி வருகிறார்.

கொள்கையளவில் தி. க. வுக்கும் தி. மு. க. வுக்கும் ஒரு வித்தியாசமுமில்லை என்பதைக் காங்கிரஸ்காரர்கள் அனைவரும் அறிவார்கள்.

தட்சிணப் பிரதேசம் வேண்டும் என்று சொல்லுபவர்களுக்கும் தி. மு. க வுக்கும் என்ன பேதம் என்று காமராஜர் தமக்குத் தெரியவில்லைபோல் கேட்கிறார். தட்சிணப் பிரதேசம் கேட்பவர்கள் அகில இந்திய காங்கிரஸில் மிகச் சமீபத்தில் செய்த தீர்மானத்தை நிறைவேற்றவும், பாரத நாட்டின் நன்மைக்காகவும் கோருகிறார்கள். தி. மு. க. வும் திரு ஈ. வே. ரா வின் கூட்டத்தாரும் பாரத ராஜ்யத்தை விரோதித்துத் திராவிடம் வேறாகத் தனி ராஜ்யமாக வேண்டும் என்று கோருகிறார்கள். ஒன்று அமுதம்; மற்றொன்று விஷம். இவற்றின் வித்தியாசம் காமராஜருக்குத் தெரியாமல் போகவில்லை. திரு சுப்பிரமண்யம், திரு சேதுபதி இவர்களை முன்னேற்றக் கழகத்தாருக்குச் சமமாகச் சொல்லி விட்டது துணிவிலும் துணிவு.

மதுரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் ராஜாஜி, தி. மு. க வினர் கொள்கைகளிலுள்ள முரண்பாட்டை எடுத்துக் காட்டினார். தி. மு. க வினர் தட்சிணப் பிரதேசம் வேண்டும் என்று கருதுகிறார்கள். ஆனால் மத்திய சர்க்காரிலிருந்து விடுபட்டுத் தனி சுதந்திர சர்க்காராக இருக்க வேண்டுமென்கின்றனர். இது நடக்காத காரியம் என்று எடுத்துக் காட்டினார்.

தி. மு. க வினரின் தீர்மானத்தில் எவ்வளவுக்கு மெய்ப் பொருள் இருக்கிறதோ அவ்வளவிற்கு ராஜாஜி எடுத்துக் கொண்டார்.

தட்சிணப் பிரதேசத்துக்கு ஆதரவு வளர்வதைக் கண்டு காமராஜ் ஏன் அமைதி இழக்க வேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை.

ராஜ்யம் குறுகிப் போவதால் ஏற்படும் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் திரு சுப்பிரமண்யம் அவர்கள் சட்டசபையிலேயே மிகத் தெளிவாக விளக்கி யிருக்கிறார். சேதுபதி அவர்களும் குழப்பத்துக்கு இடமின்றித் தெளிவாக மதுரையில் பேசி யிருக்கிறார்.

"நாம் ஒற்றுமையாக இருந்தால் சின்ன ராஜ்யமே போதும்" என்று காமராஜ் சொல்லுகிறார். நம் பேரில் யாரும் படையெடுத்து வரவில்லை. பொருளாதாரப் பிரச்னையில் ஒற்றுமையைப் பற்றிப் பேசுவதில் பொருள் இல்லை. தம்முடைய இரு தோழ மந்திரிகளின் வாதத்துக்குப் பதில் சொல்லாமல் "உதவாக்கரைகள்" என்று சொல்லி முடித்து விட்டார். இது பண்பாடும் அல்ல; வாதத்துக்குச் சமாதானமும் அல்ல.

தமிழ் மொழிக்கு அநீதி

இலங்கையில் பல மாதங்களாகப் புகைந்து கொண்டிருந்த நெருப்பு சென்ற வாரம் கொழுந்து விட்டு எரியத் தொடங்கி யிருக்கிறது.

அந்த நாட்டில் வாழும் சுமார் இருபத்தைந்து லட்சம் தமிழர்களின் ஆதார உரிமையுடனும் தன்மதிப்புடனும் விளையாடுவது நெருப்புடன் விளையாடுவதற்கு ஒப்பாகும்.

இந்த உண்மையைச் சிங்கள சர்க்கார் உணர்ந்து கொள்ளாததே அங்கு சென்ற வாரம் நிகழ்ந்த பாதகமான ஆர்ப்பாட்டங்களுக்குக் காரணம்.

சிங்கள பாஷை ஒன்றையே இலங்கையின் ஆட்சி மொழியாக்கும் மசோதா சென்ற வாரம் இலங்கைப் பார்லிமெண்டில் விவாதத்துக்கு வந்தது.

அம் மசோதாவில் சிறுபான்மையோரான தமிழர்களுக்கு ஏற்கனவே ஒன்றிரண்டு சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தன.

பாஷை வெறி பிடித்த சில சிங்களவர்களின் கண்டனத்தைக் கண்டு மிரண்ட இலங்கை சர்க்கார், அந்தச் சலுகைகளையும் மசோதாவிலிருந்து அகற்றி விட்டார்கள்.

சிங்கள மந்திரிகளின் போக்கை எதிர்த்து இலங்கைப் பார்லிமெண்டு அங்கத்தினர்களான சில தமிழர்களும், மற்றும் சில தமிழ்ப் பிரமுகர்களும் பார்லிமெண்டுக்கு வெளியே சாத்விக சத்தியாக்கிரகம் செய்தனர்.

"சிங்களவர்கள் எங்களுடைய சகோதரர்கள். எங்கள் மொழி உரிமையைப் பறிக்கும் அரசியல் சட்டம்தான் எங்கள் விரோதி" என்று பொறிக்கப்பட்ட அட்டைகளைத் தாங்கி அவர்கள் சத்தியாக்கிரகம் செய்தனர்.

அவர்கள் அவ்விதம் தங்கள் கொள்கையைச் சந்தேகத்துக்கு இடமின்றி விளக்கியும் கூட, மொழி வெறி பிடித்தவர்கள் தாக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அதனால் இலங்கைத் தமிழர்களுக்குச் சொல்லொணாக் கஷ்டநஷ்டங்கள் ஏற்பட்டன.

அதாவது தமிழர்களுக்கு விரோதமாக வெகு காலமாக நடந்து வரும் துவேஷப் பிரசாரம் இப்பொழுது கொழுந்து விட்டெரிய ஆரம்பித்திருக்கிறது.

அவ் விஷயத்தில் இலங்கை சர்க்கார் இனியும் அலட்சியமாக இராமல், சிங்களவர்களைப் போல் தமிழர்களும் தங்களுடைய பிரஜைகள் என்பதை உணர்ந்து நீதி வழங்க வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

இலங்கை சர்க்கார் ஏற்கனவே எத்தனையோ சிக்கலான பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

அப்படி யிருக்க, பண்டாரநாயகா சர்க்கார் இதற்குள் அவசரப்பட்டு உள்நாட்டில் ஒற்றுமையைக் குலைத்து, அராஜகத்தைத் தூண்டும் சிங்கள ஆட்சி மொழி மசோதாவை ஏன் கொண்டு வந்தார்கள் என்பதுதான் தெரியவில்லை.

சர்க்காரின் மேற்படி முயற்சியை இலங்கையில் உள்ள தமிழர் ஸ்தாபனங்கள் வன்மையாகக் கண்டித்தும்கூட, சர்க்காருக்கு மன மாற்றம் ஏற்படாதது மிகவும் வருந்தத்தக்கது.

சிங்கள பாஷைக்குச் சமமான அந்தஸ்து தமிழ் மொழிக்கும் அளிக்கப்படும் என்று மாஜி இலங்கைப் பிரதமர்கள் வாக்கு அளித்து வந்திருக்கிறார்கள்.

அப்படி யிருக்க, மக்களின் ஜீவாதார உரிமையான மொழி விஷயத்தில் இருபத்தைந்து லட்சம் தமிழர்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தைப் புறக்கணிக்க முடியாது என்பதை இலங்கை சர்க்கார் அறிந்துகொள்ள வேண்டும்.

சர்க்கார் சிங்கள மொழி வெறியர்களின் தவறை எடுத்துக்காட்ட முற்பட வேண்டுமேயன்றி, அவர்களுடைய ஆர்ப்பாட்டத்தைச் சமாளிப்பதற்காகத் தமிழர்களுக்கு அநீதி இழைக்க முற்படுவதால் நிலைமை சீர்ப்பட்டு விடாது.

சிறு நாடுகள் கவனிக்க வேண்டிய முக்கிய தத்துவம் சிறுபான்மையோருக்கு நீதி வழங்குவது. ஸ்விட்ஜர்லாந்து போன்ற நாடுகளில் இரண்டு மூன்று பாஷைகள் கூட ஆட்சி மொழியாக இருக்கின்றன.

அப்படி யிருக்க, பல்லாண்டுகளாக இலங்கையைத் தாயகமாகக் கொண்டு வாழும் லட்சக்கணக்கான தமிழர்களின் தாய்மொழிக்கு, சிங்கள மொழிக்குச் சமமான அந்தஸ்து அளிக்க இலங்கை சர்க்கார் ஏன் தயங்க வேண்டும்!

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஒரே வழி, தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்தைத் தாமதமின்றி அளிப்பதுதான்.

இலங்கை சர்க்கார் தம் இனத்தாரின் மிரட்டலைக் கண்டு பயப்படாமல் நீதி சாஸ்திரப்படி நடந்து கொண்டு இலங்கைத் தீவின் பெருமையையும் க்ஷேமத்தையும் காப்பாற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

போட்டி வேண்டாம்!

ராணுவ மூஸ்திபுப் போட்டிகள் உலகத்துக்கு நன்மையல்ல; பாதகம் விளைவிக்கும் என்று தொடர்ச்சியாக உலகப் பெரியார்கள் அனைவரும் சொல்லியும் வற்புறுத்தியும் வந்திருக்கிறார்கள். அதுவே நம்முடைய அரசாங்கத்தின் பிறநாட்டுக் கொள்கையுமாகும். ராஜ்யாந்திர உலக மகாநாடுகளிலும் இந்தக் கொள்கையை இந்திய ராஜாங்கத்தின் பிரதிநிதிகள் அவ்வப்போது பேசி வந்திருக்கிறார்கள்.

தவிர ராஜாஜி எடுத்துக் காட்டியபடி எதிராளியை எதிர்பார்க்காமல் ஒருதலையாகவே நல்ல காரியத்தைச் செய்து காட்ட வேண்டும். இந்தக் கொள்கையை அணுகுண்டுகளைப் பற்றி அமெரிக்காவுக்கு ராஜாஜி உபதேசித்த பொழுது உலகத்தில் பல பெரியோர்களும் இந்த நாட்டினரும் உற்சாகமாக ஆமோதித்தார்கள். இந்தக் கொள்கையை அமெரிக்க அரசாங்கத்தார் தவறு என்று மறுக்கவில்லை. ஆனால் அதன்படி நடக்கத் தங்களுக்குத் தைரியமில்லை என்று வாதாடி வந்தனர்.

இந்த நிலையில் ருஷ்ய சர்க்காரின் இரு பெருந் தலைவர்கள் சென்னைக்கு வந்து திரும்பிப் போனார்கள். திரும்பிச் சென்று மாஸ்கோ சேர்ந்த பிறகு பல முக்கியமான அறிக்கைகள் ருஷ்யாவிலிருந்து வெளிப்பட்டிருக்கின்றன. அவற்றினுள் மிக முக்கியமான அறிக்கை, மேற்கு அரசாங்கங்களுடன் ஒப்பந்த நிபந்தனைகள் செய்து கொள்ளாமலேயே ஒரு தலையாகத் தங்களுடைய சேனா பலத்தைப் பெரிய அளவில் குறைத்துக் கொள்வதாக அறிக்கை வெளியிட்டார்கள். அறிக்கையோடு நிற்காமல் சொன்னபடி நிறைவேற்றியும் வருகிறார்கள்.

உபதேசத்துக்குத் தகுந்தபடி தாமே நடத்திக் காட்ட வேண்டும் என்பது காந்தி மகானுடைய முதல் கொள்கை. எந்தக் காலத்திலும் அந்தக் கொள்கையை அவர் புறக்கணித்ததில்லை. இதுவே வினோபா அடிகளின் கொள்கையும் முறையும். நம்முடைய அரசாங்கத்தார் ராணுவ மூஸ்திபுக்களில் பாகிஸ்தானுடன் போட்டி போடாமலிருப்பது ராஜசாஸ்திரமுமாகும்; நீதிசாஸ்திரமுமாகும்; தர்மமார்க்கமும் ஆகும்; தேச பிதாவுக்குச் செய்ய வேண்டிய உண்மை வழிபாடும் ஆகும்.

எந்த ராணுவ மூஸ்திபுப் போட்டி எந்த அளவுக்குச் செய்து கொண்டு போனாலும் இயந்திரங்களுக்கு வேண்டிய எண்ணெய்க்கும் பொறிகளைச் செலுத்துவதற்கு வேண்டிய பல தளவாடங்களுக்கும் வெள்ளைக்கார அரசாங்கத்தார்களையும் வியாபாரிகளையும் நம்பியே நடத்தி வருகிறோம். இரு பாலாருக்கும் வெள்ளைக்காரர்களுடைய உதவியே யுத்தத்தின் நடுவிலும் முடிவிலும் கதியாகும். இப்படி நடத்தும் போட்டி பொருளற்ற போட்டி என்று எடுத்துக்காட்ட வேண்டுமா! வெள்ளைக்காரர்கள் இஷ்டப்பட்ட போது "ஸ்விச் ஆப்" பண்ணக்கூடிய யுத்தத்தை நாம் நடத்தி என்ன லாபம் பெறுவோம்! இந்த ஒரு விஷயத்தை ஆழ்ந்து யோசித்தால் ராணுவப் போட்டியினால் ஒரு பயனுமில்லை; கௌரவமும் இல்லை; நல்ல பயன்படக்கூடிய பொருள்களின் வீண் விரயமே என்பது தெளிவாகும்.

நம் ராணுவ பலத்தைப் பாகிஸ்தானோடு போட்டியிட்டுப் பெருக்கவில்லை என்பதை உலகத்துக்குக் காட்டினோமானால் எந்த ராணுவ பலத்தினால் அடையும் பயனைக் காட்டிலும் சிறந்த பயனை அடைவோம். ஊராருக்கு நற்புத்தி சொல்லி, நாம் மட்டும் அதைச் செய்யப் பயப்படுவது பாரத நாட்டுக்கு மதிப்பு தராது.

ஒருதலை காரியத்துக்குத் தீரம் வேண்டும். ராஜாஜி சொன்ன யோசனையைச் சிலர் எதிர்த்து எழுதியிருக்கிறார்கள். ஏளனச் சித்திரம் வரைவதும் எளிது. சுதந்திரப் போரில் 'பதவிகளை விட்டு விடுங்கள்; சட்டசபைகளுக்குச் செல்லாதீர்கள்; கோர்ட்டுகளுக்குப் போகாதீர்கள்' என்று காந்திமகான் சொன்ன போது இவ்வாறே பலர் எதிர்த்தார்கள். பரிகாசமும் செய்தார்கள். ஆனால் இந்தியாவுக்குச் சுதந்திரம் சம்பாதித்தது அந்தத் தியாக இயக்கமே. தற்போது ராஜாஜி சொல்லும் யோசனையும் உலகத்துக்கு க்ஷேமமும் சாந்தமும் இந்தியாவுக்குச் சிறந்த மதிப்பும் தரக்கூடிய யோசனை. ருஷ்யாவின் நடவடிக்கைகளைக் கண்டாவது நாம் அறிவு அடைய வேண்டும்.

பாழும் சோதனை வேண்டாம்!

'உலகமும் உலக மக்களும் எக்கேடு கெட்டாலும் சரி, எங்கள் ராக்ஷஸ குண்டு சோதனைகளை நாங்கள் கைவிட மாட்டோம்' என்று வல்லரசுகள் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது! இன்னும் சில மாதங்களில் பிரிட்டன் பசிபிக் பிரதேசத்தில் ஹைட்ரஜன் குண்டைச் சோதனை செய்து பார்க்கத் தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. மேற்படி சோதனைகள் மானிட வர்க்கத்துக்குப் பெரும் தீங்காக முடியும் என்று விஞ்ஞான மேதாவிகளும் உலகில் உள்ள பேரறிஞர்களும் எச்சரிக்கை செய்து வருகின்றனர். முன்பு பசிபிக் மகா சமுத்திரத்தில் அமெரிக்கா செய்த அணுகுண்டு சோதனையால் ஜப்பான் மக்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை இதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது. அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு சோதனைகளால் மானிடவர்க்கத்துக்கு ஆபத்து ஏற்படும் என்று "மாஞ்செஸ்டர் கார்டியன்" போன்ற பிரிட்டிஷ் பத்திரிகைகள்கூட இப்போது எச்சரிக்கத் தொடங்கியிருக்கின்றன. ராக்ஷஸ குண்டு சோதனைகளை எதிர்த்து ஐக்கிய நாடுகள் சபையிலும் கண்டனம் எழுந்திருக்கிறது. சமீபத்தில் நடந்த மேற்படி சோதனைகளின் விளைவாக இந்தியாவில் காய்கறிகள்கூட அணுக்கதிர்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று கல்கத்தா சர்வகலாசாலை விஞ்ஞானிகள் கோஷ்டியினர் ஆராய்ச்சி மூலம் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவ்வாறு உலகமெல்லாம் கண்டித்தும், வல்லரசுகள் இன்னும் பாழும் சோதனைகளைக் கைவிடாமல் இருப்பது பேய்க்குணம் அல்லவா!

என்ன சேதி?

ஐஸன்ஹோவர் உடல்நிலை

அமெரிக்க ஜனதிபதி ஐஸன்ஹோவர் மறு தேர்தலுக்கு மும்முரமாகப் பிரசாரத் திட்டம் வகுத்துக் கொண்டிருக்கையில் மீண்டும் நோய்வாய்ப்பட்டு ரண சிகித்ஸைக்குள்ளாகி யிருப்பது வருந்தத்தக்கது. அவருக்குத்தான் வெற்றி நிச்சயம் என அரசியல் ஜோஸ்யர்கள் சொல்லிக் கொண்டிருந்தனர். இந்தத் திடீர் சம்பவத்தால் அமெரிக்க ஜனதிபதி தேர்தல் நிலவரம் மாறுதலடையலாம் என்றும் ஊகிக்கிறார்கள். அடுத்த மாதம் நமது பிரதமர் நேருஜியும் அமெரிக்க ஜனதிபதியும் சந்தித்துப் பேசுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்குள் ஐஸன்ஹோவர் குணமடைந்து விடுவார் என அவருடைய வைத்தியர்கள் கூறுகின்றார்கள். அவ்வாறே அவர் அபாய நிலையிலிருந்து தப்பித் திட்டப்படி பேச்சு வார்த்தை நடக்கவும், அதன் பலனாக அமெரிக்கா — இந்தியா நட்பு பலமடைவதுடன், உலகப் பிரச்னைகள் தீருவதற்கான சூழ்நிலை ஏற்படவும் ஆண்டவன் அருள் புரிய வேண்டும் என்றே எல்லோரும் பிரார்த்திப்பார்கள்.

தேர்தல் அதிசயம்!

நமது வாக்காளர்கள் தூங்கவில்லை, விழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கான அறிகுறி ரேணிகுண்டாவுக்கு அருகிலுள்ள கிருஷ்ணபுரம் என்னும் சிற்றூரிலிருந்து கிடைத்திருக்கிறது. அந்தக் கிராமப் பஞ்சாயத்து தேர்தலில் ஒரு வார்டு தவிர மற்றப் பகுதிகளில் போட்டியின்றித் தேர்தல் முடிந்து விட்டது. எஞ்சியுள்ள ஒரு வார்டில் மூன்று தொகுதிகளுக்கு ஐந்து பேர்கள் போட்டி யிட்டனர். அபேட்சகர்களே தங்களுக்குள் மூவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி வாக்காளர்கள் யோசனை கூறினர். இந்த நல் வார்த்தையைக் கேட்காமல் ஐவரும் போட்டி யிட்டனர். தேர்தல் தினத்தன்று வாக்காளர்களை அழைத்து வருவதற்கான முஸ்தீபுகள் பலமாக நடந்தன. ஆனால் ஒரு வாக்காளராவது ஓட்டுச்சாவடிகள் உள்ள திசையில் திரும்பினால்தானே! அபேட்சகர்கள் ஒருவர் முகத்தை மற்றவர் பார்க்கும்படியான நிலை ஏற்பட்டு விட்டது. தேர்தல் அதிகாரி திருவுளச் சீட்டுப் போட்டு மூவரைத் தேர்ந்தெடுக்க நேர்ந்தது. பஞ்சாயத்து அங்கத்தினர் பதவி பெறுவதற்காகப் பணத்தையும் காலத்தையும் செலவு செய்யும் பரிதாபத்துக்கு முற்றுப்புள்ளி வைத்த வாக்காளர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

அங்கும் இங்கும்


இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஒப்பிட்டு டாக்டர் கான்சாஹிப் சென்ற வாரம் பத்திரிகை நிருபர்களிடம் பேசியது மக்களின் ஆழ்ந்த கவனத்துக்குரியது. "இந்தியாவில் நேருஜி, ராஜாஜி போன்ற தலைவர்கள் அருமையான யோசனைகள் கூறுகின்றனர். ஆனால் அங்கு மக்கள் இவர்களைப் பற்றிக் குறை கூறிக் கொண்டிருக்கின்றனர். பாகிஸ்தானிலோ மக்கள் எவ்விதக் கஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டு போகின்றனர். ஆனால் அவர்களுடைய விசுவாசத்தை நல்ல முறையில் பயன்படுத்தக் கூடிய தன்னலமற்ற தலைவர்களில்லை. அரசியல்வாதிகள் பதவிப்பித்துப் பிடித்தவர்களாகவும், விருப்பு வெறுப்பு மிக்கவர்களாகவும் இருக்கின்றனர்" என்று டாக்டர் கான்சாகிப் கூறினர்.

சிறந்த தேசபக்தரும் அரசியல்வாதியுமான டாக்டர் கான்சாகிபின் வார்த்தைகள் இந்திய மக்களின் கருத்தில் பதியுமென நம்புகிறோம். தன்னலமற்ற தலைவர்களின்றிப் பாகிஸ்தான் மக்கள் தடுமாறி வருகையில், நேருஜி, ராஜாஜி போன்ற இணையற்ற தனிப்பெரும் தலைவர்களைப் பெறும் பாக்கியம் பெற்றுள்ள பாரத நாட்டு மக்கள் அத் தலைவர்களின் பொன் மொழிகளை உறுதியுடன் பின்பற்றிச் சீரும் சிறப்பும் செல்வமும் அடைய வேண்டியது அத்தியாவசியம் அல்லவா?

அபிவிருத்தி யோசனை

இந்தக் காலத்தில் ரயிலில் பிரயாணம் செய்வதைக் காட்டிலும் துன்பமான காரியம் வேறு ஏதாவது உண்டா என்றால், உண்டு என்றே பதில் கூறுவோம். அது பஸ்ஸில் பிரயாணம் செய்வது தான். பொதுவாக ரயிலிலும் பஸ்ஸிலும் பிரயாணம் செய்வதைப் போன்ற கஷ்டமான காரியம் உலகத்தில்வேறு இருக்கமுடியாது!


வரும் ஆண்டுகளில் ரயில்வேப் பிரயாணம் இன்னும் மோசமாகக் கூடும் என்றே எதிர்பார்க்கப் படுகிறது. தானியங்கள், சிமெண்டு, எஃகு போன்ற தேசத்தின் உயிர் நாடியான பொருள்கள் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்குக் கொண்டு போக வேண்டியது மிகமிக அவசியம். இதற்கு வாகன வசதிகளும் ரோடு வசதிகளும் வேண்டும். அடுத்த ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாவதற்கு இவையெல்லாம் இன்றியமையாத சாதனங்களாகும். ரயில்வேக்களில் கூட்ஸ் வண்டிகளின் போக்குவரத்தைப் பெருக்கவே அதிக கவனம் செய்ய வேண்டி யிருக்குமாதலால், பிரயாணிகள் வண்டிப் போக்குவரத்தில் உள்ள நெரிசல்களைக் குறைக்கப்



குதூகலத் திருமணம்

நானது ஜூன் மாதம் நான்காம் தேதி சென்னை நகரமே கல்யாண குதூகலத்தில் மிதந்தது. எல்லோரும் வாஸன் வீட்டுக் கல்யாண விமரிசையைப் பற்றியே பேசிப் பேசி அகமும் முகமும் மலர்ந்தனர். ஆனந்தவிகடன், ஜெமினி ஆகிய ஸ்தாபனங்களின் அதிபரான ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி எஸ். பாலசுப்ரமண்யனுக்கும், என்ஜினீர் ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் புதல்வி சௌ சரோஜாவுக்கும் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. பல்லாயிரக் கணக்கான அன்பர்களும் நண்பர்களும் புதுமணம் புரிந்த தம்பதிகளுக்கு மனமார ஆசிகளும் பரிசுகளும் வழங்கினர். பாரத நாட்டின் பல பாகங்களிலிருந்து ஆயிரக்கணக்கில் வாழ்த்துச் செய்திகளும் வந்து குவிந்தன. அவர்களுடன் நாமும் சேர்ந்து மணமக்களை மனமார வாழ்த்துகிறோம்.

வெள்ளையர் விஷ(ம)ம்!



அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் மேனாட்டவர்கள் ஏவிவிட்ட தவறான ஆரிய - திராவிடப் பிரிவினையைச் சொல்லி இன்று மக்களைப் பிரிக்கப் பார்ப்பது தவறு என்று ராஜாஜி கூறினார்.

போதிய கவனம் செலுத்த முடியாது. ஆகவே நமக்கிருப்பது ஒரே மார்க்கம் தான். அது பஸ் போக்கு வரத்துக்கு வேண்டிய ரோடுகளை விஸ்தரிப்பதில் கவனம் செலுத்துவதுதான். இதற்கான யோசனைகளையும் ராஜ்ய சர்க்கார்களுக்குள்ள பொறுப்புகளையும் பற்றிச் சமீபத்தில் இந்திய ரோடு போக்குவரத்து அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் ஸ்ரீ எம். வி. வெங்கடராமன் அவர்கள் மிக அரிய யோசனைகளை எடுத்துக் கூறியுள்ளார். அவர் பேசியிருப்பதைப் பாருங்கள் :—

சென்னை, ஆந்திரா, மைசூர், திருவாங்கூர் - கொச்சி ஆகிய ராஜ்யங்கள் ரோடு விஸ்தரிப்பைப் பெருக்குவதற்கு ஆதரவு அளிக்க முன்வந்தால் தனிப்பட்டவர்களிடமிருந்து இதற்குத் தேவையான முதலீடு கிடைக்கும்.

தென் பிராந்தியத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரயில்வேக்களின் விஸ்தரிப்பு போதிய அளவு கவனிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதற்குக் காரணம் கிழக்குப் பிராந்தியத்தில் தொழில் துறையில் (முக்கியமாக எஃகு உற்பத்தியில்) பெரும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது; ஏற்பட்டும் வருகிறது. அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திலும் அதற்கடுத்த திட்டங்களிலும் கிழக்குப் பிராந்தியத்தைப் போலவே இதரப் பிராந்தியங்களிலும், தென் பிராந்தியங்களிலும் பெரும் அளவில் தொழில் முன்னேற்றம் ஏற்படும். நெய்வேலி திட்டத்தாலும், சேலத்தில் ஏற்படப் போகும் அலுமினியத் தொழிற்சாலையாலும் தென்னிந்தியாவில் சர்க்கார் தொழிற்சாலைகளும் தனியார் தொழிற்சாலைகளும் அமோகமாகப் பெருகி வளரும். ஆகவே, தென்னிந்திய ரோடுகளைச் சீரமைக்கவும் விஸ்தரிக்கவும் வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ராஜ்ய சர்க்கார்கள் இதில் கவனம் செலுத்தி ஒரு கமிட்டியை அமைத்துத் திட்டம் வகுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமான எல்லா உதவிகளையும் நான் அவர்களுக்கு அளிக்கத் தயாராயிருக்கிறேன். சர்க்கார், பஸ் லாரி போக்குவரத்தில் உள்ள தடைகளை நீக்கி, தாராளமாகப் பர்மிட்டுகள் வழங்கி, வரிகளைக் குறைத்துப் பஸ் முதலாளிகளை ஊக்குவிக்க வேண்டும்.''



ஸ்ரீ எம். வி. வெங்கடராமன்

ஸ்ரீ வெங்கடராமனின் அரிய யோசனைகளைத் தென் பிராந்திய சர்க்கார்கள் ஏற்றுக் கொண்டு ஒரு திட்டம் வகுத்தால் தென்னிந்தியாவின் போக்குவரத்து சாதனங்களில் பெரும் முன்னேற்றம் காண முடியும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.



10. வேதனை ஏனோ?

சுரங்கப் பாதைக்குள்ளே கொஞ்சதூரம் நடந்து சென்றதும், எங்கிருந்தோ மனோகரமான வாசனை மிதந்து வந்தது. அந்த வாசனையின் சுகம் உடம்பினுள் ஒவ்வொரு அணுவையும் லயப்படுத்திற்று. அந்தமாதிரி ஒரு வாசனையை இதற்கு முன் சித்திராங்க பூபதி நுகர்ந்ததே யில்லை. தன்னை மறந்து ''ஆகா!'' என்றான், அத்தனை கலவரத்துக்கு மத்தியிலுங்கூட!


''என்ன பூபதி!'' என்று சுரங்கத்தின் இருட்டுக்குள்ளே சித்திராங்கனின் முதுகைத் தட்டிக் கொண்டே கேட்டான் விடுதித் தலைவன்.

''ஆகா! என்ன வாசனை! இந்தச் சுரங்கத்துக்குள்ளே எங்கிருந்து வருகிறது இத்தனை சுகமான வாசனை!'' என்று அதிசயத்தோடு கேட்டான் பூபதி.

"தம்பி! இங்கே இந்தப் பாதையின் வலது சாரியில் ஒரு சிறு வாசல் இருக்கிறது. அதன் வழியாகப் போனால் ஒரு சிறு சக்தி பீடம் இருக்கிறது. அங்கிருந்துதான் வருகிறது இந்த வாசனை!" என்றான் தலைவன்.

"இப்பொழுது நாம் அங்கேயா போகிறோம்!" என்று வியப்போடு பூபதி கேட்டான்.

"இல்லை! நாம் இப்பொழுது குங்கும மாளிகைக்கல்லவா போகிறோம்!" என்று தலைவன் பதில் சொல்லிக் கொண்டிருந்த போதே அவனுடைய வார்த்தைகளின் பின் பகுதி பூபதியின் செவிகளில் நன்றாகக் கேட்கவில்லை. எங்கோ தொலை தூரத்தில் கிணற்றுக்குள்ளேயிருந்து யாரோ பேசுவது போல் நலிந்து கேட்டது! அவ்வளவுதான். அடுத்த கணம் சித்திராங்க பூபதியின் சிந்தை கிறங்கிற்று. சுழல் சுழலாக வந்த புகையின் போதையிலே சித்திராங்கன் மயங்கினான். தன் நினைவு இழந்தான். மறு விநாடி அவனைக் கீழே விழுந்து விழாதபடி தலைவன் தன் கையினால் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.



மயங்கி விழுந்த சித்திராங்க பூபதிக்கு அதன் பிறகு நடந்த விஷயங்கள் ஒன்றுமே தெரியாது. அவன் திரும்பக் கண் விழித்துப் பார்த்த போது குங்கும மாளிகையிலே படிம விலாசம் என்ற தன்னுடைய அறையிலே இருந்தான். அகலமான ஒரு கட்டிலில் திண்டும் தலையணைகளுமாக இருந்த வசதியான ஒரு படுக்கையின் மேல் படுத்திருந்தான் அவன்.

'என்ன இது! சுரங்கப் பாதையிலே நடந்து வந்து கொண்டிருந்த நான் இங்கே எப்பொழுது வந்து சேர்ந்தேன்! இந்தக் கட்டிலில் எப்பொழுது படுத்தேன்! மறுபடியும் படிம விலாசத்துக்குள்ளே அடியெடுத்து வைத்ததே எனக்குத் தெரியாதே!'— இப்படி எண்ணிப் பார்த்தபோது பூபதிக்குத் திடீரென்று நினைவு வந்தது. தான் சுரங்கப் பாதையில் மனோலயமான ஒரு வாசனைப் புகையை நுகர்ந்து பார்த்ததும், அதைப் பற்றித் தலைவன் கூறிய விவரங்களும்!

சித்திராங்க பூபதிக்கு இப்பொழுது தெளிவாகத் தெரிந்தது. சுரங்கப் பாதையிலே மணம் வீசி வந்ததே வாசனைப் புகை, அதுதான் தன்னை அப்படி மயக்கி வீழ்த்தியிருக்க வேண்டும். அருமையான அந்த வாசனையிலே ஏதோ மயக்க மருந்து கலந்திருக்க வேண்டும்.

இப்படி நினைத்துக் கொண்டே சித்திராங்க பூபதி கட்டிலை விட்டு எழுந்து உட்கார்ந்தான். அப்பொழுது கைத்திண்டுக்குப் பக்கத்திலே ஓலைச் சுருள் ஒன்று வைக்கப்பட்டிருந்ததைக் கண்டான். திகைப்பும் ஆவலும் மேலிட்டவனாக அந்தச் சுருளைக் கையில் எடுத்துக் கொண்டே அறையிலே சுற்றுமுற்றும் பார்த்தான். யாரையும் காணோம். ஓலைச் சுருளைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான்.

வலம்புரித் தீவின் இளவரசருக்குமாமல்லபுரம் விடுதித் தலைவன் எழுதிய நிருபம்.

தாங்கள் இவ்வளவு பலவீனமான இதயம் உள்ளவர் என்று நான் கனவில் கூட எதிர்பார்க்கவில்லை. சுரங்கப் பாதையின் இருட்டு உங்களை இத்தனை தூரம் பயப்படுத்தி, மயக்கியே போட்டு விட்டதே! என்ன ஆச்சரியம்! நீங்கள் மயங்கிக் கீழே விழுந்து விடாதபடி மிகவும் கவனத்தோடு உங்களை ஏந்திப் பிடித்து

இப்பொழுது இந்தக் குங்கும மாளிகையிலே கொண்டு வந்து சேர்த்திருக்கிறோம்.

அவநம்பிக்கையும் கலவரமும் சேர்ந்து உங்களை இத்தனை தூரம் தளர்ச்சி அடையச்செய்திருக்கின்றன என்பதைப் புரிந்து கொண்டேன். ஆனாலும் கொஞ்சம் திடமாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நான் அவசர காரியமாக மாமல்லபுரம் செல்ல வேண்டிய திருப்பதால் இப்பொழுதே புறப்படுகிறேன். நேரில் இருந்து உங்களிடம் எல்லா விவரங்களையும் சொல்ல முடியாததற்கு மன்னிப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். குங்கும மாளிகையிலேயே தங்கியிருக்கும் நோக்கத்தை நீங்கள் இன்னும் கைவிட்டு விடவில்லை என்று நம்புகிறேன், எப்படியும் விரைவில் உங்களைப் 'படிம விலாசத்தில் சந்திக்கிறேன். அதற்குள் உங்களுடைய மன நிலை முழுதும் சரியாகி விடும் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. அன்பன்.



இந்த ஓலைச் சுருளைப் படித்ததும் சித்திராங்க பூபதிக்கு முதலில் ஆத்திரந்தான் வந்தது. அதிலும் அந்தக் கடைசி வாக்கியத்தைப் படித்ததும் கோபம் கோபமாக வந்தது.

'இந்தத் தலைவனுக்குத் தான் எத்தனை ஆணவம்? எத்தனை விஷமத்தனமாக இந்த ஓலைச் சுருளின் வாசகத்தை முடிக்கிறான்?'— என்று நினைத்தான் பூபதி.

'விரைவில் என்னுடைய மன நிலை முற்றும் சரியாகி விடுமாமே! என்ன மன அழுத்தம் அவனுக்கு!'

சித்திராங்க பூபதிக்கு உணர்ச்சியினால் உடம்பெல்லாம் ஆட்டம் கொடுத்தது. கடல் கடந்து என்னென்ன கனவுகள் எல்லாம் கண்டு கொண்டு வந்தான்! மாமல்லபுரத்தில் விடுதித் தலைவனோடு பேசி விட்டு, அவன் கொடுத்த அந்த வெள்ளைக் குதிரையிலே ஏறிப் புறப்பட்டபோது, பேரியாழே தன்னுடைய கையில் சிக்கி விட்டது போல் அல்லவா எண்ணினான்! இப்பொழுது என்னென்ன அதிர்ச்சிகள் எல்லாம் நேர்ந்து விட்டன! எங்கோ ஒரு காட்டுக்குள்ளே தன்னைக் கொண்டு போனார்கள். பிறகு விஷமத்தனமாகப் பொல்லாத சிரிப்பு சிரித்துக் கொண்டே அந்த விடுதித் தலைவன் சுரங்கப் பாதைக்குள்ளே தன்னை அழைத்து வந்தான்! பிறகு ஏதோ ஒரு விஷப் புகையை முன்னதாகவே அந்தப்பாதைக்குள்ளே சுழலும்படி ஏற்பாடு செய்து விட்டுத் தன்னை மயக்கம் போட்டு விழும்படி செய்து, இப்பொழுது மீண்டும் குங்கும மாளிகைக்குள்ளே அழைத்து வந்திருக்கிறான். மயக்கம் தெளிந்து எழுந்திருக்கும்போது, தான் எதிரே யிருந்தால் விபரீதம் நேரும் என்று எதிர்பார்த்து, இப்பொழுது இப்படி ஒரு நிருபத்தை எழுதி வைத்து விட்டு எங்கோ மறைந்து விட்டானே! இத்தனைக்கும் பிறகு விரைவில் தன்னுடைய மன நிலை முழுதும் சரியாகிவிடும் என்பதில் அவனுக்குச் சந்தேகமே இல்லையாமே! என்ன கயமை இது! எத்தனை வஞ்சகம் இதில் இருக்கிறது.

சித்திராங்க பூபதிக்கு இப்பொழுது படிமவிலாசத்தையே பார்க்கப் பிடிக்கவில்லை. இந்த மர்ம மாளிகையில் இன்னும் என்ன வெல்லாம் நடக்கப் போகிறதோ! தனக்கு யார் கதி! தன்னந் தனியாக இப்படி அந்நிய பூமியிலே வந்து மாட்டிக் கொண்டோமே! நாலு பேர் சேர்ந்து தன் மீது பாய்ந்து தன்னை ஒழித்துக் கட்டி விட்டால்கூட ஏன் என்று கேட்பதற்கு யாருமில்லை! வலம்புரித் தீவிலிருந்து அந்த ராஜ்யத்தின் இளவரசன் இங்கே வந்தான் என்ற விஷயம் யாருக்குத் தெரியும்? ஆதிரையன் தான் இந்தக் கொடும்பாளூர் அரச குடும்பத்தின் நாயகன். ஆனால் அவனுக்குங் கூடத் தான் யார் என்ற உண்மை தெரியாதே! காஞ்சிமா நகரின் கடிகை

யிலே சேர்ந்து படிக்க வந்த ஒரு மாணவன் என்றுதானே அவனும் தன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறான். இந்த நிலையில் விடுதித் தலைவனுடைய வேண்டுகோளுக்கு விரோதமாக, தான் அவனுக்குக் கொடுத்திருந்த உறுதிமொழியை மீறி, நேரே கொடும்பாளூர் அரண்மனைக்குப் போய் ஆதிரையனைச் சந்தித்து விட்டால் என்ன? அவனிடம் எல்லா விவரங்களையும் ஒளியாமல் கூறி விட்டால் என்ன?

இப்படி யோசித்துக் கொண்டே பூபதி அறையின் வாசல் பக்கம் திரும்பினான்.

குழப்பமான மன நிலையில் வாசல் பக்கம் பார்த்த சித்திராங்கனுக்கு ஒன்றுமே தோன்றாத அளவுக்குத் திகைப்பு ஏற்பட்டது. வாழ்வில் 'இது கனவா அல்லது நனவா' என்று சந்தேகப்படுகிற அளவுக்குச் சில சமயங்கள் ஆச்சரியம் உண்டாகும் அல்லவா? அப்படிப்பட்ட ஆச்சரியம் பூபதிக்கு ஏற்பட்டது. காரணம் படிம விலாசத்தின் வாசலுக்கு வெளியே நிசப்தமாக நின்று கொண்டு இவனையே நோக்கினார் சித்தர்!



சித்திராங்க பூபதிக்கு முதன் முதலாக ஏற்பட்டது திகைப்புத்தான்! ஆனால் அடுத்தகணமே திகைப்பையும் மீறிக் கொண்டு ஒரு சாந்தம் பிறந்தது! சாந்த உணர்ச்சிக்குக் காரணம் சித்தருடைய முகத் தோற்றத்தில் அவன் கண்ட எல்லையற்ற பரிவும் அமைதியுந்தான்.

'இருள் சூழ்ந்த இந்தப் பரந்த உலகில் திசை தெரியாமல் தடுமாறும் போது ஒரு கை விளக்குக் கிடைக்கிறது' என்று வலம்புரித் தீவில், கலங்கரை விளக்கத்துக்குக் கீழே வடமொழியில் ஒரு வாக்கியம் எழுதியிருந்ததாம். அந்த வாக்கியத்தைக் குறித்தும் அதன் பொருளைக் குறித்தும் தத்துவ ரீதியில் பண்டிதர்கள் விளக்கம் சொல்வதுண்டு. உண்மையில் கலங்கரை விளக்கத்துக்குக் கீழே கொண்டு போய், அப்படிப்பட்ட ஒரு வாக்கியத்தை எழுதியதற்குக் காரணம் என்ன என்பதைக் குறித்தும், ஞான தீபம் என்பதைக் குறித்தும், பல தடவை பல அறிஞர்கள் நுட்பமான முறையில் எடுத்துச் சொன்னதுண்டு. இப்பொழுது பூபதிக்குச் சித்தருடைய வரவு அப்படிப்பட்ட ஒரு பேராச்சரியமான நிம்மதியைக் கொடுத்தது.

பிரம்பின் ஓசையில்லை. காலில் தரித்திருந்த குமிழ்க் கட்டை 'டக்டக்' என்று சத்தம் உண்டாக்கவில்லை. இந்தவிசித்திர சித்தர் இந்த நேரத்தில் கொடும்பாளூருக்கு, அதிலும் அந்தக் குங்கும மாளிகைக்கு எப்படி வந்து சேர்ந்தார்? சித்திர சாலைச் சுவரிலே சாத்தி வைத்திருந்த அவருடைய பிரம்பு எங்கே போயிற்று?

சித்திராங்கனுக்கு மனத்தில் ஆச்சரியப் படுவதற்கு அதற்குமேல் சக்தியே இல்லை என்று சொல்ல வேண்டும். அவனையும் மீறிய பய பக்தியில் சித்திராங்கன் படிம விலாசத்தின் கட்டிலிலிருந்து எழுந்தான். பணிவும் அடக்கமும் நிரம்பியவனாய்ச் சித்தரை நோக்கி நடந்தான் அவன்.

"என்ன தம்பி! மயக்கமா? கிறக்கமா? அல்லது உறக்கமா?" என்று கேட்டுக் கொண்டே சிரித்தார் சித்தர். அந்தச் சிரிப்பில் ஓர் அசாதாரணமான ஒளி சிதறியது. இந்த அகில உலகத்தையுமே பார்த்து விழிக் கோணத்தினால் நகைக்கக் கூடிய எல்லையற்ற ஞானம் இப்பொழுது சிரிப்பின் ஒலியாக வெளி வந்து பூபதியின் சிந்தனைகளைச் சிதற அடித்தது! அவனுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால் அவன் அப்படிப் பதில் சொல்ல வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. ஏனென்றால் அவன்

பதில் சொல்வதற்கு முன்னலேயே சித்தர் மறுபடியும் தொடர்ந்து பேசினர்.

"என்ன ராஜகுமாரா! இப்படி இந்த அறைக்குள்ளே வந்து ஒடுங்கிப் போய் உட்கார்ந்து விட்டாய்? உனக்காக எத்தனை எத்தனை சம்பவங்கள் எல்லாம் காத்திருக்கின்றன! ஒன்றையும் லட்சியம் செய்யக் காணுமே நீ!" என்றார் சித்தர். இப்பொழுதும் அந்த வார்த்தைகளுக்கு மத்தியிலே அவருடைய முகத்தில் ஒரு புன்முறுவல் நெளிந்தது. ஆனல் அந்தப் புன்முறுவல் வெறும் புன்சிரிப்பாக இல்லை. அதனோடு ஒரு ஞானக் குறும்பு, காலங் கடந்த தத்துவத்தை உணர்ந்து அதை மறைத்துக் கொண்டு அதற்கும் மேலாக நின்று விளையாடுகிற ஒரு அற்புதப் பேரறிவோடு கூடிய பரிகாசம், அந்தப் புன்முறுவலிலே தவழ்ந்தது! பூபதி இப்பொழுது பேச ஆரம்பித்தான். மனத்தை யெல்லாம் மிகுந்த திடத்தோடு ஒருமுகப்படுத்திக் கொண்டு வார்த்தைகளைக் கையாண்டான்.

"ஐயா! என்னை ஆரம்பத்திலிருந்து குழப்பியடிக்கிறீர்கள்! என் சித்தம் ஒரு நிலையில் இல்லை. தயவு செய்து—"

"தம்பி! சித்தம் ஒரு நிலையில்

அரசப் பிரதானிகள், நகரப் பிரமுகர்கள், பெரிய பெரிய வித்துவான்கள்- எல்லாரும் வந்திருக்கிறார்கள். போ. எழுந்து போ தம்பி! பேரியாழின் ஒலியைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேள்! காதிலாவது அந்த யாழைச் சற்று வாங்கிக் கொள்! தனிமையில் இருக்கலாமா? தனிமை, ஏகாந்தம், மோன வெளி—இதெல்லாம் என்னைப் போன்ற பைத்தியங்களுக்கல்லவா? நான் தனிக் கட்டை! நீ அப்படியா!"

சித்தர் இந்த மாதிரிப் பேசிக் கொண்டிருக்கும் போதே, யாழின் ஒலியோடு சேர்ந்து மத்தளம் கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு பெண்ணின் இனிமையான குரல் ஒலித்தது.

"போ, தம்பி! யோசியாதே! தயங்காதே! தயங்கக்கூடிய காலம் வரும் போது யோசித்துக் கொள்ளலாம். அல்லது யோசிக்கக் கூடிய காலம் வரும்போது தயங்கிக் கொள்ளலாம். இப்பொழுது இரண்டுமே வேண்டியதில்லை!"

இப்படிச் சித்தர் சொல்லி விட்டுப் பூபதியின் அருகிலே வந்து அவனுடைய தோளைப் பிடித்து "ஹூம்" என்று குதிரைக்குச் சொட்டுக் கொடுக்கிற மாதிரி


எடுத்து அப்படியே அவசரமாக அணிந்து கொண்டான். உத்தரீயத்தை எடுத்து மேலே போட்டுக் கொண்டான். அதற்குமேல் ஏதும் பேசாமல் மௌனமாகக் கீழே படிக்கட்டுக்களில் இறங்கினன் பூபதி.

என்ன ஆச்சரியம்! பூபதி படிக்கட்டுக்களில் இறங்கிக் கொண்டிருக்கும் போதே, மேலே அவனை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார் பழைய பெரியவர். குங்கும மாளிகைக்குள்ளே அவனை அத்தனை உபசரணையோடு வரவேற்றாரே அதே கிழவர்! இந்த விநாடிவரை அவர் எங்குதான் போயிருந்தாரோ! இப்பொழுதுதான் எதிர்ப்பட்டிருக்கிறார்!

"தம்பி! உங்களை அழைத்துப் போகத்தான் வருகிறேன். நல்ல வேளை! நீங்களே இறங்கி வருகிறீர்கள்! இன்று இந்த மண்டலத்திலுள்ள எல்லாப் பிரமுகர்களும், பிரதானிகளும் வந்திருக்கிறார்கள். பெரிய அம்மாள் நைவளம் என்ற பண்ணிலே புதிதாக ஒரு கவனம் செய்திருக்கிறார்கள். அதை நங்கை வாசிக்கிறாள்! பேரியாழிலே வாசிக்கிறாள்! அதைக் கேட்பதற்கு என்றே இத்தனை பேரும் இன்று குங்கும மாளிகைக்கு வந்திருக்கிறார்கள். மாமல்லபுரத்து விடுதித் தலைவர் கூட இன்னும் சிறிது நேரத்தில் இங்கே வரக்கூடும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்!"

இப்படிச் சரமாரியாக வார்த்தைகளைக் கொட்டினார் பெரியவர். பூபதி ஒன்றும் பதிலே பேசாமல் சிரித்துக் கொண்டே அந்த வார்த்தைகளைக் கேட்டு விட்டு, படிக்கட்டில் கீழே இறங்கினன்.

குங்கும மாளிகையின் உள்ளே பெரிய கூடம். அது எழிலோடு கூடிய விசாலமான பெரிய இசைக் கூடம். ஏககாலத்தில் ஐந்நூறு மனிதர்கள் வரை தாராளமாக இருந்து ஒரு பெரிய சங்கீத விருந்தை அநுபவிக்கக் கூடிய விதத்தில் அமைந்திருந்தது அது! கூடத்தின் மத்தியிலே ஒரு நடுத்தர வயது அம்மாள் அமர்ந்திருந்தாள். அவளுக்கு அருகே அன்று



! இப்பொழுதுதான் இறங்குகிறான்.

மாடத்திலே சந்திரன் உதித்ததுபோல் நின்று மறைந்தாளே அந்த நங்கையும் அமர்ந்திருந்தாள். அவர்களுக்கு எதிரே ஏகப்பட்ட ஜனத் திரள் வரிசை வரிசையாகப் பட்டுத் தலைப் பாகையுடனும் பெரிய பெரிய பட்டு உத்தரீயங்களுடனும் அமர்ந்திருக்கக் கண்டான் பூபதி.

அந்த ஜனத்திரளைக் கண்டதும் சித்திராங்க பூபதிக்கு முதலில் ஒரு விவரிக்க முடியாத வெட்கம் உண்டாயிற்று. இனந்தெரியாத ஓர் அன்னிய இடத்தில், இனந்தெரியாத மக்களின் மத்தியிலே, இனந்தெரியாத ஏதோ ஒரு கடல் கடந்த பிரதேசத்து மனிதன்! தான் போய் எப்படிக் கூச்சமில்லாமல் அந்தச் சபையில் உட்காருவது!

இப்படி நினைத்தான் பூபதி. ஆனால் இந்த எண்ணம் ஒரு விநாடிதான் அவனுடைய மனத்தில் துவண்டது. அடுத்த கணம் தயங்காமல் அவனை உள்ளே நடந்து செல்லும்படியாக இரண்டு சக்திகள் ஈர்த்து இழுத்தன. ஒன்று, தான் அதுவரை கனவிலும் நினைவிலும் எண்ணி எண்ணி ஏங்கிக்கொண்டிருந்த அந்தப் பேரியாழின் ஒலி. மற்றொன்று அந்த யாழைத் தனது மேனியிலே சாத்திக் கொண்டு அற்புதமான ஒயிலோடு வீணையின் நரம்புகளிலே தன்னுடைய செங்காந்தள் மெல் விரல்களை ஓட விடு



இருளே அந்த நங்கையின் அதி ரூப சௌந்தரியம்! இரண்டும் ஒன்றையொன்று போட்டிபோட்டுக்கொண்டு பூபதியை இசைக் கூடத்துக்குள்ளே நடந்து செல்லும்படி செய்தன.

பூபதி இசைக் கூடத்துக்குள்ளே அடியெடுத்து வைத்த மறுகணமே ஒரு பணியாளன் ஓடோடியும் வந்து, அவனை எதிர்கொண்டு அழைத்து, அந்தச் சபையில் கம்பீரமாக நின்ற ஆஸனத்திலே அமர்த்தினன்.

முழவு 'கும் கும்' என்று குங்காரம் கொடுத்தது. பேரியாழ் அபாரமான இனிமையோடும் கம்பீரத்தோடும் எழுந்து பேசியது. அந்த இன்னொலியோடு இழைந்துகொண்டே, நங்கையின் குரல் யாழா அல்லது குரலா என்று வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாத முறையில், இழைந்து பின்னியது.

பூபதி செவியினால் இசையைக் கேட்டான். அவனுடைய கண்களோ அந்த இளம் நங்கையின் எழிலைக் கண்டு மறுகின. சூரியன் உக்கிரமாகக் காய்ந்து கொண்டிருந்த கொடுமையான பகல் நேரத்திலும் கூடச் சந்திரனுடைய தண்மையை வாரிப் பொழிந்த மதிமுகம் அல்லவா அது! இப்பொழுது சந்திரனையே பல அம்சங்களாகப் பிரித்து எடுத்து வந்து அங்கங்கே அகல் விளக்குகளாகவும், தகளிகைத் தீபங்களாகவும், மணி ஜோதிகளாகவும் நிறுத்தியது போல, அழகழகாகக் குளுமையான பிரகாசத்தோடு சுடர் விட்டுக் கொண்டிருக்கும் தீப ஜோதிகளுக்கு மத்தியிலே அந்தச் சந்திரவதனம் எப்படியிருக்கும்! குளுமையும் குளுமையும் இணைந்து, நிலவோடு நிலவு கலந்து, அமுதமும் அமுதமும் சேர்ந்து, இரட்டிப்பாக இன்ப சோபையைப் பொழிந்தன. அந்த இன்பத்தை இன்னும் பல மடங்கு அதிகப் படுத்துவது போல் யாழிலிருந்து பிறந்த அமுத இசை அந்த முகத்திலே இதயத்தின் பிரதிபலிப்பாகத் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது! பூபதி அப்படியே மெய்ம்மறந்து அந்த இசையைக் கேட்டுக் கொண்டே நங்கையின் முக பாவங்களை இன்னும் சற்றுக் கூர்மையாகக் கவனிக்க ஆரம்பித்தான்.

சித்திராங்க பூபதிக்கு இயல்பிலேயே சங்கீதத்தில் ஆர்வம் உண்டு. அந்த ஆர்வத்தை அவன் பரம்பரைச் செல்வமாகவே அடைந்திருந்தான். பூபதியின் தாயைப் பெற்ற பாட்டனர் இரவு நேரங்களில் வலம்புரி அம்மனின் கோவிலிலேயே யாழ் வாசிக்கும் பாணர்களுக்குப் பக்க வாத்தியமாக முழவு வாசிப்பாராம். அந்த முழவின் ஒலியில் சில சமயம் கடல் அலைகளும் கூட மயங்கிப் போய் அசைவற்று நிற்குமாம்! இதை யெல்லாம் பூபதியின் அன்னை அடிக்கடி சொல்லியிருக்கிருள். இது காரணமாகப் பூபதிக்கு அவனுடைய சங்கீத ஆர்வம், உடலோடு ஒட்டியே வலுப்பெற்றிருந்தது. இப்பொழுதோ அதன் உக்கிரத்தைச் சொல்லவே வேண்டாம்! கூர்ந்து ஐம்புலன்களும் செவிகளிலே ஒடுங்கியவனாக, அந்த யாழைக் கேட்டுக் கொண்டே வந்த பூபதி திடீரென்று அந்த நங்கையின் முகத்தை நன்ருக விளக்கின் வெளிச்சத்தில் கூர்ந்து பார்த்தான்! அப்படியே ஒரு கணம் இரத்தம் எல்லாம் அவனுக்குப் பனிக்கட்டியாக உறைந்தது! மீண்டும் மீண்டும் இமைகளைக் கொட்டிக் கொட்டி விழித்தான்! ஆம்! சந்தேகமில்லை! ஏதோ ஒரு வேதனையை அந்த நங்கை மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்ள முயற்சிக்கிருள். ஆனல் முடியவில்லை. யாழை வாசித்துக் கொண்டிருக்கும் போதே அவளையும் மீறி அந்த மன வேதனை எவ்வி எழுந்து அவளுடைய முகத்திலே படர்கிறது. அவள் அதைக் காட்டிக் கொள்ளாமல் சமாளிக்க முயல்கிருள்.

பூபதி அந்த முகத்தின் வேதனையைக் கவனித்தான். அவனையும் அது தாக்கியது. இத்தனை அழகியான நங்கைக்கு, இத்தனை லாகவத்தோடு அந்த யாழை எடுத்து அமுதம் பொழிகிற அந்த சங்கீத சரஸ்வதிக்கு அத்தனை வன்மையாக மனத்தைத் துன்பப் படுத்துகிற கொடிய வேதனை என்ன? எக்காரணம் பற்றி இத்தனை துயர ரேகைகள் அவளுடைய முகத்திலே படர்கின்றன?

சித்திராங்கனுடைய சிந்தனை வேகமாக ஓடியது. (தொடரும்)


கி.ரா. கோபாலன்
எழுதும்
அபலை அஞ்சுகம்
சமூகத் தொடர்கதை
ஜூலை 8உ
கல்கி
இதழில்
ஆரம்பமாகிறது



ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

31

உபவாசத்தைப் பற்றி காந்திஜியின் கருத்து, என்னவென்பதை நன்ருகப் புரிந்து கொள்ள வேண்டும். அவர் எழுதியிருப்பதாவது :

உள்ளத் தூய்மையோடு அனுசரிக்கப்பட்ட உபவாச விரதம்—உடல், மனம், ஆன்மா மூன்றையும் சுத்தமாக்கும். உபவாசமானது ஊனை வருத்தி ஆன்மாவுக்கு அந்த அளவுக்கு விடுதலை தரும். உள்ளத்தைச் செலுத்திச் செய்யப்பட்ட பிரார்த்தனையில் அற்புத பயன்களைக் காணலாம். மாசு நீங்கி சுத்த நிலை அடைவதற்கு உள்ளம் ஆசைப்படுவதே பிரார்த்தனை. அடக்க முடியாத ஆசையாக இருக்க வேண்டும். உள்ளத்தில் சுத்தம் ஏற்பட்டு அது ஒரு மேன்மையான காரியத்துக்காகப் பயன்பட்டால் அது ஒரு பெரிய வேள்வியாகும். நோயில் வருந்தும் ஒருவனுக்கு ஆரோக்கியம் உண்டாவதற்காக காயத்ரீ ஜபம் செய்யலாம். நாடும் மக்கள் சமூகமும் பெரும் கஷ்டங்களில் சிக்கி வருந்தும் போது, அடக்கத்துடனும் ஒருப்பட்ட மனத்துடனும் காயத்ரீ ஜபம் செய்தால் அபாயங்களினின்றும் விபத்துக்களினின்றும் தப்பலாம். காயத்ரீ ஜபம் செய்வதும் இஸ்லாமியர்கள் 'நாமாஸ்' செய்து தொழுவதும், கிறிஸ்தவர்கள் ஜபம் செய்வதும் மூட நம்பிக்கை, அவை பாமரர்களுக்குத்தான் தகுந்தவை என்று எண்ணுவது பெருந்தவறு. உபவாசமும் ஜபமும் உள்ளத் தூய்மை யடைவதற்குப் பெரும் சாதனங்கள். கடமைகளைச் சரிவரச் செய்வதற்கு அவற்றின் வழி யடைந்த உள்ளத் தூய்மை மிகவும் பயன்படும். கடமைகளைச் செய்து நமது குறிக்கோளை யடையலாம். சில சமயம் விரதமும் ஜபமும் பயன் தராமல் போகலாம். அதற்குக் காரணம் நாம் அதைத் தூய முறையில் கையாளவில்லை என்பதே.

கிருஷ்ண ஜயந்தி யன்று அநேகம் பேர்கள் பகலில் உண்ணுமல் இருக்கிறார்கள். ஆனால் நான் முழுதும் சீட்டாடுவார்கள். பணம் வைத்து ஆடுவார்கள். இத்தகைய உபவாசத்தால் உள்ளத் தூய்மை அடைய முடியுமா ? முந்திய நிலையை விடத் தாழ்ச்சியைத்தான் அடைவார்கள். உபவாசம் இருக்கும்பொழுது உள்ளத்தைத் தாக்கும் கெட்ட எண்ணங்களைத் தடுத்துக் கொள்ள வேண்டும். நல்ல கருத்துக்களுக்கும் சங்கற்பங்களுக்கும் மனத்தைத் திறந்து வைக்க வேண்டும். ஒரு வேண்டுதல் வேண்டிக் கொண்டால் அது நல்ல வேண்டுதலாக இருக்க வேண்டும். அந்தப் பிரார்த்தனையில் உள்ளத்தைச் செலுத்தி அதனுடன் ஒன்றித்துப் போக வேண்டும். ஜபமாலையைக் கையில் வைத்துக் கொண்டு விரல்களினல் மணிகளைத் தள்ளி நாக்கில் ஆண்டவன் பெயரைச் சொல்லி உள்ளம் இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தால் பயன் இராது.

[யங் இந்தியா 24—3—20]

சில உபவாசங்கள் பலாத்காரமே யாகும். சுயநலத்துக்காக மேற்கொள்ளும் உபவாசங்கள் இத்தகையவே யாகும். ஒருவனிடமிருந்து பண உதவி அடைவதற்காக உண்ணு விரதம் இருப்பது பலாத்காரமாகும். எந்த விதமான லாபத்தை ஒருவன் தனக்கென்று அடைவதற்காக எடுத்துக் கொள்ளப்படும் உபவாச விரதங்கள் எல்லாம் இதைப் போலவே யாகும். பலாத்காரம் செய்வதற்கும் அதற்கும் ஒன்றும் பேதமில்லை. அத்தகைய பலாத்காரத்துக்கு இசையாமல் தடுப்பதே நியாயம். இதைப் பற்றி எனக்குச் சந்தேகமே கிடையாது. அநேகம் பேர் என்னைப் பயமுறுத்தவே உபவாச விரதங்கள் ஆரம்பித்ததுண்டு. நான் அவற்றைப் பொருட்படுத்தாமல் தடுத்து வந்திருக்கிறேன். எது சுய நன்மைக்காகச் செய்யப்படும் உபவாசம், எது நல்ல நோக்கத்துடன்

மேற்கொள்ளப்படும் உபவாசமென்று நிச்சயப்படுத்துவது சிலசமயம் கஷ்டமாக இருக்கும். ஆயினும் நான் சொல்லுவேன், ஒரு விரதம் சுயநலத்தைக் கருதி எடுத்துக் கொள்ளப்பட்டது அல்லது வேறு விதத்தில் தவறானது என்று நாம் கருதினால் அந்த உபவாசத்தை எதிர்த்துவிட வேண்டும். அதற்குப் பயந்து அடங்கலாகாது. அந்த உபவாசக்காரன் கோரும் கோரிக்கைக்கு ஒப்பக் கூடாது. உபவாசக்காரன் இறந்து போனாலும் பொருட்படுத்தலாகாது. தவறான கருத்தைக் கொண்டு செய்யப்படும் உபவாசங்களை மக்கள் பொருட்படுத்தாமல் விட்டு விட்டால் அந்த விதமான சேஷ்டைகள் நின்று போகும்.

மானிட வழக்கங்களும் ஸ்தாபனங்களும் நன்மை தீமை இரண்டுக்கும் உதவும். தீமையைக் கண்டு பயந்து சத்தியாக்கிரக சாதனங்களில் ஒரு பெரும் சாதனமாகிய உபவாச விரதத்தை விட்டு விடுவதற்கில்லை. பலாத்காரம் செய்து ஒரு பயனை அடைவதற்குப் பதில் சத்தியாக்கிரகம் என்கிற அஹிம்சை முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் புது சாதனத்திற்கு இன்னும் பரிபூரண வடிவம் நாம் தரவில்லை. பலவிதத்தில் சோதனையும் முயற்சியும் செய்த பிறகுதான் அது பூரண வடிவம் பெறும். என்னுடைய நவீன சத்தியாக்கிரக முறையை இந்தச் சந்தேகத்தின் காரணமாக நான் விட்டுவிட முடியாது. மனத் தூய்மையுடன் யோக்கியமான முறையில் அதை நான் அனுசரித்துக் கொண்டுதான் போக வேண்டும். பிழைகளைக் கண்டு பயந்துபோய் விட்டு விடுவதற்கில்லை.

[ஹரிஜன் 9—9—33]

பனித்துளி

"உற்சவத்தின் போது நடைபெற்ற வாண வேடிக்கையில் ஒரு வாணம் தீயோடு சென்று சின்ன சேலம் பள்ளிக் கூடத்தின் கூரைமீது விழுந்து பள்ளிக் கட்டடம் தீக்கிரையாயிற்று. எல்லோரும் பெரிதும் கவலைக் குள்ளாகி யிருக்கின்றனர்." — செய்தி

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் மட்டும் பெரிதும் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள் என்று நம்புகிறோம்.

★

"சென்னை ராஜ்யத்தில் நடைபெற்ற இவ் வருஷ எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் நூற்றுக்கு நாற்பத்தெட்டுப் பேரே பாஸ் செய்திருக்கிறார்கள்." — செய்தி

நூற்றுக்கு நாற்பத்தெட்டு என்பது 'பாஸ்' மார்க்கல்லவா? ஆகவே கல்வித் துறையில் சென்னை ராஜ்யம் பாஸ் செய்து விட்டது!

★

"கொத்தவால் பஜாரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஜன நடமாட்டம் அதிகமாயிருப்பதால் இடநெரிசல் ஏற்பட்டிருப்பதை இன்று 'போலீஸ் கமிஷனரும் டெபுடி கமிஷனரும் இன்னும் பல போலீஸ் அதிகாரிகளும் நேரில் சென்று பார்வை யிட்டார்கள்." — செய்தி

போலீஸ் அதிகாரிகளின் கூட்டமும் சேர்ந்து கொத்தவால் பஜாரில் இடநெரிசல் இன்னும் அதிகமாகி யிருக்கலாம்!

"இப்போது வழங்கப்படும் அரிசியில் போதிய சத்தோ ருசியோ இல்லை. ரொம்ப மட்டமா யிருக்கிறது." — தலைப்பு

இப்போதைய அரசியலும் இந்த லட்சணத்தில்தான் இருக்கிறது!

★

"நீண்ட தாடியுள்ள நீலகிரி காட்டு வெள்ளாடு ஒன்று சென்னை மிருகக் காட்சி சாலைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது." —செய்தி

'அந்தக் காட்டு வெள்ளாட்டைக் காட்டு' என்று இனி குழந்தைகள் தங்கள் பெற்றோர்களைத் தொந்தரவு செய்யலாம்.

★


"சென்னையிலிருந்து ஏற்றுமதியாகும் லுங்கிகளை நலுங்காமல் அணிந்து கொள்ள அமெரிக்கர்கள் ஆசைப்படுகிறார்கள்." —செய்தி



லுங்கி 'நலுங்கி'னால் அழகு கெட்டு விடும் அல்லவா?


NESPRAY
NESTLE'S
FULL CREAM
POWDERED MILK
NET WEIGHT 1 LB (454 GRM)
PREPARED IN AUSTRALIA
Export Label
1. ஜலத்தை அளந்துகொள்ளவும்
2. நெஸ்ப்ரே சேர்த்து, வேகமாக கலக்கவும்
3. உபயோகத்திற்கு தயார்
நெஸ்ப்ரே
தயாரிப்பதில்
80 வருஷ
அனுபவம்
மிக நேர்த்தியான பால் உங்களுக்கு
பத்திரமான சிக்கனமான பால்
கிடைக்க விசேஷமாக பவுடராக்கப்பட்டது.
நெஸ்ப்ரே
சொன்னால் போதும்
நெஸில்ஸின் உயர்தர
சரக்குகளில் இன்னொன்று
NS/C/58


லக்ஷக்கணக்கானவர்கள் விரும்புவது
லில்லி
மால்டோ
பிஸ்கட்டுகள்
MALTO
இனிமையானது
போஷாக்களிப்பது
குழந்தைகளுக்கு
மகிழ்ச்சியூட்டுவது
LILY BISCUIT CO. PRIVATE LTD. CALCUTTA-4


தசை
வலியா?
நோபெயின்
வலியை வேகமாக
நிவர்த்திக்கிறது
சுகாதாரமான சீலவைத்த
டியூப்புகளில்
NOPAIN
ஒரு கல்கத்தா கெமிகல் தயாரிப்பு
தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை-1



ஜவஹர் ஆறுமுகம்

சாவி

ஆறுமுகம் ஆறு மூட்டை நெல்லுடன் களத்துமேட்டிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்தபோது அவனுக்காக வீட்டில் ஒரு கடிதம் காத்திருந்தது. 'அது ஒரு சர்க்கார் கடிதம்' என்பது அதன் நெற்றியில் எழுதி ஒட்டியிருந்தது. அவன் அந்த நீளமான பழுப்பு நிறக் கவரைப் பிரித்து உள்ளேயிருந்த கடிதத்தைப் பார்த்தான். ஜில்லா கலெக்டர் கையொப்பமிட்டு அனுப்பியிருந்த அந்தக் கடிதத்தில் கண்ட விஷயம் வருமாறு:

ஆறுமுகம், நிம்மன்மேடு, பவானி
தாலுக்கா.

தங்களுக்குச் சொந்தமான......சர்வே நெம்பர் நிலத்தில் மூன்று செண்டு நிலத்தைச் சர்க்கார் நாளது ஜூலை மாதக் கடைசிக்குள் ஆர்ஜிதம் செய்து கொள்ளும். இந்த மூன்று செண்டு நிலம் மின்சாரக் கம்பங்கள் நடுவதற்காகச் சர்க்காருக்குத் தேவைப்படுகிறது. ஆர்ஜிதம் செய்யும் மூன்று செண்டுக்கு உரிய நியாயமான விலையைத் தங்களுக்குத் தாலூகா கஜானாவில் கொடுக்க தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது.

(கையொப்பம்) ஜில்லா கலெக்டர்

ஆறுமுகத்துக்குத் நிம்மன்மேட்டிலிருந்த சொத்தெல்லாம் ஒரு அரைக்காணி நிலம்தான். அதுவும் இத்தனை காலமாகத் தண்ணீர் பாய முடியாத ஒரு மேட்டு நிலம். ஊன்று வெட்ட இயலாத பாறைப் பாங்கான இடம். பாசன வசதி இல்லாமல் வெகு காலம் வரை தரிசாகவே கிடந்தது. அவ்வப்போது வானம் பெய்க்கும் சமயங்களில் மட்டும் வேர்க்கடலை, கம்பு, கேழ்வரகு முதலிய புன்செய்ப் பயிர்களை உற்பத்தி செய்து அவற்றைக் கொண்டு காலட்சேபம் செய்து வந்தான்.

அதிர்ஷ்டவசமாக, கீழ் பவானி சாகரம் அணைக்கட்டு வேலை முடிந்ததும் நிம்மன்மேட்டுக்கும் பாசன வசதி கிட்டியது. ஆறுமுகத்தின் மகிழ்ச்சி அளவு கடந்ததாயிற்று. தன் நிலத்தில் அவன் நன்செய் விதைத்தான். முதல் சாகுபடியில் அவனுக்கு ஆறு மூட்டை சம்பா நெல் கிடைத்தது. அந்தப் பொற்குவியலைப் பெருமிதத்துடன் வீட்டிலே கொண்டு வந்து கொட்டிய போதுதான் அவனுக்கு மேற்கண்ட கடிதம் வந்தது.

அந்த அரைக்காணி நிலம் அவன் வாழ்க்கைக்கே போதாது. அதிலும் மூன்று செண்டைச் சர்க்கார் பலாத்கார ஆர்ஜிதம் செய்வதென்றால் ஆறுமுகத்துக்கு எப்படியிருக்கும்!

* * *

"வள்ளி!" என்று அன்போடு தன் மனைவியை அழைத்தான் ஆறுமுகம்.

"ஏன்!" என்று எதிரில் வந்து நின்றாள் வள்ளி.

"இந்தப் புது நெல்லில் ஒரு மரக்கால் எடுத்து அவல் இடித்துக் கொடு", என்றான்.

"எதுக்கு!"

"வடக்கே போகிறேன்."

"ஓகோ! வடமலையானுக்கு காணிக்கை செலுத்தவா!"

"இல்லை: இன்னொரு கண்கண்ட தெய்வத்துக்கு. அவர் இன்றும் வடக்கே இருக்கிறார்."

"அது யாரு!"

"ஜவாஹர்லால் நேரு!"

"உங்களுக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு! ஜவாஹர்லால் நேருவைப் பார்க்கிறாராம். அவர் அந்தஸ்து என்ன! அவர் உங்களைப் பார்க்கிறதாவது!"

"ஏன் பார்க்க முடியாது! அவரை எனக்குத் தெரியும்; எனக்கு ரொம்ப வேண்டியவர்கூட. போய்ப் பார்த்து விட்டு வருகிறேனா இல்லையா பார். அவர் புண்ணியத்தில்தானே நம்முடைய நிலம் விளைஞ்சது. அந்தப் புண்ணியவான் திட்டம் போட்டு அணைக்கட்டு கட்டவில்லையென்றால் நம் நிலம் தரிசாகத்தானே கிடக்கும்! ஆகையால் நம் நிலத்தில் முதன் முதலாக விளைந்த நெல்லில் அவல் செய்து கொண்டு போய்க் கொடுக்கப் போகிறேன்!" என்று பிடிவாதமாகச் சொன்னான் ஆறுமுகம். வள்ளிக்கு ஆறுமுகத்தின் போக்கு விநோதமாயிருந்தது. 'ஒரு மாதிரி காங்கிரஸ் கிறுக்கு' என்று எண்ணிக்கொண்டு அவல் இடித்துக் கொடுத்தாள்.

மனைவி இடித்துக் கொடுத்த அவலுடன் குசேலர் கிருஷ்ண பரமாத்மாவைப் பார்க்கச் சென்றது போல் டில்லி நோக்கிப் பயணமானான் ஆறுமுகம். அவன் டில்லியில் ரயிலை விட்டு இறங்கியதும் ராஜபவனத்தைத் தேடிச்

சென்றான். ராஜபவனத்துக்குப் போனால் அங்கே ஜனாதிபதி ராஜன் பாபு இருப்பார் என்றும் அவரிடம் ஜவஹரின் வீட்டு விலாசத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்றும் எண்ணினான். ராஜபவனம் கிருஷ்ண பரமாத்மாவின் மாளிகையைப் போலவே பிரம்மாண்டமாக இருந்தது. வாசலில் போலீஸ் படைகள் அணிவகுத்து நின்றன. சிவப்புப் பட்டை தரித்த 'சப்ராஸி'கள் இங்கும் அங்கும் நடமாடுவது தெரிந்தது. ஆறுமுகம் சுதந்திரமாக அம்மாளிகைக்குள் பிரவேசித்தான். போலீஸ் வீரன் ஒருவன் இவனைத் தடுத்து, "இதர் ஜாதே!" என்று கேட்டான். ஆறுமுகம் "ராஜேந்திரப் பிரசாத்தைப் பார்க்கப் போகிறேன்" என்று அலட்சியமாகப் பதில் கூறினான்.

"நஹி, நஹி சலோ!" என்று திருப்பி விட்டான் போலீஸ் வீரன்.

ஆறுமுகம் வேறு வழியின்றி இன்னும் கொஞ்ச தூரம் நடந்தான். சட்டசபைக் கட்டடம் வட்டமாகத் தெரிந்தது. ஆறுமுகம் அதைச் சுற்றி வட்டமிட்டான். ஒரு தமிழ் எம். பி. (சட்ட சபை அங்கத்தினர்) குறுக்கிட்டார். அவரைக் கண்டதும் ஆறுமுகம் ஓடிப் போய், "ஐயா, ஜவஹர் வீடு எங்கே இருக்கிறது!" என்று கேட்டான். அந்த எம். பி.க்குச் சிரிப்புத் தாங்கவில்லை.

"என்னத்துக்கு அவர் வீட்டைத் தேடுகிறாய்!" என்று விசாரித்தார்.

"அவரைப் பார்த்து ஒரு விசயம் பேச வேண்டும்" என்றான் ஆறுமுகம்.

"உன்னை வரச்சொல்லிக் கடிதம் போட்டிருக்கிறாரோ! போய்யா போ! சுத்தப் பைத்தியமா யிருக்கிறாய்!" என்றார் எம். பி.

"உங்களுக்கெல்லாம் வோட்டுப் போட்டு டில்லிக்கு அனுப்பினோமே, அது பைத்தியக்காரத்தனம்தான்" என்று ஆறுமுகம் பதில் சொல்லவில்லை. மனத்துக்குள் எண்ணிக் கொண்டான்.

எங்கெங்கோ சுற்றி அலைந்த ஆறுமுகம் கடைசியாக ஜவஹர் வீட்டைத் தேடிக் கண்டு பிடித்தான்.

ஜவஹர் வீட்டு வாசலில் ஸ்ரீமதி இந்திரா காந்தி நின்று கொண்டிருந்தார்.

ஆறுமுகம் "அம்மா!" என்றான்.

"யார் நீ!"

"ஆறுமுகம்!"

"ஆறுமுகமா! எனக்குத் தெரியவில்லை; எங்கே வந்தாய்!"

"எனக்கு உங்களைத் தெரியும். அப்பாவோடேயே எப்போதும் வருவீங்க; போவீங்க. தமிழ் நாட்டுக்குப் பலமுறை நீங்க வந்திருக்கீங்களே" என்றான்.

இந்திரா காந்தி அவன் கபடமற்ற தன்மைக்காகச் சிரித்துக் கொண்டே, "இப்போது உனக்கு என்ன வேண்டும்!" என்று கேட்டார்.

"அப்பா ஜவஹர்லால் நேருவைப் பார்க்க வேணும்......"

"அவர் வெளியே போயிருக்கிறார். திரும்பி வந்தாலும் அவருக்கு உன்னைப் பார்க்க நேரமிருக்காது..."

"ஜாவ், ஜாவ்!!" என்று இதற்குள் பிரதமர் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்த தர்வான் ஆறுமுகத்தை விரட்டினான்.

ஆறுமுகம் "இருப்பா! அதுக்குள்ளே விரட்டிறயே" என்றான். இந்தச் சமயம் வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அந்தக் காருக்குள்ளிருந்து பாரதத்தின் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இறங்கி வந்தார். வாசலில் நின்ற ஆறுமுகம் தன் இரு கைகளையும் கூப்பிச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான். பிறகு "ஜவஹர்லால் நேருவுக்கு ஜே!" என்றான்.

ஜவஹர் "யார் நீ!" என்று விசாரித்தார்.

"என்னைத் தெரியலீங்களா! நான்தான் ஆறுமுகம். தமிழ் நாட்டிலிருந்து வருகிறேன். நீங்க மெட்ராஸ் ஐலண்டு மைதானத்தில் பேசினீங்களே, நான் அப்போது உங்க எதிரில்தானே உட்கார்ந்திருந்தேன். 'இந்திய விவசாயிகளே இந்த நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள்' என்று பிரசங்கத்தில் சொன்னீர்களே!"

"ஆமாம்!"

"அப்போது நான் கைதட்டியதை நீங்க பார்த்தீங்களே, ஞாபகமில்லையா!"

"இல்லை; இப்போது உனக்கு என்ன வேண்டும்!"

"உங்களோடு சில விசயங்கள் பேச வேண்டும்" என்றான் ஆறுமுகம்.

"வா உள்ளே!" என்று அழைத்தார் ஜவஹர். ஆறுமுகத்தின் கள்ளம் கபடமற்ற தோற்றமும் பேச்சும் அவரைக் கவர்ந்தன. அவன் ஓர் ஏழை விவசாயி என்பதை அறிந்து அவனை அன்புடன் அழைத்துச் சென்றார்.

முன் வாசல் ஹாலில் பிரதமரின் பேட்டிக்காகப் பல பிரமுகர்கள் காத்திருந்தனர். ஜவஹர்லால் நேரு தம் காரியதரிசி மூலம் அவர்களையெல்லாம் மறுதினம் வரும்படி சொல்லி அனுப்பி விட்டார்.

ஆறுமுகத்தை மட்டும் உள்ளே அழைத்துப் போய்த் தம் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டார். அவனுடன் அரை மணி நேரம் அந்தரங்கமாக மனம் விட்டுப் பேசினார். அவன் சொல்வதை யெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டார். பிறகு ஆறுமுகம் தன் கந்தைத் துணியில் வைத்திருந்த அவலை அவிழ்த்து ஜவஹரிடம் மகிழ்ச்சியுடன் கொடுத்தான். ஜவஹர் அவன் கொடுத்த அவலை ஆவலுடன் வாங்கிப் புசித்தார். இந்திரா காந்திக்கும் கொடுத்துப் புசிக்கச் சொன்னார். சம்பா நெல் அவல் கற்கண்டு போல் ருசித்தது.

"ஆறுமுகம்! சபாஷ்! இம்மாதிரியான ஒரு தின்பண்டத்தை நான் இதற்கு முன் சாப்பிட்டதே இல்லை. அற்புதம்!" என்றார்.

ஆறுமுகம் ஜன்மசாபல்யமடைந்தான். "இது என் நிலத்தில் விளைந்த நெல். தங்கள் புண்ணியத்தில்தான் எனக்கு இந்த நெல் கிடைத்தது. பவானி அணைக்கட்டு கட்டியதால் என் நிலத்துக்குப் பாசனம் கிடைத்தது! முதல் முதல் என் நிலத்தில் விளைந்த நெல்லில் அவல் செய்து தங்களுக்குக்கொடுத்து விட்டுப் போகவே வந்தேன்" என்றான் ஆறுமுகம்.

திருமணம்



அலமேலு – தியாகராஜன்

ஆண்டியகாடு ஸ்ரீ ஆர். கிருஷ்ண மூர்த்தி அய்யர் குமாரி சௌபாக்கியவதி **அலமேலு**வுக்கும் கும்பகோணம்வக்கீல் ஸ்ரீ ஆர். சுப்பிரமணிய அய்யர் குமாரன் சிரஞ்சீவி **தியாகராஜன்,** B Sc.க்கும் 13-5-56 அன்று பட்டுக்கோட்டை காடிமுத்து நகரில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

வாழ்க, மணமக்கள்!

ஆறுமுகத்தின் அன்பு ஜவஹரின் இதயத்தைத் தொட்டது. அன்று ஆறுமுகத்துக்குத் தம் வீட்டில் ஒரு விருந்து அளித்தார். தம்முடைய பழைய 'ஷெர்வானி' கோட்டு ஒன்றை ஆறுமுகத்துக்குக் கொடுத்து அணிந்து கொள்ளச் சொன்னார். ஜவஹர் கொடுத்த கோட்டை ஆறுமுகம் போட்டுக் கொண்டு ராஜேந்திர பிரசாத் மாதிரி காட்சி அளித்தான்.

மாலையில் ஜவஹரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

ஜவஹர் ஆறுமுகத்தை ஆலிங்கனம் செய்து கொண்டு "உனக்கு என்ன வேண்டும்!" என்று கேட்டார்.

"தங்கள் பேட்டி கிடைத்ததே அதுவே போதும். தங்கள் அன்புதான் தேவை" என்றான் ஆறுமுகம். அப்போது அவன் மடியிலிருந்து கசங்கிப் போன ஒரு பழுப்புக் கடிதம் கீழே விழுந்தது.

அதை எடுத்துப் படித்துப் பார்த்த ஜவஹரின் முகம் கோபத்தால் சிவந்தது.

"இது கலெக்டர் கடிதம் அல்லவா! உன் நிலம்தானா கிடைத்தது மின்சாரக் கம்பங்களைப் புதைக்க! பக்கத்தில் வேறு யாருடைய நிலமும் இல்லையா!" என்று கேட்டார்.

"இருக்கிறது; அது ஒரு பெரிய மிராசுதாருடையது. அவருக்கு அந்த ஊரில் அறுபது ஏக்கர் நிலம் இருக்கிறது" என்றான்.

"சரி; உன் ஜில்லா கலெக்டருக்கு நான் ஒரு கடிதம் கொடுக்கிறேன். அதைக் கொண்டு போய் நேரில் கொடு" என்று கூறி ஒரு கடிதமும் எழுதிக் கொடுத்தார். அத்துடன் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு செக்கும் எழுதி ஆறுமுகத்திடம் நீட்டி, "இந்தா! இந்த செக்கை மாற்றி மாடு வாங்கிக் கொள்" என்று கூறினார்.

ஆறுமுகத்தின் ஆனந்தம் எல்லை கடந்து விட்டது. கோட்டுப் பையில் செக்கையும் கடிதத்தையும் பத்திரமாக வைத்துக்கொண்டு புறப்பட்டவன் சற்றுத் தயங்கினான்.

"ஆறுமுகம்! இன்னும் என்ன வேண்டும்!" என்று கேட்டார் பிரதமர்.

"தங்களுடன் ஒரு போட்டோ எடுத்துக் கொள்ள வேண்டும்" என்றான் ஆறுமுகம்.

போட்டோக்காரரைத் தருவித்து அவன் இஷ்டப்படியே அவனுடன் சேர்ந்து நின்று ஒரு போட்டோ எடுத்துக் கொண்டார்.

ஆறுமுகம் அளவற்ற மகிழ்ச்சியுடன் ஊருக்கு வந்து சேர்ந்தான். தான் ஜவஹருடன் அவர் வீட்டில் ஒரு நாள் தங்கி விட்டு வந்த விவரத்தை ஊர் முழுவதும் சொல்லிக் கொண்டான். ஊரில் அவன் மதிப்பு உயர்ந்தது. ஊரார் அன்று முதல் அவனை 'ஜவஹர் ஆறுமுகம்' என்று அழைக்கத் தொடங்கினார்கள்.

ஆறுமுகமும் ஜவஹரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோ பத்திரிகைகளில் வெளியாகவில்லை. அவருடன் அவன் விருந்து சாப்பிட்ட விவரமும் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்த விஷயங்களும் அவற்றில் பிரசுரமாகவில்லை. அதைப்பற்றியெல்லாம் அவன் கவலைப்படவும் இல்லை.

டினோபால் வெண்மையான ஆடைகளை வெண்மையாக்குகிறது



வெண்மை, கண்ணைப் பறிக்கும் வெண்மை. வெண்மையிலும் வெண்மை, டினோபாலினால்தான் இது சாத்தியம். டினோபால் உபயோகித்த பிறகு வெண்மையான உங்கள் ஆடைகளின் சோபையையும், பிரகாசத்தையும் கண்டு நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள். உங்கள் வெண்மையான ஆடைகளுக்கு, தனிப்பட்ட மேன்மையுடன் விளங்கும் அந்த பிரகாசத் தன்மையை சிறிதளவு டினோபால் கூட அளிக்க வல்லது.





“டினோபால்” என்பது ஜே. ஆர். கெய்கி, எஸ், ஏ. பாஸல், ஸ்விட்ஸர்லாந்த், அவர்களுடைய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்.

அமால்கமேடட் கெமிக்கல்ஸ் அண்ட் டைஸ்டப்ஸ் கோ, பிரைவேட் லிட்.,
பி. ஓ. பாக்ஸ் 965, பம்பாய்.

விவாக ரிஸல்ட்!

வெங்கு

நீலகண்டன் பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அன்றைய தினம் பரீட்சை முடிவுகள் வெளியாகியிருந்தன. அதைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். அதில் அவன் எண் இருக்கவில்லை. இது அவன் எதிர்பார்த்ததுதான். ஆம், அவன் சாக நிச்சயமாக இருந்தான், தான் பாஸாகப் போவதில்லை என்பதனால்.

இப்படி அன்று பத்திரிகை பார்த்து வந்தபோது அவனுக்கு ஒரு அதிர்ச்சியுண்டாயிற்று. கண்கள் அகல விரிந்தன! அடுத்தகணம் உள்ளத்தில் சோர்வே ஏற்படலாயிற்று. முகத்தில் சோகக் குறி படரலாயிற்று.

இவ்வளவுக்கும் காரணம் ஒரு செய்திதான்.

"பரமக்குடி. 16உ நேற்று இவ்வூர் பிரமுகரான ஷண்முகசுந்தர முதலியாரின் மகள் தனலட்சுமிக்கும் திரு சோமசுந்தரம் பி.ஏ.க்கும் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது."

இந்தச் செய்திதான் நீலகண்டனை இவ்வளவு பாடுபடுத்தி விட்டது.

ஷண்முகசுந்தர முதலியார் நம் நீலகண்டனுக்குத் தூரத்து உறவு. ஆயினும் அவருடைய மகள் தனலட்சுமி சென்னையில் கல்லூரியில் படித்து வந்த போது நீலகண்டனுடன் நெருங்கிய உறவு பூண்டாள். அவர்களுக்குள் காதல் வளர்ந்தது. நீலகண்டன் தனலட்சுமியைத் தவிர வேறொரு பெண்ணைக் கரம் பற்றிக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று சபதம் செய்திருந்தான். அப்படியே தனலட்சுமியும் செய்திருந்தாள்.

விடுமுறையின்போது தனலட்சுமி தன் சொந்த ஊருக்குப் போயிருந்த போது அவள் தந்தை கல்யாணப் பேச்சு எடுத்தார். அப்போது அவள் தன் தந்தை ஷண்முக சுந்தர முதலியாரிடம் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொல்லி விட்டாள். "அப்பா, நான் கல்யாணம் செய்துகொண்டால் நீலகண்டனைத்தான் செய்து கொள்வேன். இல்லையேல் கன்னியாகவே இருந்து காலங் கழிப்பேன்" என்று கூறி விட்டாள்.

என்ன செய்வார் ஷண்முகசுந்தரம்! பாவம், 'யார் இந்த நீலகண்டன்!' என்று தேடிக் கொண்டு புறப்பட்டார். அவன் தன் உறவினன் என்று தெரிந்து கொண்டதில் ஷண்முகசுந்தர முதலியாருக்கு ஓரளவு திருப்திதான். ஆனால் அவன் படிப்பு விஷயத்தைக் கேள்விப்பட்ட போது அவர் திருப்தியெல்லாம் பறந்து போய் விட்டது. ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு வருஷமாவது படித்து விட்டுத்தான் மேல் வகுப்புக்கு வருவது அவன் வழக்கமாம். இந்த வருஷம் பி. ஏ. பரீட்சைக்குப் போயிருந்தான். இதுதான் முதல் முயற்சி. இந்த முயற்சியில் தான் தேறிவிடுவான் என்ற நம்பிக்கை நீலகண்டனுக்கே இல்லை. பின் ஷண்முக சுந்தர முதலியாருக்கு எப்படியிருக்கும்!


"நம்ம தனலட்சுமிக்கு இப்படிப்பட்ட வடிகட்டிய முட்டாளா கணவனாக வாய்க்க வேண்டும்!" என்று நினைத்தார். முடிவில், தான் வந்த காரியத்தை நீலகண்டனிடம் கூறி விட்டு, "முதலில் பி. ஏ. பாஸ் செய்யுங்கள், பிறகு கல்யாண விஷயத்தைப் பற்றி யோசிப்போம்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

நீலகண்டனுக்குத் தலை கிறு கிறு என்று சுற்ற ஆரம்பித்தது. மண்டையில் பெரிய குண்டாந்தடி கொண்டு அடித்தாற்போலிருந்தது. 'ஆம், அவன் எந்த யுகத்தில் பி. ஏ. பரீட்சை எழுதித் தேறுவது! எப்போது கல்யாணமாவது! அப்படிக் கல்யாணமானால், பார்ப்பவர்கள் இது சஷ்டியப்த பூர்த்தி என்று நினைப்பார்களே தவிர முதல் கல்யாணம் என்று யாரும் நினைக்க மாட்டார்களே!' என்றெல்லாம் பலவாறாக எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தான். தனலட்சுமியைப் பிரிந்து இருக்க வேண்டிய காலத்தை நினைத்து நினைத்து ஆற்றமாட்டாது பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான்!

இந்த நிலைமையில்தான் தனலட்சுமியின் விவாகச் செய்தி வெளி வந்தது.

* * *

'நீ பி. ஏ. பாஸ் பண்ணு. கல்யாணத்தைப் பற்றிப் பேசுவோம் என்றீரே! நான் பி. ஏ. பாஸ் பண்ணும் வரை எனக்காக என் தனலட்சுமி காத்திருப்பாள் என்றல்லவா நினைத்தேன். மோசம் போய் விட்டேனே! நான் இனி எதற்காகப் படிக்கவேண்டும்! எதற்



ப்ருக்பாண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் சட்ட ஆலோசகர் ஸ்ரீ சுந்தரம் அவர்கள் குமாரி சுசீலாவுக்கும் Capt. P. V. S. கிருஷ்ணன் A. M. C. அவர்களுக்கும் 13-5-56 அன்று கல்கத்தாவில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க, மணமக்கள்!

காக பி. ஏ. பாஸ் செய்ய வேண்டும்! என் வாழ்வில் இனி என்ன இருக்கிறது! நான் இனிமேல் உயிர் தரித்து என்ன பயன்! நான் இருப்பதும் ஒன்றுதான் இறப்பதும் ஒன்றுதான். இல்லை. இருப்பதைவிட இறப்பதே மேல்...' இப்படிப் பல படியாக நினைத்து மனம் உளைந்தான்.

இரவு பகல் தூக்கம் கிடையாது; சாப்பாடு கிடையாது. தவியாய்த் தவித்தான். நேரே பரமக்குடிக்குப் போய் ஷண்முகசுந்தர முதலியாரை, "நீ ஒரு மனுஷனுய்யா!" என்று ஒரு கேள்வி நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகிறாப் போல் கேட்டு விட்டு வரவேண்டும் என்று தீர்மானித்தான்.

பரமக்குடிக்கு மறுநாள் புறப்பட்டான். சென்னையிலிருந்து ஒரு நாள் இரவுப் பயணம் செய்ய வேண்டும். புறப்பட்ட தினத்துக்கு மறு நாள் பரமக்குடிக்குப் போய்ச் சேர்ந்தான். பரமக்குடியில் இறங்கியவுடன் ஷண்முகசுந்தர முதலியார் வீட்டுக்குப் போக அவன் மனம் துணியவில்லை. ஒரு ஹோட்டலுக்குப் போனான். பெட்டி படுக்கை யெல்லாம் வைத்தான். குளித்தான். உடனே போக மனம் வரவில்லை. "ஆம், நீ யிருக்கிற லட்சணத்துக்கு என் மகளைக் கொடுக்க வில்லையே என்ற கோபம் வேறேயா! போய்யா, போக்கற்றவனே!" என்று முதலியார் கேட்டு விட்டால் என்ன செய்வது என்ற பயம் ஏற்பட்டு விட்டது. இந்த பயமும் கூச்சமும் சென்னையிலிருந்த போதே ஏற்பட்டிருந்தால், இவ்வளவு ரூபாய் செலவழித்துக் கொண்டு இவ்வளவு தூரம் வந்தேயிருக்க மாட்டான்! விதி, அவன் பரமக்குடி மண்ணை மிதித்த பிற்பாடுதான் இத்தகைய பயம் கொள்ளச் செய்தது. ஆயினும் இவ்வளவு தூரம் வந்த பிறகு அவரைப் பார்க்காமல் போவது சரியல்ல என்றும் அவனுக்குத் தோன்றியது.

ஹோட்டலில் போட்டிருந்த பெஞ்சியில் உட்கார்ந்தான். அன்றையப் பத்திரிகை பெஞ்சியின் மீது பக்கத்தில் கிடந்தது. ஒன்றும் தோன்றாமல் அதையெடுத்துப் புரட்ட ஆரம்பித்தான். "ஒரு திருத்தம்" என்று அதில் தலைப்புக் கொடுத்திருந்தது! என்ன திருத்தமாம்! என்று நினைத்துக் கொண்டே படிக்க ஆரம்பித்தான். அவனுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி!

"நேற்றைய இதழில் ஷண்முகசுந்தர முதலியாரின் மகள் தனலட்சுமிக்கு விவாகமானதாக வெளியாகியிருந்தது. செய்தி தவறுகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஷண்முகசுந்தர முதலியாரின் மூத்த மகளான வரலட்சுமிக்குத் திருமணம் என்னும் செய்தியை அடுத்த மகளான தனலட்சுமிக்கு என்று தவறுகப் பிரசுரித்து விட்டோம். தனலட்சுமிக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை."

இதைப் பார்த்ததும் நீலகண்டனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி சொல்லி முடியாது.

உடனே ஷண்முகசுந்தர முதலியாரைப் பார்க்கப் புறப்பட்டு விட்டான்.

நீலகண்டனைப் பார்த்ததும் ஷண்முகசுந்தர முதலியார், "அடேடே! நீயே வந்துவிட்டாயா! சபாஷ். கன்குராஜுலேஷன்ஸ்" என்றார்.

நீலகண்டனுக்கு ஒன்றும் புரியவில்லை. "எனக்கு எதற்கு கன்குராஜுலேஷன்ஸ்!" என்று கேட்டே விட்டான்.

"என்னப்பா விளையாடுகிறாய்! நீ பி. ஏ. பாஸ் செய்து விட்டதற்குத்தான்" என்றார்.

"நான் பாஸ் செய்து விட்டேனு! இல்லையே! என் நம்பர் வரவேயில்லையே!" என்றான்.

"நீ இன்றையப் பத்திரிகை பார்த்திருக்க மாட்டாய். இன்றைக்கு விடுபட்டுப் போன சில நம்பர்கள் வந்துள்ளன. அதில் உன் நம்பர் இருக்கிறது!" என்றார்.

இந்த எதிர்பாராத மகிழ்ச்சிகரமான செய்தியைக் கேட்டுச் சிலை போல் நின்று விட்டான்.

அப்போது இதழ்களில் புன்னகை தவழத் தனலட்சுமி நாணத்துடன் புது மணப்பெண்ணைப் போல் அங்கு வந்து நின்று கடைக்கண்ணால் அவனைப் பார்த்தாள்.

படித்துப் பாருங்கள்

புத்த ஜயந்தி மலர்

இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன்பு எழுந்தது ஒரு கொள்கை; ஒரு சித்தாந்தம். ஆசியாவிலிருந்து எழுந்த அந்த ஜோதி உலகெங்கும் பரவி ஜீவன்களின் இதய இருளைப் போக்கி ஒரு பேருண்மைத் தத்துவத்தை நிலைநாட்டியது. அந்தத் தத்துவம் செத்து விட்டது என்கிறார்கள் ஒரு சிலர். யாரோ சாக அடித்து விட்டார்கள் என்கிறார்கள் வேறு சிலர். உண்மை அப்படி அல்ல. அந்தத் தத்துவம் நிலைத்து நிற்கிறது. அதைச் சிறிது நாம் மறந்திருக்கலாம். அவ்வளவுதான். ராஜாஜி அவர்கள் 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' புத்த ஜயந்தி மலரில் புத்தரின் கொள்கைகள்–அவருடைய தத்துவங்கள் என்றையும் விட இன்றைய உலகச் சூழ்நிலைக்கு அத்தியாவசியமானவை என்பதை அழகாக எடுத்துக் கூறியுள்ளார். புத்தர் பிரானின் யோக நிலைக்கும், அவருடைய கொள்கைகளுக்கும் ஆதாரமாக நிற்கும் உபநிஷத வாக்கியங்களையும், தொல்காப்பியத்திலிருந்து சில பாடல்களையும் எடுத்துக் காட்டியுள்ளார். அதைத் தவிர, காந்திஜியின் 'கடவுளும் நிர்வாணமும்' என்ற புத்தரின் உன்னத லட்சியத்தை விளக்கும் கட்டுரையும், வேதத்தையும் புத்தரின் தத்துவங்களையும் ஒப்பிட்டுக் காட்டும் திலகரின் கட்டுரையும், வினோபாஜி, சுவாமி விவேகானந்தர், ஸர் எஸ். ராதாகிருஷ்ணன், திரு கைலாசநாத கட்ஜு முதலியோரின் சிறந்த விஷயங்களோடு பாரதப் பிரதமர் நேருஜியின் அருமையான கட்டுரையும், முதன் முதலாகச் சீனாவில் புத்த தத்துவம் எப்படிப் பரவியது என்பதை அழகாக எடுத்துக் காட்டும் சீன புத்த சங்க உப தலைவர் சாவ்பூ–சுவின் கட்டுரையும் மலரை அலங்கரிக்கின்றன. கண் கவரும் பல புகைப்பட வர்ண சித்திரங்களுடன் திகழும் ஹிந்துஸ்தான் டைம்ஸ் புத்த ஜயந்தி மலர் பல உயர்ந்த தத்துவங்கள் அடங்கிய அரும் பெரும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

மலரின் விலை :— ரூ. 1. கிடைக்குமிடம் :— Hindustan Times Ltd., New Delhi.

வட்ட மேஜை

பொருள் தெரியுமா?

சமீபகாலமாக நம் நாட்டில் நடந்துவரும் சில சம்பவங்களைப் பார்க்கும் போது ஜனநாயகம் என்ன என்பது பற்றி நம்மெல்லோருக்கும் யாரேனும் கற்பித்தால் நலமென்று தோன்றுகிறது. 'மக்கள் எவ்வழியே செல்லுகிறார்கள், அதுவே என் வழி' என்று தலைவர்கள் சிலர் நடந்து வருவது எங்கு கொண்டு போய்விடும் என்பதைத்தான் சமீபகால நிகழ்ச்சிகள் எடுத்துச் சொல்கின்றன. ஆங்கிலத்தில் தலைவரை 'லீடர்' என்று சொல்லுகிறார்கள்; அதற்கு மக்களை இட்டுச் செல்பவர் என்றுதான் பொருள். மக்களைப் பின்பற்றிச் செல்பவர் என்று அல்ல.

மேல் வங்கம்
3—6—56 பி. எஸ். என். ஸ்வாமி

✱

ஆசிரியப் பயிற்சி

சென்னை ராஜ்யத்தில் 27—3—56ல் சர்க்காரின் அறிக்கையின்படி 140 போதனா பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இந்த ஜூன்மாதத்தில் இன்னும் பல இடங்களில் போதனா பயிற்சிப் பள்ளிகள் திறக்கப்பட்டு விட்டன. 18,275 பேருக்கு (8,134 பெண்கள் உள்பட) இரண்டு வருஷங்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதாவது வருஷம் 10,000 ஆசிரியர்கள் பயின்று வெளிவருகிறார்கள். இந்த ராஜ்யத்தில்மொத்தம் உள்ள எலிமெண்டரி பாடசாலைகள் 21,423. இவைகளில் ஏற்கனவேயே கணிசமான அளவு ஆசிரியர்கள் அமர்ந்துள்ளார்கள். சர்க்கார் வெளியிட்ட கணக்குப்படி வருஷா வருஷம் 10,000 ஆசிரியர்களுக்கு மேல் வெளிவந்தால் இடம் எங்கே! இப்பொழுதே நூற்றுக்கணக்கான ஆசிரியப் பயிற்சி பெற்றவர்கள் அலுவலின்றி ஆங்காங்கு அல்லலுறுகிறார்கள். ஆகையால் சர்க்கார் உடனடியாகப் போதனா முறைப் பள்ளிகளைக் குறைத்து ஆவன செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் இவ்வாண்டு முதல் "ஹையர் கிரேட்" போதனா முறையை உடனடியாக நிறுத்தி, "செகண்டரி கிரேட்" போதனா முறையை மட்டும் இயங்க அனுமதித்தால் ஆசிரியர் மதிப்பு உயரும்.

தஞ்சை
4—6—56 ஆர். நாராயணன்

✱

பயனுண்டோ, பலகைகளால்?

"பஸ்ஸில் பெண்களின் கஷ்டம்" என்று "கல்கி"யில் வெளியான கடிதத்தைப் பார்த்தேன். பஸ்ஸில் பொதுவாக, ஆண் பெண் இரு பாலாரும் கஷ்டப்படவே செய்கிறார்கள். அதில் பெண்களுக்கு மட்டும் என்ன தனிச் சலுகை என்று கேட்கலாம். பெண்கள் வெளியில் வரும்போதுகூடக் குழந்தைகளும் வரவேண்டியிருக்கிறது. சாமான்களும் சேர்ந்து விடுகின்றன. படிக்கும் பெண்களாயிருந்தால், புத்தக பாரம் இருக்கவே இருக்கிறது. இந்த நிலையில் நின்று தவித்து டிக்கட் வாங்குவதும், சில்லறை கொடுப்பதும் மிகவும் கஷ்டந்தான்.

"பெண்களுக்கு உட்கார இடம் கொடுக்க வேண்டும்" என்று கோருவதுதானே விஷயம்! இது, தானே பழக்காமல் தடிகொண்டு பழக்க வைக்கும் கதைதான். பொதுவாக எல்லோரும், பஸ்ஸிற்காகக் கால் கடுக்க நிற்காமலும், கை வலிக்க ஊஞ்சலாடாமலும் இருக்கும் நாள் எக்காலமோ! ஆணோ, பெண்ணோ அவர்கள் நிலைமையை உத்தேசித்து உட்கார இடம் கொடுப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். வயதான ஆண்கள் வந்தால், பெண்கள் எழுந்து இடம் கொடுக்க வேண்டும் என்று சிலர் கேட்கிறார்கள். 'பெண்கள் அவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டு வெளியில் ஏன் வரவேண்டும்! எல்லாத் துறைகளிலும் சமத்துவம் கோரும் பெண்கள் நின்றால் என்ன!' இந்த இரண்டு கேள்விகளுக்கும் சுருக்கமாகப் பதில் சொல்லிவிட முடியாது. இந்த நாளில் பெண்கள் வெளியில் செல்லாமல் இருக்க முடியுமா! அநாவசியமாய்ச் செல்வதைத் தவிர்க்கலாம். அவசியமாய்ச் செல்வதைத் தவிர்க்க முடியாதே! பஸ்ஸில் பெண்களுக்கு உட்கார இடம் கொடுக்கும்படி பலகைகள் போடுவதால் மட்டும் பயன் ஏற்பட்டு விடாது. மனிதப் பண்பும் அதில் இடம் பெற வேண்டும். எத்தனையோ காரியங்களை ஒழுங்குபடுத்தப் பலகைகள் போட்டிருக்கிறார்கள். அவற்றைக் கவனிப்பார் யார்! புகை பிடிக்கக்கூடாதென்று போட்டிருக்கிற பலகை, புகை பிடித்தே கிடக்கிறது. மனப் பலகைகளில் தெளிவு உண்டாகி விட்டால் மற்றப் பலகைகள் தேவையே யில்லை.

சென்னை
25—5—56 நீலாவதி ராமசுப்ரமண்யம்

★

சர்க்கார் உத்தரவு

நான் பி. ஏ. வகுப்பு படிக்கும் ஒரு மாணவன். எனக்கு 'மிலிடெரி ஸ்காலர்ஷிப்' கொடுத்து வந்தார்கள். (யுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்டு நலிவுற்றவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு இலவசக் கல்வி வசதியளிப்பதாகச் சர்க்கார் வாக்களித்திருந்தார்கள். இதற்கு மிலிடரி ஸ்காலர்ஷிப் என்று பெயர்.) 1960-ம் ஆண்டு வரை ஸ்காலர்ஷிப் கொடுப்போம் என அரசாங்கத்தார் உறுதி அளித்திருந்தார்கள். அதை நம்பியே நான் பி. ஏ. வகுப்பில் சேர்ந்தேன். ஆனால் இப்போதோ 1956-57 முதற்கொண்டு ஸ்காலர்ஷிப் கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். இம்மாதிரி உத்தரவுகளைப் போட்டால் நாங்கள் என்ன செய்வது! ஏழை மாணவர்களாகிய நாங்கள் என்ன செய்வோம்! நாங்கள் படிப்பை முடிக்கும் வரையிலாவது ஸ்காலர்ஷிப் கொடுக்கும்படி வேண்டுகிறோம். அல்லது புதிதாய்ச் சேரும் மாணவர்களுக்கு மட்டும் ஸ்காலர்ஷிப் கிடையாது என்று உத்தரவை மாற்றிக் கொள்ளும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.


சென்னை
8—6—56 எஸ். ஆர். சௌரிராஜன்

குளிர்ச்சிப்படுத்திக் கொள்ள

ஐஸ் டீ

அருந்துங்கள்

ஐஸ் டீ கோடை நாட்களில் புத்துணர்ச்சி ஊட்டும்; திருப்தி அளிக்கும்; தயாரிப்பதும் வெகு சுலபம்.



ஐஸ் டீ தயாரிப்பது எப்படி

1. கெட்டிலில் தண்ணீர் நிரப்பிக் கொதிக்க வைக்கவும்.

2. ஆவி வந்ததும், அடுப்பிலிருந்து கெட்டிலை அகற்றி, வெந்நீரால் டீ பாத்திரத்தை சுத்தம் செய்யவும்.

3. (12 அவுன்ஸ் கொள்ளும்) டீ பாத்திரத்தில் நம்பகமான வியாபாரியிடம் வாங்கிய டீயில் மூன்று கரண்டி போட்டு, கொதி நீரில் ஐந்து நிமிஷம் ஊற வைக்கவும்.

4. இப்பொழுது, இந்த ஊறிய தேநீரை, வடிகட்டி மூலம், ஐஸ் துண்டுகள் நிறைந்த பெரிய கண்ணாடி டம்ளரில் வடிகட்டிக் கொள்ளவும். வேண்டிய அளவுக்கு சர்க்கரையும் எலுமிச்சம் பழத்துண்டுகளையும் சேர்த்துக் கொள்ளவும். பால் சேர்க்கக்கூடாது.

5. சில நிமிஷங்கள் குளிர வைத்து, [illegible] ஆனந்தமாக அருந்தவும்.

அதிகமான ஐஸ் டீ தயார் செய்ய விரும்பினால், ஒவ்வொரு 6 அவுன்ஸ் கோப்பைக்கும் ஒரு டீஸ்பூன் அளவு டீ எடுத்துக் கொண்டு, மேற்படியாக உருகும் ஐஸை உத்தேசித்து இன்னும் அரை டீ ஸ்பூன் சேர்க்கவேண்டும்.

நான்தான் டீ – ஐஸ் டீயும் மிக 'நைஸ்'

TEA BOARD INDIA

கல்கி மாதச் சிறுகதைப் போட்டி நூறு ரூபாய் பரிசு பெற்ற கதை

வாசுதேவனுக்குத் தன் வாழ்க்கையில் எந்தவிதமான குறையும் கிடையாது. அரண்மனை போன்ற வீடு; அழகும் குணமும் நிறைந்த மனைவி; ஏராளமான சொத்து; அதோடு நல்ல உத்தியோகம் வேறு. கண்ணின் இரு மணிகளென மாலா, சேகர் என்னும் இரு குழந்தைகள். என்ன சுகம் இருந்து என்ன? அவன் மனம் அமைதியிழந்து அலை பாய்ந்தது. காரணம், அவன் தந்தை மரணப் படுக்கையில் இருந்த பொழுது அவனுக்கு இட்ட கட்டளையை அவனால் இன்னும் நிறைவேற்ற முடியாமல் இருந்ததுதான்.

சிந்தனையில் ஆழ்ந்து விட்ட வாசுதேவனை அவன் மனைவி சுசிலாவின் குரல் தட்டி யெழுப்பியது.

''இன்றைக்கும் கோவிலுக்குப் போய் அந்தப் பெரியவரின் காலட்சேபத்தைக் கேட்டு விட்டு வரட்டுமா?'' என்று கேட்டாள் சுசிலா.

''ஏது, ஏது? அந்தப் பெரியவர் உன்னைப் போன்ற படித்த பெண்களையும் கதாகாலட்சேபம் கேட்கும்படி செய்து விட்டார் போலிருக்கிறதே!'' என்று கேலி செய்தான் வாசுதேவன்.

பேச்சுக்கு அப்படிச் சொன்னானே தவிர, அவனுக்கும் அவருடைய கதை என்றால் உயிர்தான்.


''உங்களைப் போல் படித்த ஆண் பிள்ளைகளே அவர் கதையில் மயங்கிக் கிடக்கும் போது என்னைப் போன்ற பெண் பிள்ளைகள் மயங்காமல் என்ன செய்வார்களாம்?'' என்று கேட்ட சுசிலா, தொடர்ந்து; ''ஒரு நாளைக்கு அந்தப் பெரியவரை நம் வீட்டுக்குச் சாப்பிட அழைக்கலாமா?'' என்று வினயமாகக் கேட்டாள்.

''பேஷாக அழைக்கலாம். நானும் நினைத்துக் கொண்டுதான் இருந்தேன். இன்று இரவே அவரிடம் சொல்லி விட்டு வந்து விடுகிறேன்! நாளைக்கு நம்முடைய வீட்டில்தான் அவருக்கு விருந்து!'' என்றான் அவன்.

இந்த விஷயத்தில் அவன் மனைவி அவனையும் முந்திக் கொண்டு விட்டதில் அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

மறுநாள் சுசிலா விருந்துக்கான ஏற்பாட்டைச் செய்வதில் தீவிரமாக இருந்தாள். பெரியவரும் வீட்டுக்கு வந்தார். ராஜோபசாரமாக அவருக்கு மரியாதையும் விருந்தும் நடந்தன.

'' ஏன், சுவாமி! மனிதன் தவறு செய்வதற்குச் சந்தர்ப்பமும் ஒரு காரண



இரு புதல்வர்கள்

எஸ். ஜானகி



மாகி விடுகிறதல்லவா?'' என்று பெரியவரைப் பார்த்துப் பயபக்தியோடு கேட்டான் வாசு.

பெரியவர் கண்முன் வாழ்க்கை ஏடுகள் புரண்டு கொடுத்தன. ''மகனே, கேள்! நீ கேட்ட கேள்வி என்னை நீண்ட நாட்களுக்கு முன்னால் நடந்த ஒரு சம்பவத்துக்கு இழுத்துச் செல்கிறது!'' என்று கூறி ஒரு கதையையே சொல்ல ஆரம்பித்து விட்டார்.

சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன் சுவாமிநாதன் என்று ஒருவர் இருந்தார். அவர் மிகவும் நல்ல குண முடையவர். அவருக்கு ஏராளமான சொத்துக்கள் இருந்தும் எளிய வாழ்க்கையே நடத்தி வந்தார். எல்லோரிடமும் அன்பாகப் பழகி வந்தார். அவருக்குச் சங்கமேசுவரன், சத்தியநாதன் என்ற இரண்டு புதல்வர்கள். மூத்தவன் சங்கமேசுவரன்; சாயலில் தகப்பனாரைப் போலவே இருந்தான். தகப்பனார் சொல்லைத் தட்டவே மாட்டான். இளையவன் சத்தியநாதனுக்கும் மூத்தவனுக்கும் இரண்டு வயதுதான் வித்தியாசம். இருவரும் ஒரே வகுப்பில் படித்தார்கள். சத்தியநாதனுக்கு வீட்டில் அதிகச் சலுகைகள் உண்டு. நன்றாக உண்டு உடுத்திப் பள்ளி செல்வான். கேட்ட மாத்திரத்திலேயே வேண்டிய பொருள் களெல்லாம் அவனுக்குக் கிடைத்து வந்தன. ஏன்? வீட்டில் அவனுக்கென்று ஒரு தனி அறைகூட இருந்தது.

மூத்தவன் எதுவுமே கேட்க மாட்டான். கேட்டாலும் ''உனக்கு எதற்கப்பா அதெல்லாம்? அவன்தான் குழந்தை!'' என்று சொல்லி விடுவார் சுவாமிநாதன். இளையவனுக்கு மாதம் இருநூறு ரூபாய் செலவானால் மூத்தவனுக்கு இருபத்தைந்து ரூபாய் கூட ஆகாது.

சுவாமிநாதனுக்கு இளைய மகனிடம்

தான் அதிகப் பிரியம். தாம் பெற்ற பிள்ளைகளிடமே இத்தனை பாரபட்சமா என்றுதான் யாருக்குமே கேட்கத் தோன்றும். அவ்வளவு வித்தியாசம் பாராட்டி வந்தார் தம்முடைய புதல்வர்களிடம்.

இருவரும் மளமளவென்று படித்து எஸ். எஸ். எல்.சி. தேறினார்கள். சங்கமேசுவரன் அதிக மார்க்குகள் வாங்கி யிருந்தான். சத்தியநாதன் சுமாராக வாங்கி யிருந்தான். சங்கமேசுவரனைக் கல்லூரியில் சேர்க்கும்படி அவனது ஆசிரியர்கள் சொன்னார்கள். சங்கமேசுவரனுக்கும் கல்லூரியில் படிக்க வேண்டும் என்று ஆவலாக இருந்தது. ஆனால் சுவாமிநாதன் சங்கமேசுவரனிடம், ''உனக்கு மேல் படிப்பு வேண்டாம். தம்பியை மட்டும் கல்லூரிக்கு அனுப்பலாம் என்றிருக்கிறேன். நீ சீக்கிரம் ஒரு வேலையைத் தேடிக்கொள்!'' என்று சொல்லி விட்டார்.

இதைக் கேட்டதும் சங்கமேசுவரனுக்கு மிகுந்த ஏமாற்றமாகப் போய் விட்டது.

''சங்கமேசுவரா, நீ அதிக மார்க்கு வாங்கி யிருந்தும் உன்னை ஏன் உன் அப்பா கல்லூரிக்கு அனுப்பவில்லை? உன் தம்பியை மாத்திரம் அனுப்புகிறாரே, அவருக்கென்ன பணமா இல்லை? நீ இந்தச் சின்ன வயதிலேயே உத்தியோகம் செய்யாவிட்டால் குடியா முழுகிவிடும்?'' என்று அவனைப் பார்த்துப் பிறர் கேட்கும் பொழுது சங்கமேசுவரனுக்குத் தன் அப்பாமீது கோபம் கோபமாக வந்தது.

சத்தியநாதன் கல்லூரிக்குப் போய் விட்டான். சங்கமேசுவரனுக்கு உள்ளூரிலேயே ஒரு வேலை கிடைத்தது. விடுமுறை நாட்களில் சத்தியநாதன் கல்லூரி பாணியில் வந்து இறங்குவான். அவனைப் பார்க்கும் போதெல்லாம் சங்கமேசுவரனுக்கும் நாமும் 'ஏன் இப்படி இருக்கக் கூடாது?' என்று தோன்றும். அதன் பயனாகத் தகப்பனார் மீதும், தம்பி மீதும் அவனுக்கு எல்லையற்ற வெறுப்பு வளரலாயிற்று.





ஒரு நாள் அவன் நண்பன் ஒருவன், ''சங்கமேசுவரா, பட்டணத்தில் ஒரு காரியாலயத்தில் மானேஜர் வேலை காலியிருக்கிறது. உன்னைப் போன்ற புத்திசாலிகளுக்கு அந்த வேலை சுலபமாகக் கிடைத்துவிடும். ஆனால் அந்த வேலைக்கு ஆயிரம் ரூபாய் 'டெபாஸிட்' கட்ட வேண்டும். தாமதம் செய்யாமல் முயற்சித்துப் பார்!'' என்றான்.

சங்கமேசுவரனுக்கு அந்த வேலையை அடைய ஆவல் உண்டாயிற்று. யாருக்குமே சகஜம்தானே? உடனே அப்பாவிடம் ஓடிச் சென்று விஷயத்தை விளக்கிக் கூறினான்.

''பட்டணத்தில் அதிகப்படி செலவாகும். அந்த வேலை உனக்கு எதற்கு? அதோடு 'டெபாஸிட்' கட்ட ஆயிரம் ரூபாய் இப்பொழுது என் கைவசமில்லை. இருக்கும் வேலையே போதும்'' என்று சொல்லிவிட்டார் அவன் தந்தை.

இதைக் கேட்ட சங்கமேசுவரனுக்கு மனம் ஒடிந்து விட்டது. அவன் அப்பா அவன் விஷயத்தில் மட்டும் ஏன் இப்படிப் பராமுகமாக இருக்கிறார்? தம்பிக்கு ஏராளமாகச் செலவழிக்கும் அவர் அவன் விஷயத்தில் செலவழிக்கத் தயங்குவானேன்? நினைக்க நினைக்க நெஞ்சை என்னவோ செய்தது. வாழ்க்கையே சலித்தது.

வெறுப்புற்ற அவனது உள்ளத்தில் மலர்ச்சி ஏற்படும்படி செய்தாள் கௌசல்யா. கௌசல்யா அந்த ஊரிலுள்ள பெரிய பணக்காரரின் மகள். *தற்செயலாக அவளைக் கோயிலில் சந்தித்த சங்கமேசுவரன் அவளது அழகில் ஈடுபட்டான். மணந்தால் அவளையே மணப்பது, இல்லையென்றால் பிரம்மச்சாரியாக வாழ்வது என்று கூடச் சபதம் செய்து கொண்டான். தினமும் கோவிலுக்குச் சென்று கௌசல்யாவைக் காண்பான். அவன் கோவில் சென்றது வீண் போகவில்லை.

ஒரு நாள் கௌசல்யாவின் தகப்பனாரே அவன் வீடு தேடி வந்தார். ''உங்கள் மகன் சங்கமேசுவரனை எனக்குப் பிடித்து விட்டது. என் பெண் கௌசல்யாவை உங்கள் மகனுக்கு மணம் செய்விக்கலாம் என்று நினைக்கிறேன்!'' என்றும் சொன்னார்.

பக்கத்து அறையிலிருந்த சங்கமேசுவரன் இதைக் கேட்டு ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தான். தந்தை சொல்லும் பதிலை ஆவலோடு எதிர்பார்த்தான். ''சங்கமேசுவரனுக்கு ஏற்கனவே ஒரு பெண்ணை நிச்சயம் செய்து விட்டேன். என் சின்ன மகனுக்கு வேண்டுமானால் கௌசல்யாவை மணம் செய்து கொள்ளலாம்'' என்று சுவாமிநாதன் அழுத்தமாகக் கூறியதைக் கேட்டபோது சங்கமேசுவரனுக்கு வானமே இடிந்து தலையில் விழுவது போல் இருந்தது.

''ஐயோ, இந்த ஒரு விஷயத்திலாவது அப்பா எனக்குச் சாதகமாக இருக்கக் கூடாதா?'' என்று எண்ணி மனம் குமுறினான். அப்புறம் அவனுக்கு அந்த வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை.

கௌசல்யா தனக்கு இல்லை என்று ஆகிவிடவே, அன்று இரவுக் கிரவே, ஒரு காகிதத்தை எடுத்து, 'அப்பா! நீங்கள் எனக்கு அப்பாதானா என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. நீங்கள் இதுவரையில் என்னிடம் நடந்து கொண்ட மாதிரியிலிருந்துதான் இம்முடிவுக்கு வருகிறேன். என்னிடம் துளிக்கூட அன்பு இல்லாத தங்களுடன் இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. இதோ நான் இப்போதே வீட்டை விட்டுப் போய் விடுகிறேன்' என்று எழுதினான்.

அடுத்தகணமே அப்பாவின் படுக்கையில் கொண்டு போய் வைத்து விட்டு வீட்டை விட்டுக் கிளம்பி விட்டான். ஊர் ஊராக அலைந்தான். சாப்பாடு கிடைத்த இடத்தில் சாப்பிட்டான். கிடைக்காவிட்டால் பட்டினி கிடந்தான். அவனுக்குத்தான் தன் உடல் மீதும் உயிர் மீதும் அக்கறை இல்லையே! உலகத்தையே வெறுத்து விட்டவன் உடலை எதற்காகக் கவனிக்கப் போகிறான்? உடல் இளைத்து உருமாறினான். தாடி மீசை வளர்த்தான். துறவியாகவே அவன் தோற்றமளித்தான்.


ஊர் ஊராகச் சுற்றியலைந்து கொண்டிருந்த சங்கமேசுவரன் திடீரென்று

* இந்தக் காட்சியைத்தான் இந்த இதழ் அட்டையில் வண்ணச் சித்திரமாக வரைந்திருக்கிறார் ஓவியர் ரஸாக்.

பற்களைப் பரிசுத்தமாக்கும்

மக்ளீன்ஸ்!

இம் மூன்று கோப்பைகளை பற்கள் என பாவனை செய்வீர்களானால் இவைகளின் வெளிப்புறம் மற்றும் உட்புறத்தைத் தவிர, ஊத்தை சேர்ந்து அபாயகரமான கிருமிகள் வசிக்கும் இடுக்குகளை சுத்தம் செய்வது மிகக் கடினம். பற்களைப் பாதுகாக்க விரும்புவோர், 'லேப்பாயிட்ஸ்' ஸினால் ஏற்படும் அபாயத்தை அறிய வேண்டியது அவசியம்.



மக்ளீன்ஸ் எளிதில் துலக்க முடியாத பற்களின் இடுக்குகளில் முண்டிப் புகுந்து துலக்குகிறது. எனவே

பற்சிதைவைத் தவிர்க்க சிறந்த சாதனமாக இருப்பது மக்ளீன்ஸ் ஒன்றே

பற்களின் மேல் படர்ந்திருக்கும் 'லேப்பாயிட்ஸ்' கலந்த பாசி பார்ப்பதற்கு அசிங்கமாயிருப்பதோடன்றி அபாயகரமான துங்கூட என்று பல் டாக்டர்கள் நிரூபிக்கின்றனர். 'லேப்பாயிட்லை' எளிதில் சுத்தம் செய்ய முடியாது. இவை தவருமல் சுத்தம் செய்யப்பட வேண்டும். இல்லையேல் இவைகளின் உட்புறத்தில் தங்கும் திராவகச் சத்து பற்களை அரித்தே விடுகின்றது. இத்தகைய 'லேப்பாயிட்லை' அறவே அகற்ற ஒரே வழிதான் உண்டு. அதாவது இதை கரையச் செய்ய வேண்டும். 'லேப்பாயிட்லை' கரைக்கக் கூடிய விசேஷமான திரவம் மக்ளீன்ஸில் இருப்பதால், வாயில் நுரை கூட்டாமல் மக்ளீன்ஸ் 'லேப்பாயிட்லை' லகுவாக ஜாக்கிரதையுடன் துரிதமாக கரையச் செய்கின்றது. பற்களின் சிதைவைத் தவிர்க்க இது மிகவும் முக்கியம்.

மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை தினந்தோறும் இருமுறை உபயோகியுங்கள். பற்கள் வெண்மையாகவும், ஆரோக்கியத்துடனும் விளங்கும்.

க்ளோரோபில் சேர்ந்த வகையும் கிடைக்கும்



MTY-41 TAM

ஒரு நாள் தன் சொந்த ஊருக்கே வந்து சேர்ந்தான். பழைய நினைவுகள் எழுந்தன. மனம் குமுறினான். "நானே லட்சாதிபதியின் பிள்ளை. பிச்சைக்காரனாகத் திரிகிறேன். காரணம் என்ன? தம்பிதானே? தம்பியிடம் உள்ள பாசத்தினால்தானே அப்பாவும் இப்படிப் பாரபட்சத்தோடு நடந்துகொள்கிறார்? நான் நாயாகத் திரியத் தம்பி மட்டும் ஏன் நன்றாக வாழ வேண்டும்?" இப்படி எண்ணியவனின் உள்ளத்தில் பகைமை உணர்ச்சி மூண்டு விட்டது.

அன்று இரவு சுவாமிநாதனின் வீட்டுக்குள் ஓர் உருவம் ஏறிக் குதித்தது. அது வேறு யாருமல்ல. தம்பியைப் பழி தீர்க்கத் துணிந்துவிட்ட சங்கமேசுவரன்தான். அவன் கையில் கத்தி மின்னியது. அவன் குதித்த இடத்தில் நல்ல வேளையாக யாரும் இல்லை. மெல்ல நடந்து சென்று அறைக் கதவைத் திறந்தான். கட்டிலில் யாரோ படுத்திருந்தார்கள். கத்தியை ஓங்கிக்கொண்டு அடி மேல் அடி வைத்து நடந்து சென்றான். திடீரென்று அவன் பார்வை எதிர்ச் சுவரின் மேல் விழுந்தது. அவன் அப்படியே அசைவற்று நின்றுவிட்டான். அப்படி அவனை நிற்கச்செய்தது, சுவரில் மாட்டியிருந்த புத்தர்பிரானின் திருவுருவப் படம்தான்.



'பொருளுக்கு ஆசை வைத்துப் பாவத்தைச் செய்யாதே. உலக மாயையை உண்மையென்று நம்பி ஏமாந்து போகாதே!' என்று புத்தரின் திருவுருவம் எச்சரிப்பது போல் தோன்றியது. திரும்பிப் பார்த்தான். அவன் தகப்பனாரின் உருவம்தான் அந்தக் கட்டிலில் கிடந்தது. நித்திரையில் ஆழ்ந்திருந்த அவரது முகம் நிஷ்களங்கமாக இருந்தது. அவர் தலைமாட்டில் ஒரு சிறிய பெட்டியிருந்தது. ஏதோ நினைத்துக்கொண்ட சங்கமேசுவரன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்த சுவடு தெரியாமல் வெளியே வந்தான். பெட்டியைத் திறந்து பார்த்தபொழுது அதில் ஒரு கடிதம் கிடைத்தது.

"அன்புக்குரிய மைந்தன் சங்கமேசுவரனுக்கு,

இதை நீ என்று படிக்கிறாயோ, அன்றைக்குத்தான் என் மனப் பாரம் குறையும். நான் மலேயாவில் அமரநாதர் என்ற வர்த்தகரிடம் கணக்குப் பிள்ளையாக இருந்தேன். அவருக்கு என்னிடம் அதிக நம்பிக்கையும் பிரியமும் உண்டு. அவரது மனைவி ஒரு வயது ஆண் குழந்தையை விட்டு விட்டுத் திடீரென்று இறந்து விட்டாள். மனைவி இறந்த வருத்தத்தில் அமரநாதர் படுத்த படுக்கையானார். அவர் உடல் கொஞ்சம் கொஞ்சமாக நலிந்துகொண்டே வந்தது. நான்தான் அவரது வியாபாரம் முழுவதையும் கவனித்து வந்தேன்.

ஒரு நாள் அவர் என்னை அழைத்து, 'சுவாமிநாதா! நான் இனிமேல் அதிக நாள் உயிரோடு இருக்க மாட்டேன். எனக்கு உற்றார் உறவினர் யாரும் கிடையாது. உன்னிடம்தான் நான் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறேன். என் குழந்தையையும் என் சொத்துக்களையும் உன்னிடம் ஒப்படைக்கிறேன். என் குழந்தையை உன் குழந்தை போல் வளர்க்க வேண்டும். அவனை உன் குழந்தை என்றே சொல்லிக்கொள்ள வேண்டும். பெற்றோர்கள் இல்லாத குறையை அவன் தெரிந்துகொள்ளக் கூடாது!' என்றார். இதைச் சொல்லி அவர் தம் குழந்தையையும் சொத்துக்களையும் என்னிடம் ஒப்படைத்தார். ஒப்படைத்த மறுநாளே அவர் இறந்தும் விட்டார்.

அவரது அருமை மகன்தான் உன் தம்பி சத்தியநாதன். அப்போது உனக்கு வயது மூன்று. உன் அம்மா உங்கள் இருவரையும் வித்தியாசமில்லாமல் வளர்த்தாள். உனக்கு ஐந்தாவது வயது நடந்துகொண்டிருந்த பொழுது உன் தாயார் இறந்து விட்டாள். வாழ்க்கையில் விரக்தி தோன்றவே, நான் வியாபாரத்தை நிறுத்திவிட்டேன். எல்லாச் சொத்துக்களையும் பணமாக்கிக்கொண்டு உங்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு இங்கே வந்து சேர்ந்தேன்.

சத்தியநாதனுக்குச் சொந்தமான சொத்தை நான் என் சொத்துப்போல் பாவித்து உனக்காகச் செலவழிப்பது துரோகமாக ஆகாதா? நீ பணம் கேட்கும் போதெல்லாம் என் மனம் எப்படி வருந்தியது என்பதை எழுத்தில் வடிக்க முடியாது. நான் உனக்குச் சமாதானம் சொன்னால் 'சத்தியநாதன் என் மகன் அல்ல' என்ற விஷயம் வெளியாகிவிடும். தான் தாய் தந்தையற்ற அநாதை என்பது தெரிந்தால் சத்தியநாதன் வருந்துவான். அவன் தந்தைக்கு நான் கொடுத்த வாக்குறுதி நிறைவேறாமல் போய்விடும். நீ ஏழையின் மகன் என்ற விஷயம் தெரியாததனால் கௌசல்யாவை உனக்கு மணம் செய்து கொடுக்க முன் வந்தார்கள் அவளது பெற்றோர்கள். பின்னால் நீ ஆஸ்தியில்லாதவன் என்று தெரிந்தால் உன்னை அவர்கள் அலட்சியம் செய்வார்கள். நான் ஏமாற்றி விட்டதாக என்னைத் தூஷணை செய்வார்கள். அதனால்தான் அவர்கள் சம்பந்தம் உனக்கு வேண்டாம் என்று தடுத்துவிட்டேன். இப்போது நீயே சொல், நான் பெற்ற மகனுக்குத் துரோகம் இழைத்தவன் ஆவேனா?

இப்படிக்கு,
சுவாமிநாதன்"

இதைப் படித்து முடித்த சங்கமேசுவரனுக்கு மெய் சிலிர்த்தது. 'அப்பா, நீங்கள் துரோகியல்ல, தியாகிதான்!' என்று உரக்கக் கூவினான். உடனே தன் தந்தையிடம் மன்னிப்புக் கோருவதற்காக வீட்டை நோக்கி ஓடினான். அவனது துரதிர்ஷ்டம் அவனை ஓட ஓடத் துரத்தியது. யார் வீட்டிலோ அன்று

இரவு ஒரு திருடன் திருடிக் கொண்டு போய் விட்டான். திருடனைத் துரத்திக் கொண்டு வந்த போலீஸ்காரர்கள் சங்கமேசுவரனைப் பிடித்துக் கொண்டார்கள். அவன் தோற்றம் அதற்குத் துணை செய்தது. இரண்டு மாதங்கள் அவன் சிறையில் இருந்தான்.

பிறகு அவன் மேல் குற்றம் ருசுவாகாததால் விடுதலையடைந்தான். திரும்பவும் வீடு சென்ற அவனுக்குத் துயரச் செய்தி ஒன்று காத்திருந்தது. அவன் தகப்பனார் இறந்து விட்டார் என்றும், தம்பி வீட்டையும் சொத்துக்களையும் விற்றுக் கொண்டு, தான் உத்தியோகம் பார்த்து வந்த இடத்துக்கே போய் விட்டான் என்றும் தெரிந்தது. பாவம், ஏமாற்றத்துக்கு மேல் ஏமாற்றம்! அவன் என்ன செய்வான்? மறுபடியும் ஊர் ஊராக அலைந்தான். புண்ணிய ஸ்தலங்கள் தோறும் சென்று கடவுளைத் தரிசித்து வரலானான்.

இதைச் சொல்லி முடித்த பெரியவர் கண்களைத் துடைத்துக் கொண்டார். அவர் சொன்ன வரலாறு வாசுதேவனின் கண்களை நீரால் நனைத்தது.

"குழந்தாய், நான் கூறிய இந்த வரலாற்றிலிருந்து மனிதன் சந்தர்ப்பக் கோளாறினால் எத்தகைய தவறுகள் செய்ய முற்பட்டு விடுகிறான் என்பது புரிகிறதல்லவா?" என்று கேட்டார்.

"பெரியவரே! நான் ஒன்று உங்களைக் கேட்கலாமா?" என்றான். பெரியவர் தலையசைக்கவே, "நீங்கள்தானே அந்த சங்கமேசுவரன்?" என்று கேட்டான் வாசுதேவன்.

இக்கேள்வியைச் சற்றும் எதிர்பாராத பெரியவர் சற்றுத் தடுமாறினார். பிறகு சிரித்துக்கொண்டு "ஆம்! நானேதான் அந்தச் சங்கமேசுவரன். இதை நீ எப்படிக் கண்டு பிடித்தாய்?" என்று வியப்புடன் கேட்டார்.

"பெரியப்பா! நான்தான் உங்கள் தம்பி சத்தியநாதனின் புதல்வன். என் அப்பா சாகும்போது என்னிடம் 'வாசுதேவா! உன் தாத்தா தன் சொத்துக்களையெல்லாம் என்பேருக்கே எழுதி வைத்து விட்டார். உன் பெரியப்பாவுக்கு ஒன்றுமே கொடுக்கவில்லை. அவரை அதிகம் படிக்க வைக்கவும் இல்லை. பாவம், அவர் மனம் நொந்து வீட்டை விட்டே ஓடி விட்டார். அவரைக் கண்டுபிடித்து அவருக்குச் சேர வேண்டிய பங்கை அவருக்கோ அல்லது அவர் குழந்தைகளுக்கோ நீ கொடுத்து விட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

"இதுவரையில் அவரது கட்டளையை என்னால் நிறைவேற்ற முடியவில்லை. இன்றுதான் அவர் ஆசை நிறைவேறியது. அப்பாவின் கூடப் பிறக்காவிட்டாலும் எனக்கு நீங்கள் பெரியப்பாதான். ஆகையால் என் சொத்தில் பாதியை நீங்கள் வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்" என்றான்.

இதைக் கேட்ட பெரியவர், தீயை மிதித்து விட்டவர் போல் துள்ளிக் குதித்து, "என்ன சொன்னாய்? உன் சொத்தில் பாதியை வாங்கிக் கொள்வதா? என்னை யாரென்று எண்ணினாய்? நான் சுவாமிநாதனின் பிள்ளையாக்கும்!" என்றார்.

அப்பொழுது வாசுதேவனின் இரு குழந்தைகளும் அங்கே ஓடி வந்தன. "இதோ என் செல்வங்கள்! இச் செல்வங்களைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாலே போதும்!" என்று சொல்லி அவர்களைத் தூக்கிக் கொண்டார்.

எழுத்தாளர்களுக்கு

* சிறந்த சிறுகதைகளுக்குக் 'கல்கி' எப்பொழுதுமே இடம் அளித்து வருகிறது: இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி வருகிறது என்பதை அறிவீர்கள்.

* கதை கட்டுரைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும்.


* 'கல்கி'க்கு அனுப்பப்படும் கதை கட்டுரைகளை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பியனுப்ப இயலாது. எனவே, அவற்றுடன் திரும்பிப் பெறத் தபால் தலைகள் வைத்து அனுப்ப வேண்டியதில்லை. நேயர்கள் அனுப்பும் கதை கட்டுரைகளுக்கு ஒரு நகல் எடுத்து வைத்துக் கொண்டு அனுப்புவதே நல்லது.

* கதை, கட்டுரைகள் அனுப்பிய நான்கு வாரத்துக்குள் காரியாலயத்திலிருந்து எவ்விதத் தகவலும் கிடைக்காவிட்டால், பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்று தெரிந்து கொள்ளலாம்.




சிங்கப்பூர்


பாக்யசாலிக் குழந்தை!
அனுபவமுள்ள அப்பா!
குழந்தைக்கு ஒரே குஷி! அவன் தகப்
பனர் எப்பொழுதும் ஜான்ஸனின்
பேபி பவுடர் வாங்கி வருகிறர். என்ன
குளுமை! என்ன மென்மை! அந்தக்
குழந்தையின் சருமத்திற்கு எவ்வளவு
இனிமையானது!
Johnson's
ஜான்ஸன்ஸ் பேபி பௌடர்
Johnson's
BABY
POWDER
இலவசம் குழந்தை பராமரிப்பு புத்தகத்
தின் இலவச பிரதிக்கு எழுதுங்கள். பெற்
றோர்களுக்கு வேண்டிய அநேக விஷயங்கள்
இதில் அடங்கியுள்ளன. சுலபமாகப்படித்து
புரிந்து கொள்ளும்படியான இங்கிலீஷ்
பாஷையில் எழுதப்பட்டுள்ளது.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்
பி.ஓ. பாக்ஸ் 1976, டிபார்ட்மெண்ட் 20
பம்பாய்



அத்தியாயம் 22

இந்துவின் சாட்சியம்

இந்துமதி அதுவரை தைரியமாகக் கொஞ்சங்கூடத் தயங்காமல் பதில் சொல்லிச் சமாளித்து வந்தாள். இப்பொழுது மட்டும் சற்றுத் தயங்கினாள். ஒருகண நேரம் கழித்துப் பேசிய போது அதில் தயக்கத்தின் சாயலே இல்லை. மிக நிதானமான குரலில் தெளிவாக உச்சரித்துப் பேசினாள். சிறிதும் பயமோ தயக்கமோ வெளியில் தெரிய வில்லை. ‘உண்மையைச் சொல்ல எனக்கு என்ன பயம்?’ என்று அவள் எல்லோரையும் பார்த்துக் கேட்பது போல இருந்தது.

‘எனக்கு அவரைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் ஒன்றுதான் அப்போது இருந்தது. வேறு எவ்வித சிந்தனையும் எழவில்லை. பின்னால் நான் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்று மிக வருந்தினேன்’ என்றாள்.

‘சரி! அப்படியே இருக்கட்டும். சொக்கையாவை ஏதோ ஒரு உருவம் கத்தியால் குத்தி விட்டு ஓடியதாகவும், நீங்களும் உடனே ஓடி வீட்டுக்குப் போய் விட்டதாகவும் கூறினீர்கள். அப்படியானால் நீங்கள் போலீசுக்குத் தகவல் தெரிவித்திருக்க வேண்டுமல்லவா? ஏன் அவ்வாறு செய்யவில்லை?’

‘எனக்கு இந்தமாதிரி ஒரு விஷயம் நேரக்கூடும் என்று தோன்றியதே கிடையாது. நான் கண்ட பயங்கரக் காட்சி என் அறிவையே பேதலித்துப் போகச் செய்து விட்டது. நான் வீட்டுக்கு ஓடி வந்த பிறகு ஒரே நடுக்கமாக இருந்தது. அன்றிரவே ஜுரம் வந்து விட்டது. எனக்குப் போலீஸுக்குத் தகவல் கொடுக்க வேண்டுமென்ற எண்ணமே தோன்றவில்லை!’

‘உங்கள் வளர்ப்புத் தந்தை மந்திரமூர்த்தியிடம் இதையெல்லாம் எப்போது கூறினீர்கள்?’

‘எனக்கு உடம்பு சரியான பிறகு, அதாவது இந்தச் சம்பவம் நடந்து நான்கு நாட்களுக்குப் பிறகு கூறினேன்.’

‘கடிதத்தை என்ன செய்தீர்கள்?’

‘என் தந்தை அதை எரித்து விட்டார்!’

‘நீங்கள் குற்றம் செய்ததாக அவர் நம்பியபடியால்தான், அவர் உங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று அதை எரித்து விட்டார் என்று நான் கூறுகிறேன். அது சரியா?’

‘நான் அந்தக் குற்றத்தைச் செய்யவும் இல்லை. என் தந்தை அவ்வாறு எண்ணவும் இல்லை!’

‘பின் ஏன் அவர் அந்தக் கடிதத்தை எரிக்க வேண்டும்?’

இந்துவின் முகத்தில் புன்னகையின் சாயை தோன்றியது. ‘என்மீது சந்தேகம் ஏற்பட இடமிருக்கிறது என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. அதனால் தான் எரித்து விட்டார்’ என்று அவள் கூறியபோது இவ்வளவு சிறிய விஷயம்

உங்களுக்குத் தெரியவில்லையா? நான் தான் கூறவேண்டுமா? என்று கேட்பது போலவே இருந்தது.

ஆனால் எனக்கு அளவிலாத சோர்வு உண்டாயிற்று. இந்து வழக்கை இன்னும் கடினமாகச் செய்துவிட்டாள். என் கால்களில் ஒரு தளர்ச்சி உண்டாயிற்று.

'இதைப் பற்றி நீங்கள் ரங்கதுரைக்குக் கடிதம் எழுதினீர்களா?'

'இல்லை.'

'ஏன்?'

'என் தந்தை எழுதக் கூடாது என்று என்னைத் தடுத்து விட்டார்.'

பிராஸிக்யூஷன் வக்கீல் அர்த்த புஷ்டி ததும்பும் புன்னகையுடன் ஜூரிகளை ஒருதரம் பார்த்துவிட்டு மறுபடியும் குறுக்கு விசாரணையைத் தொடர்ந்தார்.

'உங்களுக்குச் சொக்கையாவின் மீது விரோதம் உண்டா?'

'கிடையாது.'

'நல்ல எண்ணம் உண்டா?'

'கிடையவே கிடையாது!'

'அப்படியென்றால் என்ன பொருள் என்று விளக்கிக் கூற முடியுமா?'

'சொக்கையா ரொம்பப் பொல்லாதவர். யாருக்குமே அவரைப் பிடிக்காது. நான் அவர் வழிக்குப் போகாமல் ஒதுங்கிக் கொண்டேனே தவிர, அவரிடம் விரோதம் பாராட்டவில்லை.'

இந்துவின் தெளிவான பதில் மறுபடியும் எனக்கு நம்பிக்கையை வளரச் செய்தது.

ஆனால் வக்கீல் அவளை விடவில்லை. 'சொக்கையாவுக்கும் உங்கள் வளர்ப்புத் தந்தையான மந்திரமூர்த்திக்கும் நிலங்கள் சம்பந்தமான தகராறுகள் இருந்தனவா?' என்று கேட்டார்.

நமது கட்சி வக்கீல் நீலகண்டன் எழுந்து, 'வழக்குக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்த மிருப்பதாகத் தெரியவில்லை, மை லார்ட்!' என்றார் நீதிபதியைப் பார்த்து.

நீதிபதியும், 'இதன் அவசியம் எனக்குப் புரியவில்லையே?' என்றார்.

'குற்றவாளியின் மனத்தில் சொக்கையா மீது எப்படிப் படிப்படியாகத் துவேஷம் வளர்ந்திருக்க வேண்டும் என்று நிரூபிக்கவே இவைகளைக் கேட்கிறேன், மை லார்ட்!' என்றார் பிராஸிக்யூஷன் வக்கீல்.

'சரி! கேளுங்கள்' என்றார் நீதிபதி.

உடனே வக்கீல் இந்துவைப் பார்த்து, 'அதாவது உங்கள் தந்தைக்கும் சொக்கையாவுக்கும் நிலத் தகராறுகளும், அது சம்பந்தமாகக் கோர்ட் விவகாரங்களும் வெகு நாட்களாக இருந்து வந்தன என்பது உங்களுக்குத் தெரியுமா?'

'தெரியும்.'

'சொக்கையாவினால் உங்கள் வளர்ப்புத் தந்தை வறுமை நிலையடைந்தார் என்று சொல்வது உண்மைதானே?'

'உண்மைதான்.'

'உங்களுடைய உண்மைத் தந்தை காசிலிங்கத்துக்கும், சொக்கையாவுக்கும் ரொம்ப விரோதம் என்பதும் அப்போது உங்களுக்குத் தெரியுமா?'

'தெரியும்!'

'காலஞ்சென்ற ஜமீன்தாரைக் கொலை செய்தது உங்கள் உண்மைத் தந்தை காசிலிங்கம்தான் என்று சொக்கையா முதலில் குற்றம் சாட்டினார் அல்லவா?'

'ஆமாம்.'

'இதெல்லாம் உங்களுக்கு முதலிலேயே தெரியுமல்லவா?'

'தெரியும்!'

'உங்கள் தாயாரைப் பற்றிச் சொக்கையா கேவலமாகப் பேசியதுண்டா?'

அதுவரை தனக்கும் வழக்குக்கும் சம்பந்தமே இல்லாதது போல் அலட்சிய பாவத்துடன் பதில் அளித்து வந்த இந்து, யாரும் எதிர்பாராத வண்ணம் விம்மி விட்டாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி வழிந்தது.



ஒரு நிமிஷம் அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்றவள், பிறகு உடனே சமாளித்துக் கொண்டாள்.

'ஆம், பேசியதுண்டு' என்றாள்.

'உங்களுக்குச் சுசீலாதேவி என்று ஒரு வாத்தியாரம்மா இருந்தாரா?'

'ஆம்.'

'அவர் உங்களுக்குச் சொக்கையாவைப் பற்றி ஏதாவது எச்சரிக்கை செய்ததுண்டா?'

'உண்டு. சொக்கையா நல்ல நடத்தையுள்ளவரல்ல. நீ கூட அவன் கண்ணில் படாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று கூறினார்.'

'ஆகவே நீங்கள் சொக்கையா உங்களைச் சந்திக்க முயற்சி செய்யலாம் என்று எதிர்பார்த்தீர்கள் என்று கூறலாமா?'

'அப்படிச் சொல்ல முடியாது. அவர் வழிக்குப் போகாமல் ஒதுங்கியிருக்க வேண்டுமென்று நினைத்ததுண்டு.'

'சுசீலா தேவியைச் சொக்கையா பாதிரித் தோட்டத்தை வாங்கியதன் மூலம் அங்கிருந்து விரட்டி விட்டது உண்மைதானே?'

'உண்மைதான்!'

'அது உங்களுக்கு மிகவும் ஆத்திரமூட்டியது அல்லவா?'

'சுசீலாதேவி போகிறாரே என்று எனக்கு வருத்தமாக இருந்தது.'

'நான் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள்! சுசீலா தேவியைச் சொக்கையா சரியாக நடத்தவில்லை என்பதனாலும், உங்கள் தாயாரைப் பற்றி அவர் கேவலமாகப் பேசினார் என்பதாலும், உங்களுடைய கஷ்டங்களுக்கெல்லாம் அவர் காரணமாக இருந்தார் என்பதாலும் அவர்மீது உங்களுக்கு வெறுப்பும் கோபமும் ஏற்பட்டிருந்தனவா?'

'ஆம்!'

'இளைய ஜமீன்தார் தங்கபாண்டியனும், அவனுடைய நண்பனான ரங்கதுரையும் உங்கள் வீட்டுக்கு வரக்கூடாது என்று சொக்கையா தடுத்த விவரம் உங்களுக்குத் தெரியுமல்லவா?'

'தெரியும்.'

'உங்களுடைய வளர்ப்புத் தந்தை மந்திரமூர்த்தி தமக்குச் சொந்தமான இரண்டு வேலி நிலத்தையும் சொக்கையாவுக்கு விற்பதாக ஏற்பாடு செய்திருந்தார் அல்லவா?'

'ஆமாம்!'

'சொக்கையா அதை வாங்கியிருந்தால் நீங்கள் ரொம்பக் கஷ்ட தசையை அடைந்திருப்பீர்கள் அல்லவா?'

'ஆமாம்' என்றாள் இந்துமதி.






சமநிலைப் படுத்தும் பிரச்னை...

ஒரு பைசைகிள்மீது சமநிலையாக வீற்று சவாரி செய்வது சுலபமே. ஆனால் உங்கள் பைசைகிளின் விலையையும் அது கொடுக்கும் சேவையின் மதிப்பையும் சரிகட்டுவது அவ்வளவு சுலபமல்ல. மூலப்பொருள்களை மிகுந்த கவனத்துடன் தெரிந்தெடுத்து உபயோகித்து, தயாரிப்பு நிலையில் ஒவ்வொரு உறுப்பையும் கடுமையான பரிசோதனைக்கு உட்படுத்துவதால், ஸென்-ராலே பைசைகிள்கள் மிக நன்றாக உழைப்பது மட்டுமன்றி, செப்பனிடும் செலவும், புதுப்பிக்கும் செலவும் மிகக் குறைந்து, இதன் பயனாக, அவற்றின் விலைக்கு சரிசமானமான மதிப்புடையதாக விளங்குகின்றன.

ராலே
ராபின் ஹூட்

SEN-RALEIGH Products

SRC-39TM



சென்னை, இந்தியா மோட்டார் பார்ட்ஸ் அண்டு அக்ஸஸரிஸ் லிமிடெட்டின் உதவி அகௌண்டெண்ட் ஸ்ரீ எஸ். கே. ரெங்கராஜன், B. Com., A.C.A., அவர்களுக்கும் ஸ்ரீ ஏ. எம். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் குமாரி சௌ. கங்காவுக்கும் 16-5-56ல் சென்னையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. திருமணத்திற்குப் பல பிரமுகர்களும் நண்பர்களும் விஜயம் செய்து சிறப்பித்தனர். வாழ்க, மணமக்கள்!

'அவர் இறந்ததனால் அந்த நிலம் தங்கி விட்டதல்லவா?'

'ஆமாம்!'

'கடைசியாக இரண்டொரு கேள்விகள் கேட்டு விட்டு நிறுத்திக் கொள்கிறேன்' என்று நீதிபதியைப் பார்த்துப் பிராஸிக்யூஷன் வக்கீல் கூறினார். ஒரு நிமிஷம் யோசனை செய்து விட்டு இந்துவைப் பார்த்து, 'சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் நீங்கள் ரங்கதுரையை அதே பாதிரித் தோட்டத்தில் வந்து சந்தித்தீர்கள் அல்லவா?' என்று கேட்டார்.

'ஆம்.'

'முதல் நாள் மாலையும் பாதிரித் தோட்டத்துக்குப் போனதாகக் கூறினீர்கள் அல்லவா?'

'ஆம்!'

'அப்படியானால் தந்தப் பிள்ளையாரை முதல் நாளே நீங்கள் அங்கு எடுத்துப் போயிருந்திருக்கலாம் அல்லவா?'

'நான் முதல் நாள் எடுத்துக்கொண்டு போக வில்லை!'

'கடிதம் வந்த சமயத்தில் பிள்ளையார் கையிலிருந்தது என்று ஒப்புக் கொண்டீர்கள் அல்லவா?'

'ஆம்.'

'நீங்கள் அங்கே சென்ற வேகத்தில் பிள்ளையாரைக் கையுடன் எடுத்துச் சென்றிருக்கலாம் அல்லவா?'

'நான் அதை நல்ல நினைவுடன் தான் எடுத்துச் சென்றேன்.'

உடனே பிராஸிக்யூஷன் வக்கீல் நீதிபதியைப் பார்த்து, 'இதை விடக் குறைந்த காரணங்களுக்கு எல்லாம் கொலை நடந்திருக்கிறது மை லார்ட். எதிரிதான் குற்றவாளி என்பது நிரூபணமாகி விட்டது' என்று கூறி விட்டுச் சடாரென்று உட்கார்ந்து கொண்டார். எனக்கு என்ன தீர்ப்பு வருமென்று அப்போதே தெரிந்து விட்டது." அதை நான் காசிலிங்கத்திடம் கூறும் போதே எனக்கு நெஞ்சை அடைத்தது.

"ஆமாம்! ஒருவன் கொல்லப் பட்டால் அதற்கு ஏதேனும் ஆயுதம் உபயோகப் பட்டிருக்க வேண்டு மல்லவா? அதைப்பற்றி ஒன்றையுமே காணோமே?" என்று கேட்டார் காசிலிங்கம்.

"அது உண்மைதான். ஆனால் பிராஸிக்யூஷனுக்கு ஆயுதம் கிடைக்க வில்லை. அவர்கள் அதைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் தங்களுடைய திறமையைக் குறைத்துக் கொள்வதாக ஆகும். நமது கட்சியில் ஆயுதத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தால் அவர்கள் உடனே 'கடிதத்தை எரித்து ஒரு தடையத்தை மறைத்தவர்கள், ஆயுதத்தையும் வைத்துக் கொண்டிருப்பார்களா? அவளுடைய தந்தை அதையும் மறைத்திருப்பார்' என்று கூறுவார்கள். அதனால் அதைப் பற்றிப் பேச முடியவில்லை" என்றேன்.

"இந்துமதி உனக்குக் கொடுப்பதற்காகத் தந்தப் பிள்ளையாரை எடுத்துச் சென்றதாகக் கூறி யிருக்கிறாளே. அதைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்? வேண்டுமென்று கொலை செய்யப் போனவள் தடையம் ஒன்றை எடுத்துக் கொண்டு போவாளா?"

"நமது கட்சியில் அதைத்தான் வலியுறுத்தப் பார்த்தோம். அதற்காகத் தான் இந்துவையே சாட்சிக் கூண்டில் ஏற்றினோம். ஆனால் இந்து உண்மையைச் சொல்லி அதைக் கெடுத்து விட்டாள். கடிதம் வந்த போது தன் கையில் பிள்ளையார் இருந்தது என்றாள். ஆகவே அவள் அதைக் கையோடு மறந்து போய் எடுத்துக் கொண்டு போயிருந்திருக்கலாம் அல்லவா? எனக்குக் கொடுப்பதற்காகத்தான் அதை வைத்துக் கொண்டிருந்தாள் என்பது என்ன நிச்சயம்? ஏதோ கையில் வைத்துக்கொண்டு இருந்திருக்கலாம். அந்தச் சமயத்தில் சொக்கையாவிடமிருந்து கடிதம் வரவே, 'இதுதான் சரியான சமயம் பழி வாங்க' என்று நினைத்து உடனே ஓடிப் போயிருக்கலாம்; குற்றம் செய்யும் போது தவறிக் கீழே விழுந்திருக்கலாம். அல்லது அதற்கு

முதல் நானே போட்டிருக்கலாம். இது பிராஸிக்யூஷன் வாதம். அப்படித்தான் ஜூரர்களும் நினைப்பார்கள் அல்லவா?'' என்றேன்.

''ஏன் தம்பி! அப்படியே சொக்கையா உன் பெயரில் கடிதம் எழுதியிருந்தால் அவன் ஏதோ கெட்ட எண்ணத்துடன்தான் வரவழைத்திருக்க வேண்டுமென்று தெளிவாகத் தெரிகிறதே. அவன் விரித்த வலையில் இந்து அகப்பட்டுக் கொண்டு விட்டாள் என்று நாம் வாதாட வேண்டாமா?''

''அவர்கள்தான் சொக்கையா எழுதிய கடிதம் என்று தெரிந்துதான் இந்து அங்கே போனாள் என்று சொல்கிறார்களே. சொக்கையா தன்னைச் சந்திக்க விரும்புவார் என்று இந்து எதிர்பார்த்தாளென்று அவர்கள் நிரூபித்து விட்டார்களே. சுசீலாதேவி சொக்கையா விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லி எச்சரிக்கை செய்ததாக இந்து ஒப்புக் கொள்ளவில்லையா?''

''அட கடவுளே!''

''அதனால் இந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவனைக் கொன்றாள் என்று கூட நாம் வாதாட முடியாத நிலையிலிருக்கிறோம். மேலும் அது நம்முடைய நோக்கமில்லையே. இந்து நிரபராதி என்று நிரூபிப்பது தானே நம்முடைய நோக்கம்!''

''அதற்கு என்ன வழி?''

''அதுதான் எனக்கும் புரியவில்லை.''

''இது என்ன அக்கிரமம் தம்பி! எப்படியாவது அவளை விடுதலை செய்தேயாக வேண்டும்.''

''உண்மையில் குற்றம் செய்தவனைக் கண்டு பிடித்து ஒப்புக் கொள்ளச் செய்தால் ஒழிய இந்துவைக் காப்பாற்ற வேறு வழியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை'' என்றேன் அளவற்ற துயரத்தோடு.

காசிலிங்கம் மௌனமானார்.

* * *

அன்று மாலை நான் தங்கபாண்டியனைச் சந்தித்தபொழுது அவனுக்கு நல்ல ஜுரம் அடித்துக் கொண்டிருந்தது. டாக்டரை நானே சென்று அழைத்து வந்தேன். தங்கபாண்டியனுக்கு ஒரு பெரிய ரணசிகிச்சை நடந்திருந்தபடியால் அவனுக்கு ஜுரத்தைத் தாங்கும் சக்தியே இல்லை. டாக்டர் அவனுக்கு டைபாயிட் ஜுரம் என்று அபிப்பிராயப் பட்டார்.

மருந்தெல்லாம் எழுதிக் கொடுத்து விட்டு டாக்டர் போனார். பிறகு நான் மருந்து வாங்கிக்கொண்டு வர ஆளை அனுப்பிவிட்டுத் தங்கபாண்டியனுக்கு அருகில் உட்கார்ந்தேன்.

''இன்று காலை முதல் நீ எங்கே போனாய் ரங்கதுரை? சாப்பிடக் கூட வரவில்லையே?'' என்று கேட்டான் தங்கபாண்டியன்.

''இந்து சிறையில் தன்னந் தனியே உட்கார்ந்து தன் முடிவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும்போது வேறு எதைப் பற்றியாவது என்னால் சிந்திக்க முடியுமா பாண்டியா? அதே யோசனையாகத்தான் இருந்தேன்.''

''உன்னுடைய துயரம் எனக்குத் தெரியாதா? இந்துவைக் கட்டாயம் நீ விடுதலை செய்து அழைத்துக் கொண்டு வந்து விடுவாயென்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது, துரை!''

''அது எங்கே முடியப் போகிறது பாண்டியா? இந்துவை நிரபராதி என்று நிரூபிக்க இதுவரையில் எந்தச் சாட்சியமும் கிடைக்கவில்லை. ஹைகோர்ட்டில் விசாரணை ஆரம்பிக்க இன்னும் ஒரே வாரம்தான் இருக்கிறது. நம்பிக்கைக்கே இடத்தைக் காணவில்லையே. எனக்கு என்னமாக இதயம் பதைக்கிறது தெரியுமா? நிரபராதியான இந்து தண்டனை அடையப் போகிறாள். பாண்டியா! அவளைப் பற்றிய தீர்ப்பு வெளியான உடனேயே என் முடிவும் வெளியாகி விடும். நாங்கள் இந்த உலகில் ஒன்றாகச் சேர்ந்து வாழ முடியவில்லை என்றாலும் மறு உலகிலாவது கைகோத்துக் கொண்டு செல்ல ஆசைப்படுகிறேன். இந்துவுக்குத் தண்டனை நிறைவேற்றப் பட்டது என்பதை நான் காதால் கேட்க விரும்பவில்லை.'' எனக்கு உணர்ச்சி மிகுதியால் தொண்டையை அடைத்துக் கொண்டது.

தங்கபாண்டியனின் கண்கள் கலங்கின. ''ரங்கதுரை! நீ ஏன் இப்படி மனத்தைக் கலங்க அடித்துக் கொள்கிறாய்? கவலைப்படுவதால் எதையும் சரி செய்துவிட முடியாது. நானும் இந்தச் சமயத்தில் இப்படிப் படுத்துக் கொண்டிருக்கிறேனே என்றுதான் வருத்தமாக இருக்கிறது'' என்றான்.

''நீ என்ன செய்ய முடியும் பாண்டியா? எங்கள் விதி இப்படியாக வேண்டும் என்றிருந்தால் யார்தான் என்ன செய்ய முடியும்?'' என்று கூறும்போதே எனக்கு மளமளவென்று கண்களில் ஜலம் பொங்கி வழிந்து விட்டது.

''துரை! நீ எனக்கு எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிறாய். நாம் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலிருந்து என் மீது அன்புடன் நடந்து கொண்டிருக்கிறாய். எனக்குத் துணையாகவும், என் மனத்துக்கு ஒரு

பலமாகவும் இருந்திருக்கிறாய். எனக்குத் தைரியம் ஊட்டி மனிதனாகச் செய்தவன் நீதான். என் மாமா சொக்கையாவின் மரணத்தினால் உனக்கும், உன் இந்துவுக்கும் இப்படிப்பட்ட கஷ்டம் நேர்ந்து விட்டது. அதை நினைத்து நினைத்து என் மனம் ஆறவே மாட்டேன் என்கிறது. ரொம்ப வேதனையாக இருக்கிறது, துரை. நீ சாப்பிட்டு வா. உன்னுடன் எனக்குப் பேச வேண்டும்'' என்றான் தங்கபாண்டியன்.

''என் சாப்பாட்டைப் பற்றி நீ கவலைப்படாதே. இன்று நான் என் மாமனார் இட்ட விருந்தைச் சாப்பிட்டு விட்டு வந்திருக்கிறேன்'' என்றேன்.

''அப்படியா?''

''ஆமாம். கஞ்சி வடிக்காத சாதமும், புளித்த தயிரும்கூடப் பசிக்கு ரொம்ப நன்றாக இருந்தன.''

''மாமனார் என்று ஏதோ சொன்னாயே? ஓட்டலில் சாப்பிட்டாய் என்றல்லவா நினைத்தேன்?''

''இல்லை! இல்லை. என் சொந்த மாமனார் காசிலிங்கத்தைப் பற்றித்தான் கூறினேன்.''

தங்கபாண்டியன் திடீரென்று எழுந்து உட்கார்ந்து, ''என்ன? காசிலிங்கமா? அவர் உயிரோடிருக்கிறாரா?'' என்றான்.

அவனை மெதுவாகப் படுக்க வைத்துக் கொண்டே, ''பாண்டியா! இப்படி உடம்பை அலட்டிக் கொள்கிறாயே. உன்னிடம் நான் இதைக் கூறியிருக்கவே கூடாது. இங்கே ஒருவருமில்லாத சமயத்தில் உடம்பை அதிகமாக்கிக் கொண்டால் நான் எப்படி ஊருக்குப் போவது?'' என்று கேட்டேன்.

''அது கிடக்கட்டும். காசிலிங்கம் என்ன சொன்னார்?''

''என்ன சொல்வார்? மனம் முறிந்து போய், தான் செய்த தவறுகளையெல்லாம் எண்ணி வருந்துகிறார். இந்துவை நினைத்துப் புலம்புகிறார். அவரைப் பார்க்கவே வேதனையாக இருக்கிறது.''

''ஐயோ பாவம்! வேறு ஏதாவது விஷயங்கள் சொன்னாரா?'' என்று கேட்டான் தங்கபாண்டியன்.

''வழக்கின் விவரங்களையெல்லாம் விடாமல் சொல்லும்படி கேட்டார். இந்துவை விடுதலை செய்வதற்கு என்ன உதவி வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறார். ஆனால் அவர் என்ன செய்ய முடியும்? நிஜக் குற்றவாளியைக் கண்டு பிடிப்பது ஒன்றுதான் இந்துவை விடுதலை செய்ய வழியென்று கூறினேன். பாவம்! அப்படியே சிலை மாதிரி உட்கார்ந்து விட்டார்.''

''குற்றம் செய்தது யாரென்று அவருக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பதாகச் சொன்னாரா?'' என்று ஆவலுடன் கேட்டான் தங்கபாண்டியன்.

அதன் பிறகு காசிலிங்கம் கூறிய எல்லா விஷயங்களையும் விவரமாக அவனிடம் கூறினேன். அவர் தான் ஊகித்த மனிதர் யாரென்று கூற மறுத்து விட்டதையும் கூறினேன். தங்கபாண்டியன் கவனமாக எல்லாவற்றையும் கேட்டான்.

கடைசியில் அவனை ரொம்பச் சிரமப்படுத்தி விட்டதாக எனக்குத் தோன்றியது. ''இதை நினைத்து நீ கவலைப்படாதே, பாண்டியா. உடம்பைப் பார்த்துக் கொள்வதுதான் முக்கியம்'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றேன்.

நேற்றிரவு தங்கபாண்டியனுக்கு ஜுரம் அதிகமாயிற்று. இன்று முழுதும் அப்படியே இருந்தது. டாக்டர் ராவ் என்னைப் பார்த்து, ''நோயாளிக்கு இதயம் ஏற்கனவேயே பலஹீனம். ஒரு பெரிய ஆபரேஷன் வேறு செய்து கொண்ட உடம்பு. இப்போது ஜுரம் இவ்வளவு அதிகமாக இருக்கிறது. யாருக்காவது தெரியப்படுத்த வேண்டுமானால் உடனே செய்து விடுங்கள். என்னால் இயன்றவரையில் நான் முயற்சி செய்கிறேன்'' என்றார்.

எனக்கு அறிவே குழம்பி விடும்போலிருந்தது. 'தங்கபாண்டியன் இறந்து விட்டால்? ஐயையோ! அவனை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும். இந்தச் சமயத்தில்தானா இவனுக்கு இப்படி உடம்புக்கு வரவேண்டும்? கடவுளே! இப்படியெல்லாம் சோதனை செய்யலாமா?' என்றெல்லாம் என் மனம் புலம்பியது. அவனை விட்டு நகராமல் கவனித்துக் கொண்டேன்.

லக்ஷ்மியும் அவள் சின்னம்மாவும் நாகபுரியில் இருந்தனர். லக்ஷ்மியின் கணவனுக்குத் தங்கபாண்டியனின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது என்று தந்தியடித்தேன்.

* * *

தங்கபாண்டியனுக்கு நினைவு தவறி விட்டது. அவனுக்கு ஐஸ் வைத்துக் கொண்டே உட்கார்ந்திருந்தேன். ஆகவே காசிலிங்கத்தைச் சந்திக்க மறுபடியும் ஊமையன் கோட்டைக்குப் போக முடியவில்லை. பாவம்! அவர் என்ன எண்ணிக் கவலைப்படுகிறாரோ? தங்கபாண்டியனுக்கு என் அஜாக்கிரதையினால் ஆபத்து நேர்ந்து விட்டால் பிறகு, என்னை என்னால் மன்னித்துக் கொள்ளவே முடியாது.

தங்கபாண்டியன் நிலை சிறிதும் குணமடையவில்லை. நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருகிறது. (தொடரும்)



நவ பாரத தரிசனம்

3

ஔஷத ஆராய்ச்சிக்கு இன்றியமையாத பல சௌகரியங்கள் லக்ஷ்மணபுரியில் இருக்கின்றன. அங்கு சர்வகலாசாலை, வைத்தியப் பயிற்சி அளிக்கும் ஆஸ்பத்திரி முதலிய மற்றும் பல வசதிகள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, அப்போது உத்தரப் பிரதேசத்தின் பிரதமராக இருந்த ஸ்ரீ கோவிந்த வல்லப பந்த், விலை மதிக்க முடியாத சத்தர் மன்ஸிலை ஆராய்ச்சி நிலையத்துக்காக மனமுவந்து அளித்தார். அதனால் தான் மூலிகை ஆராய்ச்சி நிலையம் அமைவதற்குற்ற கௌரவம் லக்ஷ்மண புரிக்குக் கிடைத்தது.

* * *

ஔஷதங்கள் சம்பந்தப்பட்ட வரையில் இந்தியாவின் நிலைமை கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவோரின் கதையாக இருக்கிறது. அங்கு இதுவரையில் கண்டு பிடித்துள்ள ஔஷதங்கள் ஆச்சரியகரமான பலனைக் கொடுத்து வருகின்றன. அபூர்வ சக்தி வாய்ந்த ஏராளமான மூலிகைகள் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. அவற்றைக் கண்டு பிடித்து, பாரத மக்களுக்கு மாத்திரமல்ல, உலக மக்கள் யாவருக்கும் உபயோகமாக இருக்கும்படிசெய்வதே லக்ஷ்மணபுரி ஆராய்ச்சி நிலையத்தின் இலட்சியமாக இருந்து வருகிறது.

நூற்றைம்பது ஆண்டுகளாக அன்னியர் ஆட்சியில் அல்லல்பட்ட இந்தியாவில் பசியும் பிணியும் தாண்டவமாடி வருகின்றன. பிணியைத் தீர்ப்பதற்கான மருந்துகளுக்கு வெளி நாடுகளை எதிர்பார்க்க வேண்டி யிருக்கிறது. வருஷந்தோறும் பத்துக் கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மருந்துகள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாக வேண்டியிருக்கின்றன. மருந்துகளின் விலையோ ஒன்றுக்குப் பத்தாகி யிருக்கிறது. அவ்வளவு அதிக விலை கொடுப்பதற்கு இந்திய மக்களின் பொருளாதார நிலை இடம் கொடுக்கவில்லை. இந்த நிலையில் நோயாளிகளுக்குப் பாதகத்தை உண்டு பண்ணும் போலி மருந்துகள் எங்கு பார்த்தாலும் தாண்டவமாடுகின்றன.

எனவே, இந்தியாவில் ஔஷதங்கள் உற்பத்தியாக வேண்டியது எவ்வளவு அத்தியாவசியம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

ஒரு காலத்தில் பாரதநாடு ஔஷத உற்பத்தியில் எவ்வளவு சிறந்து விளங்கியது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட வேண்டியது அவசியமாகும். மிகப் பழைமையான ருக்வேதத்தில் ஆயுர்வேத வைத்தியத்தின் மகத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தியப் பச்சிலைகளின் மகிமை ஒரு காலத்தில் உலகம் முழுவதும் வியாபித்திருந்தது. பல்வேறு பச்சிலைகள் உற்பத்தியாவதற்கான பலவித சீதோஷ்ண நிலை உள்ள பிரதேசங்கள் இந்தியாவில் ஏராளமாக இருக்கின்றன. அபூர்வ மூலிகைகள் உற்பத்தியாகும் மலைப் பிரதேசங்களுக்கும் குறைவில்லை.

பண்டைக் காலத்தில் இந்தியாவிலிருந்து ரோமிய சாம்ராஜ்யத்துக்கு ஏராளமான மருந்து வகைகள் ஏற்றுமதியாகி வந்தன என்று சரித்திரம் கூறுகிறது. அதன் பலனாக ஏராளமான தங்கம் இந்தியாவுக்குச் சென்று விடுகிறது என்று ரோம் சாம்ராஜ்யத்தில் புகார்கள் எழுந்தனவாம்! அப்படியானால் இந்தியாவிலிருந்து எவ்வளவு ஔஷதங்கள் ஏற்றுமதியாகி வந்திருக்க வேண்டும் என்பதை நேயர்கள் ஊகித்து அறிந்து கொள்ளலாம்!

இந்தியாவில் அபூர்வமான மூலிகைகள் அபரிமிதமாக உற்பத்தியாகின்றன. அவற்றிலிருந்து நம் நாட்டுக்குத் தேவையான ஏராளமான ஔஷதங்களை உற்பத்தி செய்யலாம். ஆனால், அத்தகைய இயற்கைச் செல்வத்தை இந்தியா உபயோகப்படுத்திக் கொள்ளாதது மன்னிக்க முடியாத குற்றம் எனலாம்.

லக்ஷ்மணபுரி ஔஷத ஆராய்ச்சிநிலையத்தார், மூலிகைகளின் உபயோகத்தை ஆராய்ச்சி செய்வதுடன், அவ் விஷயமாக விஞ்ஞானிகள், சர்வகலாசாலைகள், கைத்தொழிற் சாலைகள் முதலிய பல ஸ்தாபனங்களுக்கும் ஆலோசனை கூறும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் அவர்களுடைய ஆராய்ச்சியின் பலனாக ஏராளமான மருந்துகள்





நம் நாட்டிலேயே உற்பத்தியாக வழி பிறக்கிருக்கிறது. அதன் பலனாக ஏழை மக்களும் மலிவான விலைக்கு மருந்துகள் வாங்குவது சாத்தியமாகி யிருக்கிறது.

இவர்களுடைய ஆராய்ச்சியின் சிறப்பையும் அற்புதமான பலனையும் பாராட்டி பிரிட்டிஷ் நப்பீல்ட் டிரஸ்ட் நிர்வாகிகள் மேற்படி நிலையத்துக்கு ஒரு லட்சம் பவுன் நன்கொடை யளிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்திய மூலிகைகளால் செய்யப்படும் ஔஷதங்கள் சரீர வேதனையைக் குறைக்கின்றன; பிணியை அகற்றுகின்றன; அகால மரணத்தை ஒழித்து ஆயுளை விருத்தி செய்கின்றன. மக்களுக்கு வரப்பிரசாதமாக உள்ள அப்படிப்பட்ட மூலிகைகளை உபயோகப்படுத்திக் கொள்ளாமல், மருந்துகளுக்குப் பிற நாடுகளை எதிர் பார்ப்பதைக் காட்டிலும் பைத்தியக்காரத்தனம் வேறு ஏதாவது இருக்க முடியுமா! அந்தப் பைத்தியக்காரத்தனத்தை ஒழிக்கவே லக்ஷ்மணபுரி ஆராய்ச்சி நிலையத்தார் அல்லும் பகலும் தொண்டு புரிந்து வருகிறார்கள்.

* * *

அங்கு உற்பத்தியாகும் ஔஷதங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக மேற்படி ஆராய்ச்சி நிலையத்தில் ஆயிரக்கணக்கான முயல்கள், எலிப் பன்றிகள், எலிகள், சுண்டெலிகள், பூனைகள், குரங்குகள், கோழிகள், ஆடுகள், புறாக்கள் முதலியவற்றைப் பராமரித்து வருகிறார்கள். அதாவது அவ்விதம் ஆயிரக்கணக்கான பிராணிகளின் குடும்பங்களை நிர்வகிக்க வேண்டிய விசித்திரமான பொறுப்பு அவர்களைச் சார்ந்திருக்கிறது!

அந்தப் பிராணிகளுக்குக் குறிப்பிட்ட நோய் ஏற்படும்படி செய்து, பிறகு அந்த நோயைத் தீர்க்கும் மருந்தைப் பிரயோகம் செய்கிறார்கள்.

அவற்றிற்கு ஏதாவது ரணம் ஏற்பட்டால் மனிதருக்குக் கொடுப்பது போல் அவைகளுக்கும் மயக்க மருந்து கொடுத்துத்தான் சிகிச்சை செய்கிறார்கள்.

காஷ்மீரிலிருந்து மாத்திரமே கிடைக்கும் ஓர் அபூர்வ மூலிகையைத் தருவித்து, முதல் தர நிபுணர்கள் அதை மாதக்கணக்காக ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

உலகத்திலேயே இரத்தக் கொதிப்பு நோய்க்கு ஈடு இணையற்ற ஔஷதமாக விளங்கும் சர்வதேசப் பிரசித்தி பெற்ற ஸர்ப்ப கந்தி மூலிகையின் மூலம் இன்னும் பல கொடிய நோய்களைத் தீர்க்கலாம் என்பதைக் கண்டு பிடித்து வருகிறார்கள்.


அதன் பலனாக உலகமே அதிசயித்துப் பாராட்டும்படியான வெற்றி கிடைக்கலாம் என்று மேற்படி ஆராய்ச்சி நிலைய அதிபரான டாக்டர் முகர்ஜி உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் கூறினார்.

அந்த நிலையத்தில் தேன் கடியிலிருந்து க்ஷய ரோகம் வரையில் பல நோய்களையும் தீர்ப்பதற்கான அபூர்வ மருந்துகளைக் கண்டு பிடித்து வருகிறார்கள்.

ஒரு மூலிகையை ஆராய்ச்சி செய்ய மூன்று வருஷங்கள் கூடச் செல்லுவது உண்டு என்று அந்த நிலையத்தைச் சேர்ந்த ஒரு நிபுணர் கூறினார். அதைக் கேட்டபோது அந்த நிபுணர்கள் திறமைசாலிகளாக மாத்திரமல்ல, பொறுமைசாலிகளாகவும் இருக்க வேண்டும் என்பதை நாங்கள் உணர்ந்தோம்.

அந்த நிலையத்தில் உள்ள பல அற்புத ஆராய்ச்சிகளையும் பார்த்துக் கொண்டு வரும் போது, ஒரு நிபுணர் செய்து காட்டிய விந்தைச் செயல் எங்களை யெல்லாம் திக்குமுக்காடச் செய்து விட்டது. அதாவது கறுப்புத் தவளை ஒன்றுக்கு அவர் ஒரு மருந்து ஊசி போட்டார். ஊசி போட்ட இரண்டு நிமிஷ நேரத்தில் அந்தத் தவளை சுத்த வெள்ளை நிறத் தவளையாக மாறிவிட்டது!

ஜீவராசிகளின் இயற்கை நிறத்தையே மாற்றக்கூடிய அபூர்வ சக்தி வாய்ந்த



அந்த மாய மருந்து ஊசி அந் நிலையத்தாரின் ஆராய்ச்சி அற்புதங்களில் ஒன்று என்பதில் சந்தேகம் உண்டா!

"இந்த மருந்தைக் கொண்டு கறுப்பு மனிதர்களைக் கூட வெள்ளையர்களாக மாற்றிவிட முடியுமா!" என்று கேட்டு வைத்தேன்.

"மனிதர் யாருக்கும் இன்னும் இந்த மருந்து ஊசியைப் போட்டுப் பரீட்சை செய்ய வில்லை" என்றார் அந்த நிபுணர், என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே.

'நீங்கள் முன் வந்தால் இந்த ஊசியைக் குத்திப் பரீட்சை செய்யத் தயார்' என்று அவர் கூறுவது போலிருந்தது.

அந்தப் பரீட்சைக்கு உட்பட நான் தயாராக இராததால், அந்த இடத்தை விட்டு மேலே நடந்தேன்.

எனினும் அந்தப் பரீட்சை என் சிந்தனையைக் கிளறத் தொடங்கியது!

தெனாலிராமன் கறுப்பு நாயை வெள்ளை நாயாக மாற்றும் முயற்சியில் தோல்வி



யடைந்த காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் எவ்வளவு வேற்றுமை!

ஒருவேளை எதிர்காலத்தில் அந்த மருந்தின் மூலம் கறுப்பு மனிதர்களை யெல்லாம் வெள்ளை மனிதர்களாக மாற்றி, பல நாடுகளில் நிலவி வரும் பாழும் நிறவேற்றுமையை அறவே ஒழித்து விடுவார்களோ, என்னவோ!

பல துறைகளிலும் இயற்கையை ஜயித்து வெற்றிக்கொடி நாட்டி வரும் விஞ்ஞான நிபுணர்கள், மனிதர்களின் நிறத்தையும் மற்ற ஜீவராசிகளின் இயற்கை நிறத்தையும் மாற்றுவதில் வெற்றி பெறலாம் அல்லவா! யார் கண்டார்கள்!

* * *

அடுத்தபடியாக, உலகத்துக்கு ஒரு புதுமையாக விளங்கும் பீர்பல் ஸாஹ்னி பூதத்துவ தாவர ஆராய்ச்சி நிலையத்துக்குச் சென்றோம். லட்சக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் பூமிக்குள் புதைந்து கிடக்கும் தாவரங்கள், பாறைகள், கற்கள் முதலியவற்றைப் பரிசீலனை செய்து அவற்றின் காலத்தை நிர்ணயிப்பதே மேற்படி ஆராய்ச்சியின் நோக்கமாகும். பூமிக்குள் இருக்கும் எண்ணெய், நிலக்கரி, உலோகங்கள் முதலியவற்றைக் கண்டு பிடிப்பதற்கு அந்த ஆராய்ச்சி மிகவும் உபயோகமானது.

அதனால்தான் அவ் விஷயத்தில் பர்மா ஆயில் கம்பெனியார் சிரத்தை கொண்டிருக்கிறார்கள். அத்தகைய ஆராய்ச்சி நிபுணர்களுக்கு அக் கம்பெனியார் பண உதவியும் செய்துவருகிறார்கள்.

அந்த ஆராய்ச்சி நிலையம் பாஞ்சாலத்தில் பிறந்த பீர்பல் ஸாஹ்னி என்ற விஞ்ஞான மேதையால் ஸ்தாபிக்கப்பட்டதாகும். அதற்காக ஸாஹ்னி தமது சொத்துக்களை, ஏன், தமது வாழ்க்கையையே அர்ப்பணம் செய்தார் என்று கூறலாம். அதற்கு உத்தரப் பிரதேச சர்க்கார் கட்டடமும் ஏராளமான நிலமும் நன்கொடையாக அளித்ததுடன், வருஷா வருஷம் மான்யமும் கொடுத்து வருகிறார்கள். அந்த நிலையத்துக்கு இந்திய சர்க்காரும் மான்யத் தொகை அளித்து வருகிறார்கள்.

விஞ்ஞான உலகில் சர்வதேசப் புகழ் பெற்ற ஸ்ரீ ஸாஹ்னியால் 1946-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்ட ஆராய்ச்சி நிலையம் அவரது அகால மரணத்துக்குப் பிறகு அவரது ஞாபகச் சின்னமாக விளங்கி வருகிறது. ஸ்ரீமதி ஸாஹ்னி தமது கணவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அந்த நிலையத்தைத் திறம்பட நிர்வாகம் செய்து வருகிறார்.

லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இருந்த தாவரங்கள், கற்கள் முதலிய பல சாதனங்கள் அந்த பூதத்துவ தாவர ஆராய்ச்சி நிலையக் காட்சியில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியாவிலிருந்தும் மற்றும் பல நாடுகளிலிருந்தும் ஸ்ரீ ஸாஹ்னி பல ஆண்டுகள் வரையில் பாடுபட்டுச் சேகரித்த நூற்றுக் கணக்கான அத்தகைய அபூர்வ சாதனங்களை அங்குள்ள காட்சியில் கண்டு அதிசயித்தோம்.

அந் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும் உலக பூகோள சரித்திரத்தைக் காட்டும் பிரும்மாண்டமான படங்கள் பார்ப்பவர்களைப் பிரமிக்கும்படி செய்கின்றன. கோடிக்கணக்கான வருஷங்களில் பூமி எப்படி எப்படி யெல்லாம் மாறி இன்றைய உருவத்தை அடைந்திருக்கிறது என்பதைக் காட்டும் படங்களைப் பார்க்கும்போது நம்மை நாமே மறந்து விடுகிறோம். கோடி வருஷங்களுக்கு முன் சமுத்திரமாக இருந்த பிரதேசங்கள் இன்று பாலைவனமாக மாறி யிருக்கின்றன. ஒரு காலத்தில் மனிதர் வாழ்ந்த பிரதேசங்கள் இன்று மகா சமுத்திரமாக மாறி யிருக்கின்றன.

அங்கு ஒரு பெரிய பாறை வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாறையில் என்ன அதிசயம் இருக்கிறது என்பதை நான் பார்க்க முற்பட்டபோது, அது தமிழ் நாட்டைச் சேர்ந்த திருவாக்கரையிலிருந்து கொண்டு வரப்பட்ட பாறை என்று தெரிய வந்தது.

அந்தப் பாறை ஆறு கோடி வருஷங்களுக்கு முன் ஒரு மரமாக இருந்த தென்றும், அந்த மரம் காலக்கிரமத்தில் பாறையாக மாறிவிட்ட தென்றும் ஆராய்ச்சியின் மூலம் முடிவு செய்திருக்கிறார்கள்!


அதுபோன்ற பாறைகள் திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த திருவாக்கரையில் இன்று கூட ஏராளமாகக் கண்டுபிடிக்கப் பட்டுவருகின்றன.

* * *

ஒரு காலத்தில் இருந்த மரங்கள் இன்று பாறைகளாக மாறியிருக்கும் அதிசயத்தைக் காண்கிறோம். கோடிக்கணக்கான வருஷங்


முன் இருந்ததை விட மேலானது
Orient
அமைதியாகச் சுற்றும் திடமான
விசிறி
நவீன பாணி
மேன்மையான ஸ்டீல்
இனாமல் பூச்சு
அதிகமாக காற்று
தரக்கூடியது
வலிமையான தயாரிப்பு


அதில் மூவகை செயல்!
உங்கள் பற்களை அதிக பத்திரமாகப் பாதுகாக்கிறது!
உங்கள் பற்களில் தொந்தரவு இல்லாமல் பாதுகாத்துக் கொள்க; உண்மையில் நல்ல பிரஷ் உபயோகியுங்கள்-கால்கேட் சாஸ்திரீயமாக அமைக்கப்பெற்ற நைலான் பல் பிரஷ்! அது உங்கள் பற்களை ஏன் அதிக பத்திரமாகப் பாதுகாக்கிறதென்றால்—
• அது மூவகைச் செயலுடையது - இடுக்குகளில் நுழைகிறது. பல்லின் உட்புறமும் வெளிப்புறமும் நன்கு துலக்குகிறது. ஈறுகளைப் பக்குவமாக உறுதிப்படுத்துகிறது
• அது மூடப்பட்டுள்ளது - சுகாதார முறையில் பிளாஸ்டிக் குழாயில்
• அது சாஸ்திரீயமான உருப்பெற்றது- மேலும் கீழுமுள்ள பின்பற்களை கலப முறையில் அதிக சுத்தமாக்குமாறு
• அது மிருதுவாகத் துலக்குகிறது- சன்னமான வெண்பகுதியைப் பாதிக்காது
கால்கேட்
டூத்பிரஷ் டீலக்ஸ்
COLGATE
ஆண்களுக்கு
பெண்களுக்கு
குழந்தைகளுக்கு
ஹார்ட், மீடியம், ஸாப்ட்
சுகாதார பிளாஸ்டிக் குழாயில்
TB6/7


என் சாண் உடம்பிற்கு
சிரஸே பிரதானம்
குளிர்ச்சி
நறுமணம் மற்றும்
கேச சிங்காரம்
டி.எஸ்.ஆர்
★ சந்தனாதித் தைலம்
★ அரகஜா
★ அரைக்கீரை விதைத் தைலம்
★ கோகுல் ஹேர் ஆயில்
டி.எஸ்.ஆர் & கோ.
கும்பகோணம்
சென்னை நகருக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள் : கராஜ் ஏஜன்ஸிஸ், 18, ராயப்பேட்டை ஹைரோடு ○ கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல்ஏஜண்டு : B. பாலபட்டாபி, (ஸ்தாபிதம் 1932), வைசியாள் தெரு, கோயமுத்தூர்
கல்கத்தாவில் கிடைக்குமிடம் : கோகுல் ஸ்டோர்ஸ், 179/1, லான்ஸ் டவுன் ரோடு, கல்கத்தா-26

களுக்கு முன் வளர்ந்த மரம் செடி கொடி தாவர வர்க்கங்களுக்கும் இன்றைய தாவர வர்க்கங்களுக்கும் உள்ள எல்லையற்ற வேற்றுமையை அங்குள்ள படங்களிலிருந்து நாம் உணர முடிகிறது. அங்குள்ள ஒரு பெரும் பாறை பதினேந்து கோடி வருஷங்களுக்கு முன் இருந்தது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.



இதை யெல்லாம் பார்த்த போது இயற்கையின் மர்மங்களுக்கு எல்லையே இல்லை யென்று தோன்றியது. கற்களும் கட்டடங்களும் காலத்தினால் சிதிலமாக்கப்பட்டு அழிந்து போவதைக் காண்கிறோம். கற்களின் கதியே அப்படி யெனில், மரங்கள் மக்கி மண்ணாகி விடுவதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் மேலே குறிப்பிட்ட மரங்களோ வெனில், காலத்தை வென்று விட்டன. வருஷங்கள் ஆக ஆகக் கெட்டியாகிப் பாறையாக மாறி விட்டன!

அந்த நிலையத்தில் நடந்து வரும் ஆராய்ச்சியை உலக நாடுகள் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் கவனித்து வருகின்றன. மூன்று ஆண்டுகளுக்கு முன் அந்நிலையத்துக்காக நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தைப் பண்டித ஜவாஹர்லால் நேரு திறந்து வைத்த போது, பெல்ஜியம், அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளிலிருந்தும் பூதத்துவ தாவர ஆராய்ச்சி நிபுணர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

எங்களை மேற்படி நிலையத்தின் எல்லா இடங்களுக்கும் தாமே நேரில் அழைத்துச் சென்று, அங்கு நடைபெற்று வந்த பல்வேறு ஆராய்ச்சிகளையும் மிகுந்த அக்கறையுடன் விவரித்துக் கூறிய ஸ்ரீமதி ஸாஹ்னிக்கு நன்றி செலுத்தி விட்டு, அங்கிருந்து புறப்பட்டோம்.

* * *

ஐந்து வருஷத் திட்டப்படி உத்தரப் பிரதேசம் கிராமப் புனருத்தாரண அலுவல்களில் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதையும் நேரில் பார்க்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.

லக்ஷ்மணபுரியிலிருந்து சுமார் முப்பது மைல் தூரத்தில் உள்ள பக்ஷி – கா – தாலாப் பயிற்சி ஸ்தலத்தைப் பார்வையிடுவதற்காகச் சென்றோம். பக்ஷி - கா - தாலாபில், விவசாயம், தோட்ட வேலை, மரம் செடி கொடிகள் பாதுகாப்பு, கோழி, மாட்டுப் பண்ணை, மீன் வளர்ப்பு, பொதுஜன ஆரோக்கியம், கூட்டுறவு, பஞ்சாயத்து, சமூதாயம், கல்வி முதலிய பல துறைகளிலும் ஏராளமானவர்களுக்குப் பயிற்சியளிக்கிறார்கள். அவ்விதம் பயிற்சி பெற்றவர்கள் யாவரும் கிராமங்களுக்குச் சென்று புனருத்தாரண வேலைகளில் ஈடுபடுகிறார்கள்.

அவர்களால் அவ்விதம் பல கிராமங்கள் சீர்திருத்தப்பட்டிருக்கின்றன. மாதிரி வீடு, மாட்டுத் தொழுவம், சமையல் அறை, பண்ட அறை, ஸ்நான அறை, கக்கூஸ் முதலியவைகளைக் கட்டி, அவைகளைச் சுத்தமாகவும், ஆரோக்கியத்துக்குக் குந்தகம் நேராமலும் எப்படி வைத்துக் கொள்வது என்பதை எல்லோரும் எளிதில் அறிந்து கொள்ளும்படி காட்டி யிருக்கிறார்கள். குறைந்த செலவில் அவற்றைக் கட்டுவதற்கான வழிகளையும் காட்டியிருக்கிறார்கள். அவை தகுந்த வசதிகளுடன் நிர்மாணிக்கப் பட்டிருக்கின்றன. அத்தகைய கிராமங்களில் ஒன்றான அர்ஜுனபுரிக்கு பக்ஷி - கா - தாலாப் தலைமை அதிகாரி ராம் தாஸ் எம். ஏ. பி. எஸ்ஸி. பி. எச்.டி. எங்களை அழைத்துச் சென்றார்.

அந்தக் கிராமத்தில் ஐந்நூறு ஜனங்கள் வரையில் வசிக்கிறார்கள். முக்கிய சாலையிலிருந்து தங்கள் கிராமத்துக்குக் கிராமவாசிகளே ரஸ்தா போட்டிருக்கிறார்கள். கிராமவாசிகள் ஏழைகளாயினும் வீடுகளை மிகச் சுத்தமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கிராமத்தில் வாரத்தில் ஒரு நாள் சந்தை நடக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அங்கு கல்வி அளிக்கவும், வைத்திய வசதிக்கும் வழி செய்திருக்கிறார்கள். நாடகம், சங்கீதம், பஜனை முதலிய பொழுது போக்குகளுக்கும் தகுந்த வசதி செய்திருக்கிறார்கள். (தொடரும்)



குறையும் நிறையும்

சத்தியகிரி ராஜன்

சுட்டெரிக்கும் வெய்யிலையும், தகிக்கும் அனல் காற்றையும் பொருட்படுத்தாது ஓடிக் கொண்டிருந்தது பாஸஞ்சர். திருச்சியிலிருந்து மதுரை செல்லும் எண்ணற்ற பிரயாணிகளில் ஒருவனாக நடராஜனும் அமர்ந்திருந்தான். அந்தப் பெட்டியிலிருந்த மற்றவருக்கும் அவனுக்கும் எவ்வளவு வேறுபாடு! ஓயாது சளசளவென்று பேசிக் கொண்டிருந்தனர் பிரயாணிகள். ஒவ்வொருவருக்கும் அவரவர் கவலை! மற்றவர் பேசுவதைக் கேட்பதைவிட, அவர்களிடம், தாம் பேசி, அவர்களைக் கேட்கச் செய்யவேண்டும் என்ற துடிப்போடு ஒவ்வொருவரும் அடுத்தவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர், ஆவலை அடக்கிக்கொண்டு. ஆனால் நடராஜனோ அந்தச் சூழ்நிலையிலேயே இல்லை. அவன் போய்ச் சேருவதற்கு முன்பே அவன் மனம் மதுரை போய்ச் சேர்ந்து விட்டது.

மதுரையிலே அவனுக்குக் கிடைக்கப் போகும் வரவேற்பு! ஐயோ! அவனால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அவனைக் கண்டதும் அவனுடைய அத்தை எவ்விதம் கதறப் போகிறாளோ! அவன் மாமா!... என்ன இருந்தாலும் ஆண் பிள்ளையல்லவா! சகித்துக் கொண்டு விடுவார். ஆனால் மாலா...! இதோடு எப்படி அவளெதிரே போய் நிற்பது!

குனிந்து தன் வலக்காலைப் பார்த்தான் நடராஜன். முழங்கால் மூட்டுக்குக் கீழே மரம்! அவனுடைய இடது கால் செய்யாத அடாத செயலை வலது கால் என்ன செய்து விட்டது!

"ஸார்! அந்தக் கம்பை எடுத்துப் பெஞ்சுக்குக் கீழே போட்டுக்கிடுங்க. இடைஞ்சலாக இருக்குது" என்றார் ஒரு பிரயாணி.

மத்தியில் கிடந்த ஊன்றுகோலைப் பெஞ்சுக்குக் கீழே தள்ளினான் நடராஜன். ஊன்றுகோல் மத்தியில் இருப்பது அவர்களுக்கு இடைஞ்சல். ஆனால் அவனோடு கூடவே அவன் வாழ்வு முழுவதற்கும் அது இருந்தாக வேண்டுமே! அவனுக்கு ஆதரவாகவா! இல்லை, தானாத் துயர் ஊற்றாகவா! ஐந்தாண்டுகளுக்கு முன் இதே வழியில் மதுரையிலிருந்து திருச்சி சென்றபோது அவன் இதையெல்லாம் எதிர்பார்த்திருந்தானா! எல்லோரையும் போலவே அவனும் அன்று இரண்டு கால்களோடுதான் சென்றான். ஆனால்...மன உளைச்சல் தாங்காது சாய்ந்தான் நடராஜன். அவன் மன வானிலே கடந்த கால நிகழ்ச்சிகள் மின்னலாகத் தோன்றி மறைந்தன.

★

மானாமதுரையில் சுந்தரேச அய்யரின் ஒரே மகனாகப் பிறந்தான் நடராஜன். நம் நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடையாக நிற்பது ஜனப்பெருக்கம்தான் என்று இன்று அரசியல் தலைவர்கள் கூறுகிறார்களே! அதை இருபத்தாறுண்டுகளுக்கு முன்பே உணர்ந்தவன் போல, அவன் உயிர் ஜனித்ததும் அவன் தாயின் உயிரை வாங்கி விட்டான் காலதேவன். எனவே, நடராஜன் தந்தையின் அன்புப் பிரவாகத்தில் திளைத்து வளர்ந்தான். பள்ளிப் படிப்பு முடிந்ததும், அவனுடைய பிடிவாதத்தின் பயனாக, சுந்தரேச அய்யரின் சொற்ப நிலங்கள் பணமாகி, அவனைப் பட்டதாரி ஆக்கியது. அதற்குள் சுந்தரேச அய்யர் தமது வீட்டை மட்டும் பிள்ளைக்கு வைத்து விட்டு மனைவியின் மார்க்கத்திலே சென்று விட்டார்.

தனியனான நடராஜனுக்கு உறுதுணையாக வந்து சேர்ந்தாள், மதுரையிலிருந்த அவனுக்கு அத்தை முறையுள்ள அம்மாள் ஒருத்தி. சுந்தரேச அய்யரின் பெரியப்பாவின் மகளான அந்த அம்மாள் இதுகாள் வரை அவன் வீட்டுக்கு வந்தது கிடையாது. இப்போது உற்றார் உறவினரில்லாமல் தனியாகத் தவிக்கும் நடராஜனுக்கு ஆறுதல் தரவேண்டி வந்தாள்.

நடராஜனை மதுரையில் வந்திருக்கும்படி கேட்டுக் கொண்டாள். அவன் அத்தை காமாக்ஷியம்மாளின் கணவரான சாம்பசிவமும் பல இடங்களில் அவனுக்கு வேலைக்காகச் சொல்லி வைத்தார். அதற்கு மேல் சாதாரண பாங்குக் குமாஸ்தாவான அவரால் என்ன செய்ய முடியும்! அத்தை வீட்டில் நடராஜன் நுழைந்த அன்று...

கூடத்து ஊஞ்சலில் ஆடிப் பாடிக் கொண்டிருந்த பன்னிரண்டு வயதுச் சிறுமி, குதித்தோடி உள்ளே நின்றாள். நீண்ட பின்னல், குறுகுறுப்பான கண்கள், அதரங்களிலே முறுவலிப்பு—இவற்றுடன் சொகுசாக நின்றுகொண்டிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்த பிறகுதான், நடராஜனுக்கு அவன் அத்தையின் திடீர்ப்பாசம், உபசரிப்பு இவற்றின் காரணம் விளங்கியது. வேலை கிடைக்கும் வரையில் மாலாவின் ஆசிரியராக வேலை பார்க்க ஆரம்பித்தான் நடராஜன். எவ்வளவு நாட்களுக்குத்தான் அவர்களுக்குப் பாரமாய் இருக்க முடியும்! இந்திய ராணுவத்தினர் அவனுக்குக் கைகொடுத்து உதவினார்கள்.

காமாக்ஷியம்மாளின் வேண்டுகோளையும், சாம்பசிவத்தின் விருப்பத்தையும், ஏன்! மாலாவின் அன்புக் கோரிக்கையையும்கூட மீறி நடராஜன் நாகபுரிக்குப் பயணமானான்.

ஐந்தாண்டுகள் கழிந்து இன்று மதுரை திரும்புகிறான் நடராஜன். இல்லை, திருப்பி

அனுப்பப்படுகிறான். ஆம்! இன்று அவன் ராணுவத்துக்கு ஓர் உதவாக்கரை. அவனை அவ்விதம் ஆக்கியதும் ராணுவ சேவைதான். எவ்வளவோ கதறினான் 'ஜீப்' டிரைவரைப் பார்த்து, மெதுவாக ஓட்டும்படி. இவனைக் கேலி செய்துவிட்டு முன்னால் சென்று கொண்டிருந்த ஜீப்பைத் துரத்திக் கொண்டு அறுபது மைல் வேகத்தில் பறந்தான் அந்தக் குஜராத்தி டிரைவர். அவனுள்ளே ஏதோ ஒரு வெறி. நடராஜன் பதறினான். பயன்! அந்த மூர்க்கனின் வெறி அவனையே பலி கொண்டு விட்டது. நடராஜனின் வலது கால் பறி போய்விட்டது. இவனுக்கு ஏற்பட்ட ஊனத்துக்கு நஷ்டஈடாகக் கிடைத்த பணமும், சேமிப்பு நிதியிலிருந்து கிடைத்த பணமும் சேர்ந்து ஐயாயிரம் ரூபாய் நடராஜன் கைக்குக் கிடைத்தது.

ஆனால் அவன் மனத்துக்குக் கிடைத்தது என்ன! ஐயாயிரம் ரூபாய் அவன் மனத் துயரைப் போக்கிவிடுமா! ராணுவ சேவைக்கு அவன் தகுதியற்றவனாக ஆகிவிட்டது போல, சமூகத்தில் வாழ்வதற்கும் அவன் தகுதியற்றவன் ஆகி விட்டானே! மூட்டுக்குக் கீழே இரத்த ஓட்டமும் உணர்ச்சியும் இல்லாத மரக்கால்! ஆனால் மாளாத்துயரமும், தாளாத் துன்பமும் குமிழியிட்டுச் செல்லும் உணர்ச்சி அலைகளைக் கொண்ட உள்ளம் நெகிழ்ந்து, துடிக்கிறது. அவனைப் பல துறைகளிலும் அலைக்கழிக்கிறது.

அவன் வாழ்வின் மையக்கோலாக இருக்கும் அவன் உள்ளத்தின் ஊனம் எத்தகையது! இந்த நிலையிலே அவனுக்கு மதுரைக்குப் போகவே விருப்பமில்லை. ஆனால் அவன் என்ன செய்வான்! இராணுவ அதிகாரிகள் மூலம் தகவல் அறிந்த காமாக்ஷி அம்மாள் சாம்பசிவத்தின் கடிதமூலம் இட்ட அன்புக் கட்டளைக்குப் பணிந்து மதுரை செல்லும்படியாகி விட்டது. அதற்காக மட்டுமா!...சே! என்ன நினைவு! விபரீதமான ஆசை! அவன் நிலையை மீறி மனம் பறந்து தாவுகிறதே!

★

ஜட்காவிலிருந்து இறங்கிய நடராஜனின் உள்ளத்தில் ஆயிரம் உணர்ச்சிகள்! வேதனை, சுய சிந்தனை ஆகப் பல. அவன்மீது அவனுக்கே ஒருவித வெறுப்பு ஏற்பட்டது. ஏதோ குற்றம் செய்து விட்டு, மன்னிப்புக் கேட்கும் பாவனையில் நுழைவது போல், உடலும் உள்ளமும் குறுகி, வேதனை வழிந்தோடும் இதயத்தோடும், கலக்கத்தைக் காட்டும் முகத்தோடும் ஊன்றுகோலின் ஓசையோடும் அத்தை வீட்டுக்குள் நுழைந்தான்.

ஓசை கேட்டு மாலா சமையலறையிலிருந்து வெளியே வந்தாள். ஆச்சரியத்தால் திகைத்துநின்றனர் இருவரும். ஒரு கணம் நடராஜனின் உள்ளம் 'மாலா!' என்று அலறியது. ஆனால் நா எழவில்லை. மாலாவும் அதே நிலையில்தான் நின்றாள். 'அத்தானா! ஐயோ! அத்தான்!' என்று ஓலமிட்டது அவள் மனம். பரபரப்புடன் உள்ளே சென்று தாயுடன் திரும்பினாள்.

காமாக்ஷியம்மாள் நடராஜனைக் கண்டதும் அயர்ந்து நின்று விட்டாள்.

"நடராஜா! இதற்காகத்தானா எங்களை விட்டுப் போனாய்!" என்று கண்களில் நீர் சோரக் கேட்டாள் அத்தை.

"இல்லை, அத்தை! இதனால்தான் உங்களிடம் வந்திருக்கிறேன்" என்று வேதனை பீறிட்டு விம்மினான் நடராஜன்.

என்ன இருந்தாலும் நடராஜனால் முன் போல் கலகலப்பாக அவர்களுடன் பேசிப் பழக முடியவில்லை. அவர்களோடு அவனை ஒட்ட விடாது தடுத்தது என்ன! அவனுக்கு ஏற்பட்டு விட்ட ஊனமா!

★

நடராஜன் மதுரைக்கு வந்து இரண்டு வாரங்கள் ஓடி மறைந்து விட்டன.

மாலா அவனோடு எதிர் நின்று பேசுவதில்லை. நடராஜன் காரணம் புரியாமல் விழித்தான். இதழ் விரிந்து, மணம் பரப்பும் மலராக மாறி விட்டதால் உண்டான நாணம் காரணமாகப் பேசாமல் இருக்கிறாளா! அல்லது அங்கஹீனனான அவன்மேல் ஏற்பட்டு விட்ட அருவருப்பினால் பேசாமல் இருக்கிறாளா!

நடராஜன் தன்னைத்தானே நிந்தித்துக் கொண்டான். அவளைப் பற்றி இவன் ஏன் நினைக்கிறான்! அத்தான் என்னும் முறை மட்டும் இருந்தால் போதுமா! அவன் அவளது கைப்பிடிக்கத் தகுதியுள்ளவனாக இருக்க வேண்டாமா! நொண்டியை அவள் மணந்து கொள்வாளா! விபத்து அவன் காலைத் தான் பறித்துச் சென்றதே யொழிய, உணர்ச்சிக் கடலான அவன் மனத்தைத்தான் அவனுடனேயே விட்டு வைத்து விட்டதே!

அவனுக்குத் தன் எதிர்காலமே ஒரு பெரும் புதிராகத் தோன்றியது. நீண்ட நாட்களாக நடராஜன் எது நடக்கும் என்று அறிந்திருந்தும் நடக்கக்கூடாது என்று விழைந்தானோ, அது ஒருநாள் நடந்தே விட்டது. அது வேறு ஒன்றும் இல்லை. மாலாவைப் பெண் பார்க்க



வெள்ளிக்கிழமை யன்று ரகுராமன் என்பவர் வருவதாக இருந்ததுதான்.

நடராஜன் பெருமூச்செறிந்தான். உரிமையை இழக்க அவன் மனம் ஒப்பவில்லை. ஆனால் அவன் தகுதியை இழந்து விட்டானே! ஐயோ! ஏன் அவன் உள்ளத்தையும், உணர்ச்சியையும் இழக்காமல் இருக்கிறான்!

அவனுக்கு அன்று வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. யாரை நொந்து என்ன பயன்! மாலாவைத்தான் நோக முடியுமா! அவன் நல்ல நிலைமையிலிருந்தால் கால் ஊனமுள்ள பெண்ணொருத்தியைக் கைப்பற்ற விரும்புவானா! இவனுக்காக மாலா தன் வாழ்வைப் பாழாக்கிக் கொள்ள வேண்டும் என்று இவன் விரும்புவது நியாயமாகுமா!

ஏன்! அவளை 'ய கேட்டு விட்டால் என்ன! சே! என்ன நீழ்த்தரமான சுயநலம்!

தனக்கு அவளை மணந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும், அம்மாதிரி விருப்பமே இல்லை போல் காட்டி, அவளுக்கு ஆறுதல் கூறிக் கண் நிறைந்த கணவனோடு அனுப்பி வைப்பதல்லவா பெருந்தன்மை!

தன்னை நிலைப்படுத்திக் கொண்டான் நடராஜன். பெண் பார்க்க அவர்கள் வரும் போது, இடையில் இருந்து கொண்டு தடங்கலாக விளங்க விரும்பவில்லை. எனவே சாப்பிட்டதும் வெளியே புறப்பட்டு விட்டான்.

இரவு எட்டு மணிக்கு வீடு திரும்பிய நடராஜன், கவலை தோய்ந்த முகத்தோடு காட்சியளித்த அத்தையையும் மாமாவையும் கண்டு திடுக்கிட்டு விட்டான்.

அவன் பாழும் மனத்தின் குரூர விருப்பம் ஈடேறி விட்டதா! அழகுத் தெய்வமான மாலாவைப் பிடிக்கவில்லையா அந்த அசடனுக்கு!

"என்ன அத்தை!"

"அவர்கள் வரவே இல்லையப்பா! ஏனென்று தெரியவில்லை!"

நடராஜன் தன் அறைப் பக்கம் திரும்பினான்.

"நடராஜா!"—சாம்பசிவம் அழைத்தார். "என் இன்ஷ்யூரன்ஸ் பணம் வந்து விட்டது. எனக்குத் தேவையேற்பட்ட பொழுது உன் ஐயாயிரம் ரூபாயை எடுத்துக் கொடுத்தாயே, அதை உன் சொந்தக் கணக்கு ஏற்படுத்தி எங்கள் பாங்கியில் கட்டி விடலாமா!" என்றார்.

நடராஜனின் முகம் கலங்கியது. "மாமா! அதிலே இரண்டாயிரம் ரூபாயை மாலாவின் கலியாணத்துக்கு என்னுடைய அன்பளிப்பாக எடுத்துக் கொள்ளுங்கள்!" என்றான்.

"நடராஜா!" என்று ஏக காலத்தில் அத்தையும் மாமாவும் கூவினர்.

தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டான் நடராஜன். எங்கும் பரவியிருந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு அவன் செவிகளை மாலாவின் விம்மல் தாக்கியது. அவன் மனம் கரைந்தது. என்ன செய்வது! அந்த நேரத்தில் அவளிடம் இவன் செல்வது முறையல்லவே! ஆகவே மனத்தை அடக்கிக் கொண்டு படுத்துக் கிடந்தான்.

மறுநாள் அவன் தன் அறையிலே உட்கார்ந்திருந்த பொழுது அவன் அறையைத் தாண்டி அவனைப் பார்த்தவாறே மாலா சென்றாள்.

"ஏன் மாலா! என்னுடன் பேச உனக்கு விருப்பமில்லையா!"

"அத்தான்!"

மாலா அவ்விதம் அழைத்தது நடராஜனைத் திணற அடித்தது. நிலைப்படுத்திக்கொண்டான். மாலா விம்மினாள், மூந்திய இரவு போலவே!

"மாலா! ராத்திரி முழுதும் அழுதாயா! இதற்கெல்லாம் அழுவார்களா! அவர்கள் ரயிலைத் தவற விட்டிருப்பார்கள். இல்லை. வேறு ஏதாவது முக்கிய வேலை வந்திருக்கலாம். இன்னொரு நாள் வந்துவிட்டுப் போகிறார்கள்" என்று சமாதானப்படுத்தினான்.

"அத்தான்!" இப்போது மாலாவின் விம்மல் வலுத்தது.

"என்ன, மாலா!"

"நான்தான் நேற்று அம்பாளை வேண்டிக் கொண்டேன்......அதனால்தான்......"

"என்ன வேண்டிக் கொண்டாய்!"

"அத்தான்! என் கலியாணத்துக்கு இரண்டாயிரம் ரூபாய் தருவதாக அப்பாவிடம் சொன்னீர்களல்லவா! அது போதாது."

"அப்படியானால்......"

"ஐயாயிரம் ரூபாயும் வேண்டும், அத்தான்!"

"அப்படியானால் நான்......"

"என் அப்பா வைத்திருக்கும் சொத்து பூராவும் உங்களுக்குத்தான்" என்று கூறி விட்டு மாலா நாணத்தோடு ஓடி விட்டாள்.

நடராஜன் மனம் குளிர்ந்துபோனான். இதன் பொருள் என்ன! மாலாவுக்கு அவன்மேல் இத்தனை தணியாத பாசமா! அவள் ஊனம் அவள் கண்களை உறுத்தவில்லையா! மாலாவின் வார்த்தைகளை நினைந்து மகிழ்ந்தான் நடராஜன். எவ்வளவு சூசகமாகத் தெரிவித்து விட்டாள், அவள் தன் விருப்பத்தை! ஆனால்... அவன் அத்தையும், மாமாவும் சம்மதிப்பார்களா! சிறு குழந்தையான அவளுக்கு என்ன தெரியும்! அவள்தான் கூறி விட்டாள் என்றால் இவன் ஏன் அதற்காக மகிழ வேண்டும்!

கூடத்துக்கு வந்த நடராஜன் திகைத்துப் போய் நின்றான்.

"வேண்டாம், சாஸ்திரிகளே! கார் மோதி அவன் கை முறிந்ததற்கும் எங்கள் மாலாவுக்கும் என்ன சம்பந்தம்! அதற்காக மாலாவின் அதிர்ஷ்டம் கட்டையாகி விடுமா! கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்தது எங்கள் மேல் தவறு. நீங்கள் வேறு வரனும் பார்க்க வேண்டாம். அந்த வரனே வந்தாலும் வேண்டாம். எங்கள் நடராஜன் இருக்கும் பொழுது......" என்று சொல்லிக் கொண்டிருந்தாள் காமாக்ஷியம்மாள்.

இந்தப் பேச்சைக் கேட்டபின் இனி யார்தான் திகைக்காமல் இருப்பார்கள்! நடராஜனது ஊனத்தைப் பொருட்படுத்தாமல் அவனிடத்தில் நிறையே கண்டு அவனை அடைய மாலா செய்த விரதத்தின் மகிமையாகத்தான் இருக்க வேண்டும்! இல்லாவிட்டால் மாலாவின் தாய் தந்தையரின் மனம் இப்படி மாறுவானேன்! இதை நினைந்த நடராஜனுக்குத் தன் ஊனம் தீர்ந்து விட்டதுபோலத் தோன்றியது.

மாலாவின் மாறாத அன்பைப் பெற்றுவிட்ட பின் நடராஜனுக்குக் காலில்லாக் குறையின் நினைவு எங்கே வரப் போகிறது!



பிரயாணம் ஒன்று செய்ய வேண்டியிருந்தால், விமானப் பிரயாணத்தையே முதலில் சிந்தியுங்கள். விமானப் பிரயாணம்மிகத் துரிதமானது. அவசரத்திற்கு சரியான நேரத்தில் போய்ச்சேர சிலசமயம் விமானப் பிரயாணம்தான் சாத்தியமான ஒரே ஒரு வழி. ஒரு நீடித்த பிரயாணத்தின் களைப்பைத் தவிர்ப்பதோடு, விமானப் பிரயாணம் எவ்வளவு துரிதமாயும், சுகமாயும் சௌகரியமாயுமிருக்கிறது!

இந்தியன் ஏர்லைன்ஸ்

கார்ப்பரேஷன்

5 & 6, மவுண்ட் ரோடு, மதராஸ்

டெலிபோன் : 86481 (4 லைன்கள்)

IAC. 3370 (a)



பிரிவினைக் கதை

ராஜாஜி

ஒரு செட்டியார் நான்கு பிள்ளைகளை விட்டுவிட்டு இறந்து போனார். குமாரர்கள் எல்லாருக்கும் வயது ஆகி விவாகமாகி நான்கு மனைவிமார்களும் வீட்டுக்கு வந்து எல்லாரும் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள்.

நான்கு மனைவிகளுக்குள் சண்டையும் சச்சரவும் அடிக்கடி உண்டாகும். சிறு விஷயங்களைப் பற்றி என்று புருஷன்மார் அவற்றைக் கவனிக்கவில்லை. கவனித்தாலும் மனைவிகள் சமாதானமடைய மாட்டார்கள். தினமும் ஏதாவது ஒரு சிறிய சச்சரவு இருந்து கொண்டேயிருக்கும். இரவில் யாருக்குமே சரியாக உறக்கமில்லை.

இரவும் பகலும் அந்த வீட்டில் நடக்கும் சச்சரவு பக்கத்து வீட்டார்களுக்கெல்லாம் கஷ்டமாக இருந்தது.

தகப்பனார் ரொம்ப சொத்து வைத்து விட்டுப் போயிருந்தார். பணமும் நகைகளும் பெட்டிகளில் போட்டுப் பத்திரமாக ஒரு அறையில் வைத்திருந்தார்கள். இதன் மேல் ஒரு கன்னக்கோல் திருடனுக்கு ரொம்ப நாளாகக் கண். ஆனால் அவனுக்குச் சரியான சந்தர்ப்பம் சிக்கவில்லை. இரவில் அந்த வீட்டில் யாரேனும் இருவர் மூவர் சண்டை போட்டுக் கொண்டே இருந்தபடியால் எல்லாரும் விழித்தே இருந்தார்கள். திருடனுக்கு அவகாசம் ஏற்படவில்லை.

மூத்த சகோதரன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் தம்பிகள் கேட்கவில்லை.

"நாம் பிரிந்துபோனால்தான் சவுகரியம். இந்தப் பெண்கள் தினமும் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். பிரிந்து போனோமானால் இது அடங்கும்" என்று வாதாடிக் கொண்டே வந்தார்கள்.

இதற்கு இன்னது செய்வது என்று தெரியாமல் மூத்தவன் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தான்

பிறகு ஒருநாள் அவன் மனைவி "இந்தச் சள்ளை தீர்ந்தால் நல்லது. பிரித்துக் கொடுத்து விடுங்கள்" என்று சொன்னாள். அவனும் அதுவே சரியென்று வருத்தத்துடன் தீர்மானித்தான்.

சொத்துக்களைப் பிரித்துக் கொண்டு தொட்டி வீட்டையும் நான்காகப் பிரித்து, செங்கல் சுவர்கள் எழுப்பி விட்டு வெவ்வேறாகச் சமையலும் குடித்தனமும் செய்ய ஆரம்பித்தார்கள்.

பக்கத்து வீட்டுக்காரர்கள், "அப்பா அடா! நிம்மதியாயிற்று. இனி தூங்கு



வோம். இரவில் இனி இரைச்சல் இல்லை!" என்று சந்தோஷப்பட்டார்கள்.

* * *

ஒருவாரம் எல்லாரும் சுகமாக 'கப்சிப்' என்று வாழ்ந்தார்கள்.

திருடன் "இதுதான் சமயம்" என்று தீர்மானித்தான்.

அமாவாசை கழிந்து இரண்டாம் நாள்- ஞாயிற்றுக்கிழமை, - திருடர்களுக்கு அது நல்ல திதியும் வாரமும் - அந்த இரவு இரண்டு மணிக்குச் சரியாகத் திருடன் கன்னம் வைத்தான். எல்லாரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு கஷ்டமும் தடையுமில்லாமல் திருடன் புதிதாகப் போட்டிருந்த சுவர்களில் செங்கல் பெயர்த்து எடுத்துவிட்டு எல்லாருடைய அறைகளிலும் ஒன்றன் பின் ஒன்றாகப் பிரவேசித்தான். கதவுகளை உள்ளிருந்து திறந்து விட்டுப் பெட்டிகளைத் தூக்கித் தூக்கி வெளியே இருந்த தன் கூட்டாளிகளிடம் கொடுத்து விட்டுப் பணம் நகைகள் எல்லாவற்றையும் வெளியேற்றிவிட்டான். காரியமெல்லாம் முடிந்தபின், மூத்தவனுடைய சமையலறையில் பெரிய திருடன் புகுந்து அங்கிருந்த சோறும் ஊறுகாயும் எடுத்து வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டுச் சத்தம் செய்யாமல் போய் விட்டான்.

காலையில் எழுந்து பார்த்தார்கள். "ஐயோ!" என்று நான்கு மனைவிகளும் கதறினார்கள்.

ஊராருக்குக் கொஞ்சம் சந்தோஷமே. இந்தச் செட்டிமார்களின் செல்வத்தைப் பார்த்து அவர்களுக்கு வெகுநாட்களாக ஓரளவு பொறாமையாக இருந்தது.

மகிழ்ச்சி யடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அனுதாபப் பேச்சு பேசினார்கள்.


"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
சண்டைகள் எத்தனையிருந்தாலும்
ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
பிரிவினை செய்துகொண்டால்
பின்னனைவர்க்கும் கேடே
அனைவர்க்கும் கேடே"

என்று ஊர்க் குழந்தைகள் பாரதி பாட்டை மாற்றிப் பாடினார்கள்.

ஒரு காக்கை வீட்டுக்கு மேல் உட்கார்ந்து கொண்டு, "தெரிந்ததா? தெரிந்ததா?" என்று கத்திக் கொண்டிருந்தது.

நான்கு மனைவிகளும் ஒரு மூலையில் தலைமேல் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து அழுது கொண்டிருந்தார்கள்.





எச்சரிக்கை!

ரோலக்ஸ் வாட்சுகள் வாங்கும்பொழுது கவனிக்க வேண்டியது

சரியான நேரம், உன்னத வேலைப்பாடு, சிறந்த தரம் இவைகளுக்கு பெயர்போன ரோலக்ஸ் வாட்சுகள் உலகம் முழுவதும் புகழ் பெற்று விளங்குகின்றன. ஒரு ரோலக்ஸ் வாட்ச் வாங்க வேண்டுமென்ற உங்கள் விருப்பத்திற்கு அதன் புகழே காரணம். அதே காரணத்தினால் "நீங்கள் நிஜ ரோலக்ஸ்தான் பெறுகிறீர்கள் என உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்" என நாங்கள் வற்புறுத்துகிறோம்.

ரோலக்ஸ் கம்பெனியினுடையவை எனக்கூறி மட்டரகமான வாட்சுகளை விற்க முயலும் நாணயமற்ற வியாபாரிகள் எங்குமிருக்கிறார்கள். ஆனால் ரோலக்ஸ் ட்ரேட் மார்க்குகள், இவர்களிடமிருந்து உங்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கின்றன. ரோலக்ஸ் வாட்சுகள் வாங்கும்பொழுது இந்த ட்ரேட் மார்க்குகள் இருக்கின்றனவா என்று கவனித்தால் மட்டும் போதும்!

இந்த அடையாளம் கொண்ட வாட்சுகள் மட்டுமே ரோலக்ஸ் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டவை

ரோலக்ஸ்: நேரத்தை நிர்ணயிக்கும் கலையின் அதிசய சாதனை

ட்யூடர்: ரோலக்ஸ் இனத்தைச் சேர்ந்த ஒரு பிரசித்தி பெற்ற வாட்ச்

ஜெனக்ஸ்: எல்லோர் சக்திக்கும் ஏற்ற விலை கொண்டது

அசல் ரோலக்ஸ் வாட்சைத்தான் பெறுகிறீர்களா என வாங்கும்பொழுது உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

ரோலக்ஸ் வாட்ச் கம்பெனி (ஈஸ்டேர்ன்)
ப்ரைவேட் லிட்.

R. 3345





பாஸ்! பாஸ்! எல்லோரும் பாஸ்!

கோடை விடுமுறை முடிந்து பள்ளிக்கூடமும் திறந்தாகி விட்டது. பையன்களின் பரீட்சை முடிவும் போட்டு விட்டார்கள். இவ்வளவு நாள் விடுமுறையைச் சந்தோஷமாகக் கழித்ததற்குத் திருஷ்டி பரிகாரமாக 'ரிஸல்ட்' போட்ட அன்றைக்குத் துக்க தினமாக ஆக்கவேண்டாம் என்று ஹெட்மாஸ்டர் எல்லாப் பையன்களுக்குமே பாஸ் போட்டு விட்டார். பாலுவும் மற்றப் பையன்களோடு சேர்ந்து ரிஸல்ட்டைப் பார்த்தான். பாஸ் என்று இருந்தது. அவனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. 'நான் பாஸ்; நீ பாஸா?', 'எல்லோரும் பாஸ்' என்ற பையன்களின் சப்தம் வானைப்பிளந்தது. பொதுவாகப் பள்ளிக்கூடம் திறந்ததினம் மத்தியானம் லீவு விடுவது வழக்கமாகையால் பையன்களுக்கெல்லாம் லீவு கிடைத்தது. சாதாரணமாக, இரண்டு மாதம் லீவு அனுபவித்தது கூட அவ்வளவு குஷி இல்லை. மறுபடியும் பள்ளிக்கூடம் திறந்து வந்தவுடனே விடும் லீவுதான் அவர்களுக்கெல்லாம் தாங்க முடியாத சந்தோஷத்தை உண்டாக்கியது.

சந்தோஷத்தில் பள்ளிக் கூடத்திலிருந்து இரைச்சல் போட்டுக் கொண்டு வந்து கொண்டிருந்த பாலு வழியில் ஒரு மாம்பழ மரத்தைக் கண்டான். சுவரில் ஏறி இரண்டு பழங்களைப் பறித்தான். இதைத் தோட்டக்காரன் பார்த்து விட்டு, "பிடி அவனை விடாதே! இரண்டு பழங்களைத் திருடி விட்டான்" என்று கத்தவே பாலு ஓட்டமெடுத்தான். தோட்டக்காரனின் குரல் அங்கு போய்க் கொண்டிருந்த போலீஸ்காரர் காதில் விழுந்தது. அவர் பாலுவை வேகமாக ஓடித் துரத்தினார். இரண்டு பேரும் ஓடினார்கள். போலீஸ்காரருக்கு மூச்சு வாங்கி விட்டது. பாலுவும் போலீஸ்காரருக்கு எப்படி 'டிமிக்கி' கொடுக்கலாம் என்று யோசனை செய்த வண்ணம் ஓடினான்....போலீஸ் இன்ஸ்பெக்டர் சங்கரன் ஏதோ கவலையுடன் அப்பொழுதுதான் வெளியில் கிளம்பிக் கொண்டிருந்தார். சட்டென்று பாலுவுக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

"இன்ஸ்பெக்டர் மாமா, உங்கள் பையன் பாஸ். அதைச் சொல்வதற்குத்தான் ஓடி வந்தேன். இந்தாருங்கள்; அந்தச் சந்தோஷச் செய்தியைக் கொண்டாட ஒரு மாம்பழமும் உங்களுக்குக் கொண்டு வந்தேன்" என்று அவர் கையில் கொடுத்தான். இன்ஸ்பெக்டருக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை.

"நானும் என் பையன் 'ரிஸல்ட்' பார்க்கத்தான் பள்ளிக்கூடம் கிளம்பினேன்.



என் பையன் இன்னும் ஊரிலிருந்து வரவில்லை. நீ நல்ல சேதி கொண்டு வந்தாய்" என்றார் இன்ஸ்பெக்டர்.

கான்ஸ்டேபிள் இன்ஸ்பெக்டர் வீட்டு வாசலிலேயே வெகு நேரம் காத்திருந்தார். இன்ஸ்பெக்டர் கான்ஸ்டேபிளைப் பார்த்து, "டேய் '311' இந்தப் பையனை என் மோட்டார் சைக்கிளில் ஜாக்கிரதையாக அவன் வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு வா" என்றார்.

கான்ஸ்டேபிள் முகம் அசடு வழிய மோட்டார் சைக்கிளை ஓட்டினார். பாலு ஒன்றுமே நடக்காதது மாதிரி பக்கத்தில் அமர்ந்திருந்தான்.

— குமார்

இளைத்துப் போன யானை!

சுவாமிநாதன்

நாட்டு வைத்தியர் நாகப்பனுடைய மருந்துகள் அந்த ஊரில் மிகவும் பிரசித்தமாக இருந்தன. அவர் மருந்தைச் சாப்பிட்டவுடன் சாப்பிட்டவரின் முகம் பலவிதமான கோணலாக மாறிக் கடைசியில் புன்சிரிப்பில் வந்து முடியும்.

இப்படியே எல்லோருடைய முக பாவங்களையும் பல வகையிலும் மாற்றிக் கொண்டே வைத்தியர் நாகப்பன் காலம் தள்ளி வந்தார். ஒருநாள் அவர் தம் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, ஒரு பருமனான ஆசாமி வந்து "வைத்தியர் நாகப்பன் நீங்கள்தானா?" என்று கேட்டார். "ஆமாம்; என்ன வேண்டும்?" என்று கேட்டார் வைத்தியர்.

"என் பருமனைக் குறைக்க ஏதேனும் மருந்து இருக்கிறதா? நான் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன்" என்றார் வந்தவர்.

"எவ்வளவு நாட்களாக இப்படிப் பருமனாக இருக்கிறீர்கள்?"


"பத்து வருஷங்களாகப் பருத்துக் கொண்டே வருகிறேன். வரவரப் பருமன் அதிகமாகிறது. கடைசியில் இது எதில் போய் நிற்குமோ, தெரியவில்லை" என்றார் அந்த ஆசாமி. வைத்தியர் இரண்டு மாத்திரைகளைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்து விழுங்கச் சொன்னார். வந்தவர் அதை வாங்கிச் சாப்பிட்டார்.

சில நாட்கள் சென்றன. வைத்தியம் அவருக்குப் பலிக்கவில்லை.

'இவர் பருமனைக் குறைத்துவிட்டுத் தான் மறு காரியம் பார்ப்பேன். இல்லாவிட்டால் வைத்தியர் நாகப்பன் என்ற பெயரை மாற்றிக்கொண்டு விடுகிறேன்' என்று சபதம் பூண்டார் வைத்தியர். உடனே ஆராய்ச்சிகள் செய்து பல பச்சிலை மூலிகைகளை ஒன்று சேர்த்து ஒரு பெரிய பாத்திரத்தில் இரவு பகல் தூக்கமில்லாமல் மருந்தைக் காய்ச்சி இறக்கினார். இந்த மருந்து மட்டும் வெற்றியானால் நாம் ஏராளமாகச் சம்பாதித்து விடலாம் என்று நினைத்தார் வைத்தியர். அந்த மருந்தை ஒரு கல் தொட்டியில் ஊற்றிச் சில தினங்கள் வரையில் தெருவில் சூரிய வெளிச்சத்தில் காய வைத்தார். பிறகு அதைப் புட்டிகளில் ஊற்றி வைத்தியத்துக்கு உபயோகப் படுத்த விரும்பினார். மருந்துப் பாத்திரத்தை நான்கு பேர்களாகத் தூக்கிக் கொண்டு போய் வாசலில் உள்ள கல் தொட்டியில் ஊற்றினார்கள். வழக்கம்போல் இந்த மருந்து கசக்கவில்லை. நல்ல இனிப்பாகவே இருந்தது.

சரியான வெய்யிலில் காய்ந்தது. ஊரே வறண்டு போயிற்று. ஒரு நாள் அந்த ஊர்க் கோயில் யானையை அந்தத் தெரு வழியே யானைப்பாகன் அழைத்து வந்தான். யானைக்குத் தாகம் தாங்க முடியவில்லை. எதிரில் எது அகப்பட்டாலும் குடித்துவிடத் தயாராயிருந்தது அந்த யானை. வைத்தியர் வீட்டு வாசலில் இருந்த கல் தொட்டியைப் பார்த்து விட்டு ஓடோடியும் வந்து ஒரே உறிஞ்சலில் அதைக் காலி செய்து விட்டது. யானைப்பாகன் இதைக் கவனிக்கவில்லை. அவன் அருகில் இருந்த கடை ஒன்றில் சோடா சாப்பிட்டுக் கொண்டிருந்தான். தொட்டி மருந்தையும் குடித்த யானை மெள்ள அப்பால் நடக்க ஆரம்பித்தது.

சில மணி நேரத்துக்குள் யானையின் பருமன் குறைய ஆரம்பித்தது. யானைப் பாகனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. 'யானை இளைத்து எறும்பாகப் போயிற்று' என்ற கதையாக முடிந்து விடுமோ என்று பயந்தான் பாகன். யானை துரும்பாக இளைத்துப் போன செய்தியை அறிந்த ஊரார் கூட்டமாக வேடிக்கை பார்க்க வந்தார்கள். அவர்களுக் கென்ன? பருமனாக இருந்தாலும் வேடிக்கை பார்ப்பார்கள். துரும்பாகப் போனாலும் வேடிக்கை பார்ப்பார்கள். இளைத்தாலும் பருத்தாலும் யானை யானைதானே?



நாட்டு வைத்தியர் நாகப்பன் தம்முடைய வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வெளியில் வந்து மிகுந்த ஆவலுடன் தொட்டியைப் போய்ப் பார்த்தார். தொட்டி காலியாகக் கிடப்பதைக் கண்டதும் அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. தம் கண்களை ஒரு தரம் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தார். தொட்டியில் சொட்டு மருந்து கூட இல்லை. வெறும் தொட்டிதான் இருந்தது. இந்த அதிர்ச்சியிலேயே அவருடைய உடல் பருமன் குறைய ஆரம்பித்து விட்டது.

தம்முடைய ஆட்களைக் கூப்பிட்டு, "தொட்டியில் இருந்த மருந்து எங்கே!" என்று கேட்டார். அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் வியப்புடன் பார்த்தனர். அவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. திரு திரு என்று விழித்தனர்.


வைத்தியர் ஒரு தரம் தொட்டியைப் பார்த்தார். பிறகு தம்முடைய ஆட்களைப் பார்த்தார். வீட்டுக்குள் சென்றார். பிறகு திரும்பி வெளியில் வந்தார். 'எந்தப் பயல் என் மருந்தைத் திருடியது?' என்று கத்திக் கொண்டே தெருவில் கூடியிருந்த கூட்டத்தினருகே வந்து சேர்ந்தார்.

'அது என்ன மருந்து?' என்று எல்லோரும் வைத்தியரைப் பார்த்துக் கேட்டார்கள்.

"பருமனைக் குறைக்கப் புதிய ஆராய்ச்சியின் பயனாக ஒரு மருந்து கண்டு பிடித்தேன். அதை வாசலில் காய வைத்திருந்தேன் ... ஒரு சொட்டுக்கூட இல்லை" என்று சொன்னார்.

அப்பொழுது அங்கு வந்த வாண்டுப் பயல், "மாமா, யாரும் திருடவில்லை. இந்த யானைதான் அதைக் குடித்து விட்டது. நான் பார்த்தேன்" என்றான்.

"அப்படியா விஷயம்?" என்று கேட்டுக்கொண்டு யானையிடம் சென்றார். விஷயத்தைத் தெரிந்து கொண்ட யானைப்



முயல்:— அந்த போர்டு உனக்கு எழுதி வைக்கவில்லை; நீ வேகமாக நடந்து வா!


பாகன் ஓடி வந்து, "வைத்தியரே! உம்மை விடேன், பாருங்கள். இந்த யானையைப் பழையபடி பருமனாக்கினால் தான் உம்மை விடுவேன். இல்லாவிட்டால் இந்த யானையின் விலையைக் கொடுத்து விடவேண்டும்" என்றான் கோபமாக.

வைத்தியருக்கு ஒன்றும் புரியவில்லை. "இந்த மருந்து பருமனை நிச்சயம் குறைக்கிறது என்று இந்த யானையிலிருந்து தெரிகிறது. அதனால் கொஞ்ச நாள் பொறுங்கள். மறுபடியும் மருந்தைக் காய்ச்சிக் கொல்லைப்புறம் சூரிய வெளிச்சத்தில் தயார் செய்கிறேன். பிறகு அதை விற்று வரும் பணத்திலிருந்து யானைக்கு வேண்டிய ஆகாரத்துக்குப் பணம் தருகிறேன்" என்று வாக்குக் கொடுத்தார்.

இந்த ஏற்பாடடுக்குப் பாகன் ஒப்புக் கொண்டான். அத்துடன் "நானும் ரொம்பப்பருமனாக இருக்கிறேன். நீங்கள் தயாரிக்கப் போகும் மருந்தில் எனக்கும் கொஞ்சம் கொடுங்கள். நானும் கொஞ்சம் இளைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான் யானைப் பாகன்.



வேடிக்கை விளையாட்டு





இந்த இரண்டு நீளக் கோடுகளில் எது சிறிது? எது பெரிது? கண்டுபிடி.





ஒருவனிடம் 19 பசுக்கள் இருக்கின்றன. அவனுக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவனுக்கு மொத்தப் பசுக்களில் பாதியும், இரண்டாவது மகனுக்குக் கால் பாகமும், இளையவனுக்கு ஐந்தில் ஒரு பங்கும் பங்கு போட்டுக் கொடுக்கிறான். இது எப்படி? ஒரு பசுவையும் கொல்லக் கூடாது.



பக்கத்தில் ஓடுவது ஒரு மின்சார ரயில். இதில் உள்ளதவறு என்ன?




Parry's
பாரி கம்பெனியார்
மோதிரம் போன்ற மிட்டாய்களை
இப்பொழுது
வழங்குகிறார்கள்
PARRY'S SWEETS
பிக்னிக் ரிங்ஸ்
பெப்பர்மின்ட் ரிங்ஸ்
பட்டர்ஸ்காச் ரிங்ஸ்
குஷியான மூன்று ரகங்களில் கிடைக்கின்றன
Parry's


குளிர்ந்த
காற்று
HINDUSTAN
ஹிந்துஸ்தான் விசிறி
அக்மி மானுபாக்சரிங்
கம்பெனி லிட்., அன்டாப்
ஹில், வடலா, பம்பாய்-31
சென்னை, ஆந்திர ஏஜண்டுகள்:
மெஸர்ஸ். போம்ரா பிரதர்ஸ்
போம்ரா நிலையம், தங்கசாலை தெரு, சென்னை

ஒரு சீனக் கதை

பேரழகி ஜின்

வீயும், செங்கும் சீனாவின் பழைய அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் உறவினர்கள். செங் இராணுவக் கல்லூரியில் வாசித்துக் கொண்டிருந்தான். குடிப்பழக்கமும் பெண்ணாசையும் உள்ளவன்.

வீ பெரிய பணக்காரன். இருவரும் எப்போதும் இணைபிரியாமல் நெருங்கிய நண்பர்களாயிருந்து வந்தனர்.

ஒரு நாள் செங் தன் நண்பன் வீயைப் பிரிந்து ஒரு சாலை வழியாகக் குதிரை மேல் போய்க் கொண்டிருந்தான். வெண்மையான மெல்லிய ஆடை அணிந்த அழகிய பெண் ஒருத்தி எதிர்ப்பட்டாள். அவளோடு இன்னும் இரு பெண்களும் இருந்தனர். செங் அவள் அழகில் லயித்தான். அந்த இடத்தை விட்டு மேலே போக முடியாமல் அங்கேயே சுற்றிச் சுற்றி வந்தான்.

அந்தச் சீனப் பேரழகி அவனைத் தன் கடைக் கண்களால் பார்த்தாள். அப்புறம் தான் செங்கிற்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது.

"உன்னைப் போன்ற அழகிகள் ஏன் நடந்து போக வேண்டும்?" என்று பேச்சுக் கொடுத்தான்.

அந்த வெள்ளை உடை அழகி புன்சிரிப்புடன், "என்ன செய்யலாம்? குதிரைமீது செல்கிறவர்களின் தயவு இருந்தால் நாங்கள் நடக்க வேண்டியதில்லை" என்றாள்.

"உங்களைப் போன்ற அழகிகள் சவாரி செய்யக் கூடிய அத்தகைய உயர்ந்த ஜாதிக் குதிரை இல்லை இது. இருந்தாலும் நீங்கள் இதன் மீது ஏறிக் கொள்ளுங்கள். நான் பின்னோடு நடந்து வருகிறேன்" என்று கூறினான் செங்.

எல்லோரும் சிரித்துப் பேசிக் கொண்டே அந்தப் பேரழகியின் மாளிகையை அடைந்தார்கள். அப்போது அஸ்தமித்து இருட்டாகி விட்ட நேரம்.

செங்கைச் சற்று வெளியே நிற்கும்படி சொல்லி விட்டு வெள்ளை உடை அழகி மாளிகைக்குள் சென்றாள். சிறிது நேரம் கழித்துச் செங்கை உள்ளே வரும்படி அழைத்தாள். இதற்குள் அந்தப் பேரழகி வேறு உடையில் காட்சி அளித்தாள். அவள் பெயர் ஜின் என்பதை அறிந்து கொண்டான் செங்.

இரவு வெகு நேரம் வரையில் செங்கும் ஜின்னும் பானங்கள் பருகியும் சந்தோஷமாகப் பேசியும் பொழுதைப் போக்கினார்கள். ஜின்னின் நடை உடை பாவனைகள் செங்கை ஆகர்ஷித்து மயக்கின.

பொழுது புலரும் நேரமானதும் செங்கை மாளிகையை விட்டுப் போய் விடும்படி கூறினாள் ஜின். செங் திகைத்தான்.

"என் சகோதரர் ராஜ சபையில் ஆஸ்தான சங்கீத வித்வான். அவர் வரும் நேரமாகிறது. தங்களை அவர் பார்க்க வேண்டாம். இன்னொரு சமயம் நாம் சந்திக்கலாம்" என்று கூறி அனுப்பினாள்.

செங் தெருக்கோடியில் இருந்த ஒரு கடையில் போய் அந்தக் கடைக்காரனிடம் அம் மாளிகையைச் சுட்டிக் காட்டி, "அது யாருடைய மாளிகை?" என்று விசாரித்தான்.

கடைக்காரன் "அது ஒரு பாழடைந்த இடமல்லவா? அங்கே மாளிகையே கிடையாதே" என்றான்.

"இல்லை; பெரிய மாளிகை ஒன்று இருக்கிறது. நான் இரவு அங்கேதான் தங்கி இருந்தேன்" என்றான் செங்.



கடைக்காரன், "ஓகோ, நீயும் அங்கே அகப்பட்டுக் கொண்டாயா? இப்போது புரிந்து விட்டது. அங்கே ஒரு நரி தேவதை இருக்கிறது. அது மனிதர்களை மயக்கி இரவில் அங்கே அழைத்துக் கொண்டு போய் விடும்" என்றான்.

வெளிச்சத்தில் சென்று பார்த்தபோது கடைக்காரன் சொன்னது உண்மை என்பது புலனாயிற்று.

செங் பெரும் ஏமாற்றத்துக்குள்ளானான். அந்தப் பேரழகியை அவனால் மறக்க முடியவில்லை. கனவிலும் நனவிலும் மீண்டும் மீண்டும் அவள் தோன்றி இன்ப வேதனையை அளித்தாள்.

பதினைந்து தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் அந்த அழகியைக் கடைத் தெருவில் ஒரு துணிக் கடையில் சந்திக்கும் பாக்கியம் கிட்டியது செங்கிற்கு. ஜின்னுடன் அவளுடைய தாதிகளும் இருந்தனர். 'ஜின்! ஜின்!' என்று அழைத்தான் செங். ஜின் அவன் பார்வையிலிருந்து தப்பித்துக் கொண்டு நழுவி விட முயன்றாள். செங் அவளைப் பின் தொடர்ந்து சென்றான்.

ஜின் சித்திர விசிறியால் தன்னை மறைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்தபடி, "நான் யார் என்பது தெரிந்த பிறகும் ஏன் என்னைத் தொடர்ந்து வருகிறீர்கள்? தங்களைப் பார்க்கவே எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்றாள்.

"உன்னை என்னால் மறக்கவே முடியாது. உன்னை நான் விடப்போவதில்லை" என்றான் செங்.

"தாங்கள் இப்போது என்னை வெறுப்பீர்களோ என்று அஞ்சுகிறேன்."

"உன்னை ஒரு போதும் நான் வெறுக்க மாட்டேன். இது சத்தியம்" என்றான் செங்.

பேரழகி ஜின் விசிறியை அப்பால் எடுத்துத் தன் எழில் மிகுந்த ஒளி வீசும் முக மண்டலத்தைப் புன்சிரிப்போடு காட்டினாள்.

"நரி தேவதைகளை மனிதர்கள் வெறுக்கிறார்கள். காரணம், மனிதர்களை அத்தேவதைகள் துன்புறுத்துகின்றன என்பது தான். ஆனால் நான் அத்தகைய கொடிய தேவதை அல்ல. தாங்கள் என்னிடம் அன்பாக இருந்தால் நானும் என் வாழ்நாள் முழுதும் தங்களுக்கே உரியவளாயிருப்பேன்" என்றாள் ஜின்.

பிறகு இருவரும் சேர்ந்து வாழ்வதென்று முடிவு செய்தார்கள்.

செங் தன் நண்பன் வீயிடம் சென்று, "நான் ஒரு பேரழகியுடன் சேர்ந்து வாழ முடிவு செய்திருக்கிறேன். அதற்கு உன் உதவி தேவை" என்றான்.

வீ, "அழகியா? குரூபியா?" என்று ஏளனமாகச் சிரித்து விட்டு செங்கிற்கு வேண்டிய உதவிகளையும் செய்தான்.

வீயின் வேலைக்காரன் அந்தப் பேரழகியைப் பார்த்துவிட்டு வந்து எஜமானனிடம், "இத்தகைய ஓர் அழகியை நான் இதற்கு முன் கண்டதேயில்லை" என்று வர்ணித்தான்.

"செங்கின் சொந்த மனைவியைக் காட்டிலும் அழகானவளா அவள்?" என்று கேட்டான் வீ.

"அந்தப் பேரழகியுடன் யாரையுமே ஒப்பிட முடியாது" என்று ஒரே போடாய்ப் போட்டான் வேலைக்காரன்.

வீ அந்தப் பேரழகியைக் காணப் புறப்பட்டுச் சென்றான். அந்த அழகியின் வீட்டில் அப்போது ஒருவரும் இல்லை. செங் வெளியே போயிருந்தான். தாதி மட்டும் இருந்தாள். வீ அந்த வீடு முழுவதும் அறை அறையாகச் சுற்றிப் பார்த்தான். தாதி 'வீட்டில் யாருமே இல்லை' என்றாள். வீயைக் கண்டதும் அழகி ஜின் ஒரு திரை மறைவில் பதுங்கிக் கொண்டாள். வீ அவளைத் தற்செயலாகக் கண்டு விட்டான்.

அவளுடைய எழில் மிக்க தோற்றம் வீயைக் காந்த சக்திபோல் கவர்ந்தது.


வீ அவள் பட்டாடையைப் பற்றி இழுத்தான். அவளை நெருக்கத்தில் பார்த்த போது அவள் அழகு பன்மடங்கு பிரகாசித்தது. அவள் முகம் துக்கத்தால் சிவந்தது.

"ஏன் அழுகிறாய்?" என்றான் வீ.

"செங்கை நினைத்துத் தான். அவர் ஓர் ஆண் பிள்ளை அல்லவா? அவரால் ஒரு பெண்ணைக் காப்பாற்ற முடியவில்லையே!




இப்போது இந்தியாவில் உங்களுக்கு கிடைக்கிறது!
பாமாலிவ்
டால்கம் டீ-லக்ஸ்
நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த டால்கம் பவுடர்! உண்மையிலேயே நேர்த்தியான டால்கின் சகலகுணங்களுடன், ஒரு புதியரம்மிய வாசனையும்சேர்ந்தது! வெறியூட்டும் 17 ஸெண்டுகளின் அற்புதக்கலவைசேர்ந்த பாமாலிவ் டால்கம் டீ-லக்ஸின் நறுமணம் உங்களை மகிழ்வித்து புளகாங்கிதம் அடையச் செய்யும் ... மணிக் கணக்காக உங்களுக்குக் குளுமை யும் புத்துணர்ச்சியும் அளிக்கும்!
அன்னையில் சுத்தமும் சௌகர்யமும்
குழந்தைக்கு இதம் அளிக்க அதைத் தாராளமாகப் பூசுங்கள்
எரிச்சலைத்தடுக்க மேலெங்கும் அதை உபயோகியுங்கள்
சோர்ந்த பாதங்களுக்கு இதமும் புத்துணர்ச் சியும் அளிக்க
PALMOLIVE
Talcum Powder
DE LUXE
பாமாலிவ்
டால்கம் டீ—லக்ஸ்



ஆயிரத்து ஒன்று உபயோகங்கள் கொண்ட காபினெட்
இந்த ஆல்வின் காபினெட் எத்தனை விதங்களில் உதவும் என்பதை உங்களுக்கு உங்கள் சொந்த கற்பனாசக்திதான் விளக்க முடியும்! நாங்கள் சொல்வதெல்லாம் இந்த காபினெட் உறுதியானது, பூச்சி, புழு நெருங்க முடியாதது, அந்தஸ்து மிக்க பார்வையுடன் கூடியது என்பது தான். ஷெல்புகளுடனும் தனித்தனி அறைகளாகவும், பூட்டு, கண்ணாடி கதவுகளுடனும் சப்ளை செய்ய முடியும்.
அளவு: 78"x36"x19"
தேவை போல் மாற்றக்கூடிய நான்கு ஷெல்புகளுடன் ரூ 210/-
ஆல்வின்
யூடிலிடி
காபினெட்டுகள்
மிகவும் கவனித்து தயாரிக்கப்பட்டிருப்பதால் இந்த காபினெட்டுகள் ஸ்டேஷனரி சாமான்கள், தஸ்தாவேஜுகள், பைல்கள், புஸ்தகங்கள், ஆயுதங்கள், டவல்ஸ், லினன், பருத்தித் துணிகள், மற்றும் பலவித சாமான்கள் வைத்துக் கொள்வதற்கு மிக்க உகந்தது. யாதொரு ஆயுதமும் உபயோகிக்காமல் ஷெல்புகளை 2 அங்குலம் இடைவெளியுடன் அமைத்துக் கொள்ள சௌகரியமிருப்பதால் இந்த காபினெட்டின் மதிப்பு ஒருபடி உயர்ந்திருக்கிறது.
ஹைதராபாத்
ஆல்வின்
மெடல் ஒர்க்ஸ் லிமிடெட்
சென்னை, திருவாங்கூர்-கொச்சின் & ஆந்திர ராஜ்யத்திற்கு ஏஜண்டுகள்:
மெஸர்ஸ். அடிஸன் & கோ., பிரைவேட் லிமிடெட்
158, மவுண்ட் ரோடு, சென்னை-2
எல்லா முக்கிய நகரங்களுக்கும் டீலர்கள் கூர்க் & மைசூர் ராஜ்யத்திற்கும் ஏஜண்டுகள்:
மெஸர்ஸ். அடிஸன் & கோ., பிரைவேட் லிமிடெட்
செயின்ட் மார்க்ஸ் ரோடு, பெங்களூர்

தாங்களோ பெரிய பணக்காரர். தங்களைச் சுற்றிப் பல பெண்மணிகள் இருப்பார்கள். செங் ஓர் ஏழை. அவருக்கு என்னைத் தவிர வேறு யாருமில்லை. அவரும் நானும் தங்கள் உதவியால் வாழ்பவர்கள். எங்களுக்குத் தாங்கள் தீங்கு செய்யலாமா?" என்று மிகுந்த துக்கத்துடன் கேட்டான்.

வீயின் மனம் இளகி விட்டது. ஜின் கூறிய மொழிகளில் உள்ள நியாயம் அவன் உள்ளத்தைத் தைத்தது. ஜின்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு போய்விட்டான்.

ஒரு சமயம் ஜின் தன்னுடைய பழைய ஆடைகள் யாவும் கிழிந்து விட்டதால் தனக்குப் புதிய ஜாக்கெட்டுகளும், கவுன்களும் வேண்டுமென்று வீயிடம் கேட்டான். வீ அவனைக் கடைத் தெருவுக்கு அழைத்துச் சென்று விலையுயர்ந்த பட்டுத் துணிகளை வாங்கினான். ஜின் தனக்குத் துணிகள் வேண்டாமென்றும், ஏற்கனவே தைத்து வைத்துள்ள 'ரெடிமேட்' ஆடைகளே வேண்டு மென்றும் வற்புறுத்தினான். ஜின் ரெடிமேட் ஆடைகளாகவே கேட்பதின் மர்மம் என்னவென்று வீக்குப் புரியவில்லை. ஆனாலும் அவன் இஷ்டப்படியே வாங்கித் தந்தான்.

ஒரு வருஷம் கழிந்தது. ஜின்னின் கணவன் செங்கிற்கு இராணுவ முகாமில் வேலை ஆயிற்று. முகாமுக்குத் தன்னுடன் ஜின்னையும் அழைத்துச் செல்ல விரும்பினான் செங். ஆனால் ஜின் அதற்குச் சம்மதிக்க வில்லை.

செங் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான். அவன் ஒரே பிடிவாதமாக மறுத்து விட்டான். ஜின்னைக் கணவனுடன் போகும்படி வீயும் சொல்லிப் பார்த்தான். ஒன்றும் நடக்கவில்லை.

"இந்த வருஷம் மேற்குத் திசையில் நான் பிரயாணம் செய்யக் கூடாது என்று ஜோஸியர் சொல்லி யிருக்கிறார். மீறிப் போனால் கெடுதி ஏற்படுமாம். அதனால்தான் போக மறுக்கிறேன்" என்றான் ஜின்.

"சேச்சே! இதெல்லாம் சுத்த அபத்தம். நீ புறப்படு" என்றனர் இருவரும்.

ஜின் வேறு வழியின்றிப் புறப்பட்டான்.

செங்கும் ஜின்னும் ஏறிச் செல்ல வீ இரண்டு குதிரைகள் கொடுத்து உதவினான். இருவரும் புறப்பட்டார்கள். செங் பின்னால் செல்ல ஜின் முன்னால் போனான்.

வழியில் சில வேட்டைக்காரர்கள் தங்கள் வேட்டை நாய்களைப் பழக்கிக் கொண்டிருந்தார்கள். ஜின்னைக் கண்டதும் அந்த வேட்டை நாய்கள் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தன. ஜின் குதிரை மீதிருந்து கீழே குதித்து நரியாக மாறி ஓட்டம் பிடித்தான். வேட்டை நாய்கள் அந்த நரியை வெகு தூரம் துரத்தின.

செங் நாய்களைத் துரத்திச் சென்று தடுக்க முயன்றான். ஆயினும் நாய்கள் நரியைப் பிடித்துக் கொன்று விட்டன.

செங் கண்ணீர் விட்டுக் கதறினான். ஜின்னின் அந்திமக் கிரியைகளை அங்கேயே நடத்திவிட்டு அந்த இடத்தில் அவன் ஞாபகார்த்தமாக ஒரு குச்சியை நட்டு விட்டுத் திரும்பிச் சென்றான்.

ஜின்னின் பட்டுத் துணிகளும், அணிகளும் கீழே சிதறிக் கிடந்தன.

சில தினங்களுக்குப் பிறகு செங் ஊர் திரும்பினான்.

"ஜின் சௌக்கியமா?" என்று விசாரித்தான் வீ.

"அவன் இறந்து விட்டான்" என்றான் செங் துக்கத்துடன்.

வீ ஆச்சரியத்துடன், "எப்படி இறந்தான். நம்ப முடியவில்லையே?" என்றான்.

"வேட்டை நாய்கள் அவனைக் கொன்று விட்டன. அவன் ஒரு நரி தேவதை!" என்றான் செங்.

"கல்கி" ஜூன் மாதச் சிறுகதைப் போட்டி

பரிசு ரூபாய் நூறு

மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லாரும் கலந்து கொள்ளலாம். தமிழ் நாட்டின் சூழ்நிலையை வைத்துச் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். கதைகள் "கல்கி"யில் ஆறு பக்கத்திலிருந்து எட்டுப் பக்கத்துக்குள் வரும்படி இருக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும். முந்திய மாதப் பரிசுக் கதை அடுத்த மாதம் மூன்றாவது வாரத்தில் வெளியாகும். பிரசுரத்துக்குத் தகுதியுள்ள மற்றக் கதைகளும் "கல்கி"யில் பிரசுரமாகும்.

கதைகள் அந்தந்த மாதம் 20ம் தேதிக்குள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்து சேர்ந்துவிட வேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் கதைகளைத் திருப்பி அனுப்ப இயலாது. கதைகளுடன் தபால் பில்லைகள் வைத்து அனுப்ப வேண்டியதில்லை. எனவே, அவரவர் தங்கள் தங்கள் கதைகளுக்கு நகல் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

தேவியின் கடிதம்


வீட்டைக் காக்கும் கலை

வசுமதி ராமசாமி

அன்புமிக்க சுஜாதா,

'புருஷர்கள் வீட்டை அலங்கோலமாக வைத்தால் அதிகக் கஷ்டமா? பெண்கள் வைத்தால் அதிகக் கஷ்டமா?' எனக் கேட்டிருக்கிறாய்! இரண்டுமே கஷ்டம்தான்.

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் ஒரு மாதம் நான் பிறந்தகம் போயிருந்தது உனக்குத் தெரியுமே. ஊரிலிருந்து திரும்பி வரும் தினத்தன்று என்னையும், குழந்தைகளையும் வரவேற்க என் கணவர் ரயிலடிக்கே வந்திருந்தார். நான் வருகிறேன் என்பதற்காக வீட்டைச் சுத்தம் செய்து வைத்திருப்பதாக வீட்டுக்கு வந்ததும், என் கணவர் சொன்னார். எனக்கும் அது பெருமையாகத்தான் இருந்தது. திடீரென்று குழந்தை ராஜு மாடியிலிருந்து பெரிதாக அழுதான். ஓடிப்போய்ப் பார்த்தேன். கையைப் பிளேடினால் அறுத்துக் கொண்டு வீறிட்டு அழுது கொண்டிருந்தான். அவன் கையில் ரத்தம் கசிந்த வண்ணமாக இருந்தது.



நான் ஊருக்குப்போகு முன் இருந்த உடுப்புக்களோடு பீரோவில் இருந்த துணி மணிகளையும் கோட் ஸ்டாண்டு சுமந்து கொண்டு பரிதாபகரமாக நின்றது. அவைகளை எடுத்து அழுக்குக் கூடையில் போட்டு விட்டு வந்தேன். மேஜைமேல் குப்பல் குப்பலாகக் கடிதங்கள் கிடந்தன. அவற்றில் சில நான் எழுதியவை. என் அருமையான கடிதங்களைக் கார்ப்பரேஷன் எலக்ட்ரிக் நோட்டீஸ்களுடனும், வீட்டு வரி நோட்டீஸ்களுடனும் போட்டிருந்தால் எனக்கு அழுகை வராதா?

மேஜையின் மேலுள்ள விளக்கில் விளக்குப் பூச்சிகள் நிறைய விழுந்து மடிந்து நிழலைக் கொடுக்கக்கூடிய அளவில் இருந்தன. இரண்டு காலி மசிப் புட்டிகள் உடைந்து கிடந்தன. தானாக ஸ்டௌவில் காப்பி போட்டுச் சாப்பிட்ட லக்ஷணம் காடா கருகி அடைத்திருந்தது. அதைச் சுத்தமாக்கலாமென்று கத்தியை எடுத்தால் இரண்டு நாளைக்கு முன் மாம்பழம் நறுக்கின கத்தி! பிசு பிசுவென்று எறும்பு பிடுங்கியது. பஞ்சாங்கம், ரயில்வே அட்டவணை, டார்ச் லைட், ஸ்குரூட்ரைவர், பென்ஸில், பேனா எல்லாமே அஞ்ஞாத வாசம் செய்தன. இவற்றைப் பார்த்த பொழுது, ஊருக்குப் போகாமலே இருந்திருக்கலாமோ என்று கூடத் தோன்றியது.

பெண்கள் வீட்டை அலங்கோலமாக வைத்துக் கொண்டால் இன்னும் ஆபத்து. என் தோழியையே சொல்கிறேன். அவள் படித்த பெண்தான். தில்லியில் லேடி இர்வின் கல்லூரியில் குடும்ப நிர்வாகக் கலையைச் சிறப்புப் பாடமாகப் படித்துத் தேர்ச்சி பெற்றவள்தான். வீட்டில் எதை முன்னால் செய்வது, எதைப் பின்னால் செய்வதென்ற தவிப்பு. கறி நறுக்கக் கத்தியை எடுத்து வைத்துக் கொள்வாள். கறிகாய் நறுக்குவதற்குள் கணவனுக்கு வெந்நீர் விளாவ ஓடுவாள். அதற்குள் குழந்தை கையை வெட்டிக் கொண்டு 'குய்யோ, முறையோ' என்று பலமாகக் கத்திக் கொண்டிருப்பான். அவனுக்கு ஆறுதல் சொல்லிச் சமாதானம் செய்வதற்குள் பால் பொங்கி மேலே வழிந்து விடும். வேலைக்காரி சுத்தம் செய்ய வேண்டிய பாத்திரங்களைக் கேட்பாள். பெரிய பெண் பள்ளிக்கூடத்துக்கு நாழியாகிறதென்று தொந்தரவு செய்வாள். இப்படிக் காலை மாலை அமர்க்களப் படும்போது என் தோழிக்கு அழுகையே வந்துவிடும். சாவியைத் தேடிக்கொண்டு அலைவது, ஸ்பூனுக்கு வீட்டைப் பிரதட்சணம் செய்வது — இப்படியெல்லாம் அவகாசத்தை வீணாக்கிக் கொண்டு அவள் தவிப்பதைப் பார்த்திருக்கிறோம்.

அற்ப விஷயமானாலும் நம்மால் கூடுமான அளவு ஒழுங்காகவும், நிதானமாகவும் செய்யும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளலாமல்லவா? எதற்கெடுத்தாலும் தவிப்பு, வேண்டாததற்கெல்லாம் வீண் படபடப்பு இவைகள் சாரமின்றிப் பொன்னான நாட்களை இரும்பாக்கி விடுகின்றன.

பெண்களாகிய நாம் வீட்டை நன்றாக வைத்துக் கொள்ள முற்பட்டால் குழந்தைகளுக்குத் தனியாகக் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்குப் பழக்கத்தில்தானே வந்து விடும்.—**பூமாதேவி**

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam

எவ்வளவு தூய்மையானது பாருங்கள்!



பியர்ஸ் சோப்புக் கட்டியை வெளிச்சத்துக்கு எதிரே பிடித்துப் பாருங்கள்— நேரடியாக அதன் மூலம் உங்களால் ஊடுருவி நோக்க முடியும்!

ஆம், பியர்ஸ் தூய்மை என்றால் அதுதான்! பச்சிளங் குழந்தையின் மென்மையான சருமத்துக்கும் பரிபூரணமான பாதுகாப்புத் தரும் அளவுக்கு பியர்ஸ் அவ்வளவு தூய்மையும் மென்மையும் கொண்டது!

எவ்வளவு நல்லதென்று உணருங்கள்!



பியர்ஸ் சோப் உங்கள் சருமத்துக்கு நல்லது. அசல், க்ளிஸரின் அடங்கிய இந்த அழகு தரும் சோப் சருமத்தைப் பல்லாண்டுகள் மிருதுவான எழிலுடன் வைத்திருக்கிறது. பியர்ஸ் சோப்பைத் தவறாமல் உபயோகிக்கத் தொடங்குங்கள்.



பியர்ஸ் சோப்

அசல், க்ளிஸரின்
அடங்கிய, அழகு தரும் சோப்

லண்டனிலுள்ள ஏ & எப். பியர்ஸ் லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது. TG. 85-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon